# தென்திருமலை தேசம்

## பாகம் - 3



அ.ஸதீஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்திருமலை தேசம்

## பாகம் - 3

**(கல்வி, கலை, இலக்கிய, அரசியல் சுருக்க வரலாறு)**

## அருமைநாதன் ஸதீஸ்குமார்

வெளியீடு :

சம்பூர் தமிழ்க் கலாமன்றம்

2019


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தென்திருமலை தேசம் – பாகம் 3 |
| வகை | : | வரலாற்று ஆய்வு |
| நூலாசிரியர் | : | அருமைநாதன் ஸதீஸ்குமார்<br>சம்பூர் – 04<br>திருகோணமலை |
| பக்கங்கள் | : | xiv + 116 |
| அச்சுப்பதிப்பு | : | பென் விஷன் அச்சகம், திருக்கோணமலை |
| முதற்பதிப்பு | : | 2019 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | சம்பூர் தமிழ்க் கலாமன்றம், சம்பூர், மூதூர்,<br>திருகோணமலை |

| | | |
|---|---|---|
| Book Name | : | Thenthirumalai Thesam - 3 |
| Author | : | Arumainathan Satheeskumar<br>Sampoor - 4<br>Trincomalee |
| Pages | : | xiv + 115 |
| Printers | : | Ben Vision Printers & Publication<br>87, Main Street, Trincomalee<br>0769000035 / 0262225985 |
| First Edition | : | 2019 |
| Copy Rights | : | Author |
| Publisher | : | Sampur Thamizhkala Mantram, Sampur |
| ISBN | : | 978-955-44703-3-0 |
| Price | : | Rs. 300/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்!



## திரு. சண்முகம் அருளானந்தம்

(கேணிப்பித்தன்)

திருகோணமலை ஆலங்கேணியை பிறப்பிடமாகக்
கொண்ட முதுபெரும் இலக்கியவாதியும்
80 நூல்களைப் படைத்தவரும் 15 நூல்களுக்கு
மாகாண இலக்கிய விருதையும் 06 நூல்களுக்கு
அரச சாகித்திய மண்டல விருதையும் பெற்று
இன்று வரை எழுதிக் கொண்டிருக்கும்
83 வயதுடைய என் இலக்கிய நண்பனை
பெருமையுடன் மனதில்
நிறுத்தியவனாக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


# 1

பக்கம்

**கொட்டியாபுரப்பற்று கலை இலக்கியங்கள்** -------------------- 01

1.1 அண்ணாவிமார்கள் – கூத்து, விலாசம், நாடகம்

1.1.1 இலக்கிய மன்றங்கள்

1.2 காவியங்கள், புராணங்கள்

1.3 மூதூரின் முதல் நூல் வெளியீட்டு விழா

1.4 மூதூர் முத்தமிழ் விழா

# 2

**கொட்டியாபுரப்பற்று இலக்கியவாதிகள்** ----------------------- 27

# 3

**கொட்டியாபுரப்பற்று அரசியல் பிரதிநிதித்துவங்கள்** ---------- 57

3.1 பாராளுமன்ற பொதுத்தேர்தல்கள்

3.2 மாகாணசபைத் தேர்தல்கள்

3.3 கொட்டியாபுரப்பற்று அரச நிர்வாக சபைகள்

3.3.1 கிராமசபை

3.3.2–5 உள்ளூராட்சி மன்றத்தேர்தல்கள்

# 4

**கொட்டியாபுரப்பற்று பாடசாலைகள்** --------------------------- 85


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஒரு இனத்தின் அடையாளமாகவும் வாழ்வியல் கூறுகளை சிறப்பாகக் கொண்டதாகவும் மொழி விளங்குகின்றது. இற்றைக்கு 2000 வருடங்களுக்கு மேற்பட்ட தொன்மை வரலாற்றுப் பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்ட தனித்துவமான பிரதேசமாக மூதூர் பிரதேசம் கோடிட்டுக் காட்டப்படுகின்றது. சோழர் ஆட்சிக்காலமாயினும் அதன் பின்னர் குறிப்பிடப்படும் காலனித்துவ ஆட்சியின் பின்பும் கூட இப்பிரதேச மக்களின் வாழ்வியல், இலக்கியப் பாரம்பரியம் மகோன்னத இடத்தில் இருந்து வந்ததைக் கண்டுகொள்ளலாம்.

மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார் அவர்கள் "தென்திருமலை தேசம்" என்னும் நூலின் மூலமாக முன்னர் கொட்டியாபுரப்பற்று என அழைக்கப்பட்டு பிற்காலத்தில் மொதர என்று ஒல்லாந்தர் குறிப்பிட்ட மூதூர் பிரதேசத்தின் தொன்மங்கள் மற்றும் இலக்கிய முயற்சிகள் தெளிவு படுத்தப்பட்டுள்ளன.

சோழர் காலத்தில் உற்பத்தியான காவிய மரபானது மூதூரில் தமிழர், முஸ்லீம்கள் என்ற பேதமின்றி மழைக்காவியம், கங்கைக்காவியம், குட்டிக்காளிகாவியம், குறிஞ்சாமுனைக்காவியம், புகாரிகாவியம், வெருகல்கோவில் களவுகாவியம், பட்டோலைக்காவியம், சம்பூர் பத்திரகாளியம்மன் காவியம் என்பன தோற்றம் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

ஆரம்ப காலங்களில் இருந்து ஒன்றாகக் கூடி வாழ்ந்த மனிதக் குழுமங்கள் இயற்கையாகவும், மனித நடவடிக்கைகள் காரணமாகவும் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்தது. கொள்ளைநோய்களும் காரணமாக அமைந்து மனிதப் பரம்பலை மாற்றியதாக அறியமுடிகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய நாடக மரபுகள் மூதூர் பிரதேசத்தில் பரப்பப்பட்ட செய்தியையும் இந்நூல் மூலமாக அறியமுடிகிறது.

மூதூர் இலக்கிய வளர்ச்சியின் திசைதிருப்பியாக வ.அ.இராசரெத்தினம் விளங்குகின்றார். இவருடைய இலக்கிய வருகையானது மூதூர் பிரதேசத்துக்கு புதிய அடையாளத்தைப் பெற்றுக்கொடுத்தது. நூல் அறிமுக விழா, முத்தமிழ் விழா போன்ற விழாக்கள் சர்வமத சங்கமத்தை ஏற்படுத்தியது எனலாம்.

ஈழத்தின் இலக்கியப் பிதாமக்களில் ஒருவராக விளங்கும் இலங்கையர்கோன் மூதூரில் கடமை புரிந்தமை இலக்கிய வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியது.

இந்நூலில் மறைந்து கிடந்த இலக்கிய கர்த்தாக்கள் பேசப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய முயற்சி புதிய இலக்கிய கர்த்தாக்களை பிரசவித்து எதிர்காலத்தை வளப்படுத்தும் என நம்பலாம்.

அரசியல் என்பது மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. இதனை மனித நடவடிக்கையிலிருந்து பிரித்தெறிய முடியாது. மூதூர் அரசியல் வரலாறென்பது அமரர்.அ. தங்கத்துரை, மர்ஹூம்ஏ.எல்.ஏ. அப்துல் மஜீத் போன்றவர்களால் பெருமையும் சிறப்பும் பெறுகின்றது. வெவ்வேறு பாசறைகளில் இருவரும் வளர்ந்த போதும் மூதூர் பிரதேச வளர்ச்சிக்காய் இருவரும் ஒரே நேர்கோட்டில் தான் தமது பயணங்களை மேற்கொண்டனர் என்பதனை இப்பிரதேச மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர். இருவருடைய மரணங்களும் இப்பிரதேச வளர்ச்சியில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி நிற்கின்றது.

மூதூர் - திருமலை இயந்திர படகு சேவை நிறுத்தப்பட்டு புதிய பாலங்கள் மூலம் மூதூர் பிரதேசம் இணைக்கப்பட்டமை இப்பிரதேச மக்கள் பெற்றுக்கொண்ட பெரும் வரப்பிரசாதமாகும். இத்தகைய மாற்றங்கள் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியிலும் பொருளாதார நடவடிக்கைகளிலும் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தியிருப்பது வியப்புக்குரியதே.

மூதூர் பிரதேச கல்வி வளர்ச்சியில் பாடசாலைகள் பெரும் தாக்கம் செலுத்தியுள்ளதை காணலாம். கல்வி வளர்ச்சி இன்று சீராக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றமையும் கல்வியின் தரம் அதிகரித்திருப்பதும் பாரிய முன்னேற்றங்களே. பரஸ்பரம் புரிந்துணர்வோடு இனங்கள் வாழவேண்டியமை காலத்தின் கட்டாயமாகும். இன்னும் பல தேடல்கள் இடம்பெற புதியவர்கள் தம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார் அவர்களின் ஆய்வு முயற்சிகள் தொடரவேண்டுமென முழு மனதோடு வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

கவிஞர் சம்பூர் யோகானந்தன்
(அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

தொன்மை வாய்ந்ததும் சரித்திர முக்கியத்துவம் கொண்டதுமான மூதூர் பிராந்தியத்தையும் அங்கு வாழும் பல்லின மக்களின் இலக்கிய முயற்சிகளையும், அரசியல், கல்வி போன்ற பல்வேறு வரலாற்றுத் தடங்களையும் வெளிப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

வரலாற்றினை சரியாகப் பதிவு செய்து வைக்காத சமுதாயம் தனது சுயத்தினை இழந்து விடுவதாகக் கூறப்படுகின்றது. அந்தவகையில் தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் அங்கு வாழும் மக்களையும் நேசிக்கும் டாக்டர் ஸதீஸ்குமார் அவர்கள் சுவாரசியமான முறையில் பல்வேறு ஆதாரங்களோடும், பொதுத் தன்மையோடும், நடுவு நிலையில் நின்று அவதானித்த விடயங்களை ஒரு எழுத்தாளனுக்குள்ள சமூகப் பொறுப்புடன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

சமயம், வரலாறு, மீள்குடியேற்றம் எனப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ள டாக்டர் ஸதீஸ்குமார் அவர்களின் இந்நூலினைப் பெற்று, அவருக்கு முன்பு நாம் கொடுத்த வரவேற்பினை கொடுக்க முன்வர வேண்டுமென பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

கலாபூசணம் ஏ.எஸ். உபைத்துல்லா,<br>
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

வரலாற்று ஆவணப்படுத்தல் என்பது ஓர் இனத்தினுடையதோ அல்லது குறிப்பிட்ட பிரதேசம் தொடர்பான கடந்த கால நிகழ்வுகளை எதிர்காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் எடுத்துச்செல்லும் ஓர் வழிவகையாகும். வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் எமது நிலத்தின் தொன்மையின் மீதான திரிபுகளை மறுதலிக்கும் வரலாற்று ஆய்வுகளையும் ஆய்வாளர்களையும் தேட எத்தனிக்கும் போது இவ்விடயத்தில் நமது பிரதேசம் கடும் பஞ்சத்திற்கு உட்பட்டிருப்பதாகவே உணர முடிகிறது.

இந்நிலையில் மிகவும் நெடிய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட கொட்டியாபுரப்பற்று என்று சொல்லப்படுகின்ற திருகோணமலையின் தென்பகுதியின் வரலாற்றுக் காலம் முதற் கொண்டு கடந்த 2015ம் ஆண்டு வரையான வரலாற்றுக் குறிப்புகளையும் எச்சங்களையும் தேடி அறிந்து ஆவணப்படுத்தும் காத்திரமிக்க பணியில் ஈடுபட்டுவரும் மருத்துவக் கலாநிதி சம்பூர் சதீஸ்குமார் அவர்களின் பணி போற்றுதற்குரியது.

கடந்த கால வரலாற்றுத் தேடல்களில் நம்மால் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் கற்றுத்தந்த பாடங்களின் அடிப்படையில் நிகழ்வுகள் யாவும் நிகழ்காலத்திலேயே பதியப்பட வேண்டும் எனும் நோக்கில் "தென்திருமலை தேசம் பாகம் - 3" என்கின்ற இந்நூல் கொட்டியாபுரப் பெருநிலப் பரப்பில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கும் இலக்கியவாதிகள், அரசியல் ஆளுமைகள் மற்றும் பாடசாலைகள் தொடர்பான குறிப்புகளின் அடிப்படையிலான வரலாற்று ஆவணமாகவும், இலக்கியங்கள் தொடர்பான தரவுத்திரட்டாகவும் இந்நூல் ஆசிரியரால் பிரசவிக்கப்பட்டிருப்பது "பஞ்ச காலத்தில் ஒரு நாளி நெல் கிடைத்தது போலாகும்"

செல் அரித்துப்போன நமது வரலாறு தொடர்பான குறிப்புகளை தேடிய நூலாசிரியரின் பயணத்தில் கொட்டியாரத்தின் வரலாற்றுக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கி நிகழ்காலம் வரையான தொன்மைமிகு வரலாற்றுக் குறிப்புகளின் திரட்டான தென்திருமலை தேசம் என்கின்ற வரலாற்று ஆவண நூலின் தொடர்ச்சியான தென்திருமலை தேசம் பாகம் - 03 எனும் இந்நூலினூடாக எமது பிரதேசத்தில் வாழ்ந்த ஆளுமைமிக்க மனிதர்களையும் அவர்கள் ஆக்கிய இலக்கியங்களையும் இவர்களை உருவாக்கிய கல்விக் கூடங்களையும் ஆவணப்படுத்தும் இவ்வரலாற்று முதுசத்தை ஆசிரியரோடு இணைந்து உங்களின கரங்களில் வழங்குவதில் சம்பூர் தமிழ் கலாமன்றம் பேருவகை பெறுகின்றது.

எமது சம்பூர் தமிழ் கலாமன்றமானது கடந்த 2018ம் ஆண்டு எமது பிரதேச கலைப்பண்பாட்டு பாரம்பரியங்களைப் பேணி வளர்க்கும் நோக்கோடு மருத்துவர் அ. ஸதீஸ்குமார் அவர்களை தலைவராகக் கொண்டு மீள ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் முத்தமிழ் விழா, சைவத்தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஊக்குவிப்பு செயற்றிட்டங்கள், பாரம்பரியக் கலைகளின் மீதான மீளார்வத்தை இளம் தலைமுறையினரிடம் ஏற்படுத்துதல், கலைஞர்கள் கௌரவம் நூல் அறிமுக நிகழ்வுகள் என சமூகத்தின் மீது தொடர்ச்சியான எமது பங்களிப்பை வழங்கிவரும் நாம் இம்முறை காலத்தால் போற்றுவதற்குரிய ஓர் வரலாற்று ஆவணப்பெட்டகத்தை வெளியிட்டு வைக்கின்றோம்.

இந்நூலை வெளியிடும் உயரிய பணிக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த நூலாசிரியர் மருத்துவக் கலாநிதி சம்பூர் சதீஸ்குமார் அவர்களின் தேடலும், ஆவணப்படுத்தல்களும் சிறப்பாக இடம்பெற எல்லாம் வல்ல வைத்தீஸ்வரப் பெருமானையும் சம்பூரணத்து அரசி பத்திரகாளித் தாயாரையும் வேண்டி நிற்கிறேன்.

பா. பிரியங்கன்
செயலாளர்
சம்பூர் தமிழ்காலமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

தமிழ் மொழியை பேணிப் பாதுகாத்து வளப்படுத்தும் அரியபெரிய முயற்சிகளில் உலகம் பூராகவுள்ள தமிழ் மொழியைப் பேசும் மக்கள் உணர்வு பூர்வமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் நாமும் அதில் பங்கெடுப்போம் எனக் கூறி,

"பழமையை அறியாதவனுக்கு புதுமையை உருவாக்கும் உரிமை இல்லை" என்ற கூற்றுக்கிணங்க, எந்தவொரு கட்டடத்துக்கும் அத்திபாரமே மிக முக்கியமானது. அதேபோல கடந்தகாலங்களில் தமிழ்மொழி எவ்வாறான இடர்பாடுகளை எல்லாம் கடந்து வந்துள்ளது என்றும், அதன் வரலாறு, செழுமை, பெருமை, வீரியம், ஆதிக்கம், ஆளுமைகள் என்னவென்பதையும் தெரிந்து கொள்ளவேண்டியது தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் பாதுகாப்பிலும் ஈடுபடுவோரின் கட்டாயமாகின்றது.

இன்று பல்வேறு இடங்களில் புதிது புதிதாக தமிழ் சார்ந்த பல தொன்மையான பொருட்சின்னங்கள் பூமிக்கு அடியிலிருந்து வெளிப்பட்டு வருகின்றது. இவை இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முற்பட்ட சங்ககால இலக்கியங்களில் கூறப்பட்ட வரலாற்று செய்திகளை உறுதிப்படுத்துவனவாகவும் உள்ளதை நாம் அறிகின்றோம். ஆதிகுடிகளான தமிழர்களின் இருப்பு இங்கு மேலும் மேலும் நிலைநாட்டப்படுகின்றது. எனவே காலத்தின் கண்ணாடியான இலக்கியம் எமது நிலையான இருப்புக்கு இன்றியமையாததாகின்றது.

வரலாற்று மூலாதாரங்கள் செறிந்து காணப்படும் திருகோணமலை மாவட்டமானது பல இலக்கிய நூல்களையும் இலக்கியவாதிகளையும் ஈழத்து முன்னோடிகளாகக் கொண்டுள்ளது என்பது வெளிப்படை. அன்று தொட்டு இன்றுவரை தமிழார்வமும் தமிழை பெருமைப்படுத்தும் பல்வேறு மன்றங்கள், சங்கங்கள் (சைவ, இஸ்லாமிய, கிறிஸ்தவ சார்பு) என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலை மண்ணில் உயிர்ப்புடன் இருப்பது பெருமைக்குரிய விடயம். அது சார்ந்த பல நிகழ்வுகளும் ஆங்காங்கே இடம்பெற்றவண்ணமே உள்ளன.

இவ்வாறே இந்த நூற்றாண்டில் மிகப் பெரும் உள்நாட்டு இடப்பெயர்வை சந்தித்து அகதி வாழ்க்கை வாழ்ந்த சம்பூர், பத்து வருடங்களின் பின் மீளவும் குடியேறி, அம் மண்ணிலே அண்மையில் சம்பூர் தமிழ் கலாமன்றம் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடாத்திய "முத்தமிழ் விழா-2018" தமிழ்மேல் பற்றுக்கொண்ட பலராலும் பாராட்டப்பட்ட நிகழ்வாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் திருகோணமலையின் (திருமலை) தென்பகுதியில் அமைந்துள்ள கொட்டியாரபுரப்பற்று பிரதேசத்தின் இலக்கியங்கள், எழுத்தாளர்கள், அரசியல் பிரதிநிதித்துவங்கள், பாடசாலைகளின் வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றின் சில ஆவணத் தொகுப்பை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. " தென்திருமலை தேசம்- பாகம் 3" என்னும் இந்நூலானது 2015 ஆம் ஆண்டு வரையான தகவல்களை கொண்டுள்ளது.

இருப்பினும் 2016 ஆம் ஆண்டு குறிப்புகள் சிலவும் காலநேரம் கருதி சில இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏற்கனவே பாகம் 1, 2 என்பன ஒரே நூலாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக 2018ம் ஆண்டு வெளிவந்திருந்தது)

சமகாலத்தில் சம்பூரை தளமாகக் கொண்டு பல இலக்கிய செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் சம்பூர் தமிழ்க் கலாமன்றத்தினரால் வெளியீடு செய்து வைக்கப்படும் பெருமையை இந்நூல் பெறுகின்றது. இம்மன்றத்தினருக்கும் வெளியீட்டுரையை வழங்கிய இதன் செயலாளர் திரு.பா.பிரியங்கனுக்கும் அன்பான நன்றி.

நுண்வரலாற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து வெளியிடப்படும் இந்நூலுக்கு சிறப்பான அணிந்துரையை வழங்கிய கவிஞர் க.யோகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதிபர்) அவர்களுக்கும், அழகான சிறப்புரையை வழங்கி இந் நூலுக்கு பெருமை சேர்த்த மூதூர் கலை இலக்கிய ஒன்றிய செயலாளர் கலாபூசணம் ஏ.எஸ். உபைத்துல்லா அவர்களுக்கும், பின் அட்டைக்குறிப்பை வரைந்த நண்பனும் கவிஞனுமான திரு.ப. சுஜந்தன் அவர்களுக்கும் அழகானமுறையில் அச்சுப்பதிப்பு செய்து வழங்கிய பென் விஷன் அச்சகத்தாருக்கும் இந்நூலை கருத்தூன்றி வாசிக்கும் வாசகர்களுக்கும் மேலான நன்றி உரித்தாகட்டும்.

நன்றி.

வைத்தியகலாநிதி அ. ஸதீஸ்குமார்
சம்பூர் - 04
மூதூர்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகம் - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாபுரப்பற்று கலை இலக்கியங்கள் 1

கலைகள் மக்களது மனங்களை அமைதிப்படுத்தும், ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகளை மிக இலகுவாக ஆற்றுகின்றன. இதனால் தான் எக்காலத்திலும் சமூகத்தின் நல்லிருப்புக்களுக்காகப் பல படைப்புகளைப் படைக்கின்ற கலையுலக பிரம்மாக்களுக்கு மக்கள் மனங்களில் செல்வாக்குகள் இருந்துகொண்டே இருக்கின்றது. பகல் பொழுது முழுவதும் வேலைகள் பலவற்றில் ஈடுபட்டு உழைக்கின்ற உழைப்பாளிகள் அந்திசாய்கின்ற வேளையில் கூட்டமாகக் கூடி ஆடல்கள், பாடல்கள், கூத்துக்கள் மூலம் தமது களைப்பைப் போக்கிக் கொண்டனர். அத்தோடு தமது மொழியையும் ஒற்றுமையையும் ஆற்றல்களையும் வளர்த்தும் கொண்டனர். இதுவே கலைகளின் ஆரம்பத் தோற்றுவாயாக இருக்கவேண்டும். இவ்வாறான மக்கள் இலக்கியங்கள் உலகின் பலபாகங்களிலும் வளர்ந்துள்ளன. வளர்க்கப்பட்டும் வருகின்றன.

திருகோணமலை மாவட்டமானது தனித்துவமான கலை இலக்கியப் பாரம்பரியங்கள் பலவற்றை கொண்டதொரு தேசமாக பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. பரந்து விரிந்து கிடக்கின்ற கிராமங்களிலேயே இப் பாரம்பரியங்கள் இன்றளவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றமையைக் காணக்கூடியதாயுள்ளது. இம் மாவட்டத்தின் ஒரு பிரிவான கொட்டியாபுரப்பற்று பிரதேசம் அந்நிய ஆதிக்க ஏதேச்சதிகார சக்திகளினால் பலமுறைகள் அழிவுக்குட்படுத்தப்பட்டுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் இங்கு பாரம்பரியத் தன்மையைப் பேணும் செயற்பாடுகள் ஆக்கபூர்வமான முறையில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தற்பொழுது தங்கள் மூதாதையரின் வரலாற்றை அறியும் ஆர்வமும் தேடலும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துக் கொண்டு செல்வதையும் காணக்கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கொட்டியாபுரப்பற்று பிரதேசத்தின் கலை இலக்கிய வரலாறுகள் முறையாகப் பேணப்படாமையாலும், நூலாக்கம் பெறத் தவறியமையாலும் வெளியுலகு அறிந்து கொள்ள முடியாமற் போயிற்று. இந்த நிலையில் எமது மூத்த தலைமுறையினரின் அரிய ஆக்கங்கள் பலவற்றை இழந்த நிலையில் நிற்பதை எண்ணிப் பல இலக்கியவாதிகள் தொடக்கம் சாதாரண குடிமக்கள் வரை வருந்துவதைக் காணக்கூடியதாயுள்ளது.

ஆனாலும் கொட்டியாபுரப்பற்றின் கலை இலக்கிய வரலாற்று நிகழ்வுகள் பலவற்றை கடும் சிரமத்தின் மத்தியில் ஆவணப்படுத்தியவர்கள் என்ற வகையில் புலவர் வே. அகிலேசபிள்ளை, வ.அ.இராசரெத்தினம், கலாநிதி சரவணபவன், திருமலை நவம், பாலசுகுமார், காசிநாதர் சிவபாலன், எம்.ஏ.சமது, ஏ.எஸ். ஊவைத்துல்லா, கே.எம்.எம்.இக்பால் ஆகியோர் போற்றத்தக்கவர்கள். இவர்களது இச் செயற்பாடுகள் காரணமாக இன்றைய தலைமுறையினரதும் முந்தய தலைமுறையினரதும் இலக்கியச் செயற்பாடுகள் பதிவாக்கம் பெற்றுள்ளன.

## 1.1 அண்ணாவிமார்கள் - கூத்து விலாசம், நாடகம்

வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே மட்டக்களப்பு மாவட்டத்தையும், மேற்கே அனுராதபுரம், பொலநறுவை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ள திருகோணமலை மாவட்டம் ஒரு நீண்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. பெருமளவு நீர்நிலைகளையும், மலைகளையும் மற்றும் காடுகளையும் கொண்டு காணப்படும் இம்மாவட்டத்தில் ஐதான பாரம்பரிய மக்கள் குடியிருப்புகள் காணப்படுவது குறிப்பிடவேண்டிய தொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாவட்டத்தின் வடக்குப் பிரதேசங்கள் யாழ்ப்பாணத் தமிழர்களின் கலாசாரப் பண்புகளை ஒத்திருப்பதைப் போல, தெற்கு மற்றும் மேற்குப் பகுதிக் கிராமங்கள் மட்டக்களப்பு தமிழ் மக்களது கலாசாரப் பண்பாடுகளை ஒத்திருந்த போதிலும், திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் தனித்துவமான மரபுவழி மாறாத கலாசாரப் பண்பாடுகளைப் பேணிவருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைவாக சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான், மூதூர், மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்றை, பள்ளிக்குடியிருப்பு, கிளிவெட்டி, தோப்பூர், வெருகல், நல்லூர், மட்டப்புக்கழி முதலான கொட்டியாபுரப்பற்றைச் சேர்ந்த பல கிராமங்கள் தங்கள் தனித்துவமான கலாசாரப் பண்பாடுகள், மரபுவழிசடங்குகள், சமயசடங்குகள் முதலானவற்றைக் கொண்டுள்ளன. இப்பகுதிகளிலுள்ள முஸ்லீம் மக்களும் தங்களுக்கேயுரித்தான சில கலாசாரங்களைக் கொண்டிருந்தாலும், தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றும் கலாசாரப் பண்பாடுகளையும் பின்பற்றுகின்றனர். ஆனாலும் இந்நடைமுறை தற்காலங்களில் அருகிவருவதாகக் கேள்வியுற முடிகின்றது.

இத்தமிழ் முஸ்லீம் சமூகங்களிரண்டும் ஆரம்பகாலங்தொட்டு கொட்டியாபுரப்பற்றில் தமது வாழ்வியலில் ஒன்றுபட்டு வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும், பிரித்தாளும் தந்திரங்களும் தமிழ்-முஸ்லீம் உறவை சந்தேகக் கண்கொண்டு பாரக்கும் நிலைமை தோற்றுவிக்கப்பட்டது. தென்னிந்தியத் தமிழ் மக்களுடனான வர்த்தகத் தொடர்புகளாலும், கொட்டியாரபுரப்பற்றில் முஸ்லீம் மக்கள் குடியேறி இங்கிருந்த தமிழ் சமூகத்தினருடன் மொழியால் ஒன்றாகி வாழ்ந்து வந்ததினாலும் அன்றிலிருந்து இன்றுவரை இம்மக்கள் தமிழ்பேசும் சமூகங்களாக ஒன்றிணைந்து, தமது ஒற்றுமைப்பட்ட கலாச்சாரப் பின்னணிகளோடு வாழ்ந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இது பற்றி ஜனாப் எம்.ஏ. சமது ஐயா அவர்களின் "கொட்டியாபுரப்பற்று வரலாறு" என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் மூலமாகப் பிறந்த கூத்துக்கள், விலாசங்கள், நாடகங்கள், ஆட்டங்கள், பாட்டுக்கள் ஆகியன கொட்டியாபுரப்பற்று பிரதேசங்களில் ஆதிகாலந்தொட்டு பயிலப்பட்டும், மேடையேற்றப்பட்டும் வந்துள்ளன. இவற்றிலே கொம்பு விளையாட்டு, கும்பவிழா, வேள்விகள், மடைவைத்தல் (கடவுளுக்குப் பூசைப்பொருட்களைப் படைத்தல்) முதலான சிறுதெய்வ வழிபாடுகள், மனிதனொருவரின் பிறப்பிலிருந்து இறப்புவரையான சடங்குகள், தொழில் முறையிலான சம்பிரதாயங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

அந்த வகையில் திருகோணமலையின் நாடகமுன்னோடியாக அறிஞர் வே. அகிலேசபிள்ளை (1853-1910), எஸ். இன்னாசித்தம்பி (1900-1960) ஆகியோரைக் குறிப்பிடலாம். திருகோணமலையில் எழுந்த முதல் நாடகம் அல்லது கூத்து அறிஞர் அகிலேசபிள்ளை அவர்களால் எழுதப்பட்ட "கண்டி நாடகம்" (1889) என்பதாகக் கருதப்படுகின்றது. கூத்துகளுக்குப் பெயர்போன இடங்களாக திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர், சேனையூர், மூதூர், கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்றை, கட்டைபறிச்சான், ஆலங்கேணி, கிண்ணியா, நிலாவெளி, தம்பலகாமம், குச்சவெளி, உப்புவெளி, திருமலை நகரம், சாம்பல்தீவு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இக்கூத்துக்கள் யாழ்ப்பாணம் மற்றும் தென்னிந்தியாவிலிருந்து இப்பிரதேசங்களுக்கு வருகை தந்த அண்ணாவிமார்களால் உள்ளூர் கலைஞர்களுடன் இணைந்து முற்காலங்களில் சிறப்பாக ஆடப்பட்டு வந்ததாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

1926 ஆம் ஆண்டளவில் மதன் சாய்பு, சின்னையா சாய்பு சகோதரர்கள், வேலநாயக்கர் அண்ணாவி, சங்கரபாண்டியன் அண்ணாவி, துரைசுவாமி அண்ணாவி, மதார்ஷா, கரீம்பாய் ஆகியோர் தென்னிந்தியாவில் இருந்து வந்து சம்பூர், சேனையூர், தம்பலகாமம் போன்ற இடங்களில் தமது குடும்பங்களுடன் தங்கியிருந்து கொண்டு உள்ளூர் கலைஞர்களைப் பழக்கி கூத்துக்களை பல இடங்களிலும் அரங்கேற்றியுள்ளனர். (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக 1926 இல் மேற்கூறிய சாய்பு சகோதரர்கள் சம்பூருக்கு வந்தனர். இங்கு தங்கியிருந்து கொண்டு இங்கிருந்த கலைஞர்களைப் பழக்கி " பூதத்தம்பி விலாசம், தமையந்தி நாடகம், குலேபகாவலி, அரிச்சந்திர விலாசம், மார்க்கண்டேய விலாசம்" ஆகியவற்றை மூதூர், குச்சவெளி, தம்பலகாமம், கிளிவெட்டி போன்ற இடங்களில் மேடையேற்றியுள்ளனர். இச் சாய்பு சகோதரர்களிடம் மாணவர்களாயிருந்த திரு. தம்பையா, திரு. பேச்சிமுத்து, திரு. கணபதிப்பிள்ளை ஆகிய மூவரும் பிற்காலத்தில் புகழ்பெற்ற அண்ணாவிமார்களாக சம்பூர் பிரதேசத்தில் விளங்கியுள்ளனர். இம்மூவரும் தமது ஆசிரியர்களிடமே தவில், நாதஸ்வரம் போன்றவற்றைப் பயின்று, பிற்காலங்களில் இவ்வாத்தியங்களில் புகழ்பெற்ற கலைஞர்களாகவும் விளங்கியுள்ளனர். இவர்களுடைய காலத்தில் பிரபல்யம் பெற்ற கூத்துக்களாக மார்க்கண்டேய விலாசம், அல்லிஅர்ஜுனா, அரிச்சந்திர விலாசம், அழகேசன்- பவளக்கொடி, வள்ளியம்மன் கூத்து, சுபத்திரன், இலங்காதகனம், தமையந்தி நாடகம், இருதயராஜன், சம்பூர்ணராமாயணம், ஊசோன் பாலந்தை போன்றவற்றைக் கூறலாம்.(2)

இச்சாய்பு சகோதரர்கள் தம்பலகாம பிரதேசத்திலும் தங்கியிருந்து திரு.கணபதிப்பிள்ளை போன்ற பல அண்ணாவிமார்களை உருவாக்கியுள்ளதாகவும் அறியமுடிகின்றது.(3)

சம்பூரில் பிற்காலங்களில் அறியப்பட்ட அண்ணாவிமார்களாக திரு. செல்லையா, திரு. முத்துக்குமார், திரு. சிவக்கொழுந்து, திரு.மாரிமுத்து, திரு. அகிலேசபிள்ளை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.(4)

1934 ஆம் ஆண்டளவில் மூதூர் பகுதியில் சந்தனம் அண்ணாவி அல்லது சந்தனத்தார் என்று அழைக்கப்பட்ட வெலிச்சோர் அந்தோனி என்பவர் " ஞான சௌந்தரி" என்னும் கூத்தை அரங்கேற்றியுள்ளார் எனவும் அறியமுடிகின்றது. இவருடன் காசி முகமது, கச்சிமுகமது, முகமது முகைதீன், வெள்ளப்பொத்தர், நெய்னாமுகமது, வெள்ளைக்குட்டி, சுபைர் போன்றவர்கள் சிறந்த அண்ணாவிமார்களாகப் பிரபல்யம் பெற்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னமரவடி பிரதேசம் வேதாள ஆட்டத்திற்குப் (பூத ஆட்டம்) புகழ் பெற்றது போல ஈச்சிலம்பற்றுப் பிரதேசம் "சாரங்கதாரா" என்னும் கூத்துக்குப் புகழ் பெற்றதாகக் காணப்படுகிறது என்ற குறிப்பொன்றும் உள்ளது(5).

ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த அண்ணாவிமார்களாக பின்வருவோர் அறியப்படுகின்றனர். ஆநெய்தீவு திரு.இ. தம்பிராசா, திரு.க. கந்தையா அவர்களும், இலங்கைத்துறை முகத்துவாரம் திரு.மா. வெற்றிவேல், திரு.கா. சௌந்தரராஜா, திரு.வ. துரைநாயகம், திரு.மு. செல்வராசா ஆகியோரும், ஈச்சிலம்பற்றையைச் சேர்ந்த திரு. அரசுமணி, மட்டப்புக்கழியைச் சேர்ந்த திரு. பொன்னன் போன்றவர்களும், வெருகல் முகத்துவாரம் திரு. கற்பூர அண்ணாவி, திரு. தம்பிராசா ஆகியோரும்,

மல்லிகைத்தீவை சேர்ந்த கனகசூரியர், காளிக்குட்டி அண்ணாவி, காளிமுத்தர் என்போரும் பெயர் கூறத்தக்கவாறு சிறந்த அண்ணாவிமார்களாக விளங்கியுள்ளனர்.

அத்தோடு சேனையூர் கட்டைபறிச்சான் பிரதேசத்தில் கூத்துக்களைப் பழக்கி, மேடையேற்றி புகழ் கொண்டவர்களில் கணபதிப்பிள்ளை அண்ணாவி, வீரக்குட்டி அண்ணாவி, நல்லதம்பி அண்ணாவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவற்றிலே கணபதிப்பிள்ளை அண்ணாவியின் "இராமாயணம்" கூத்து புகழ்பெற்றதாக கூறுகின்றனர்.

சாலையூரில் சிறந்த அண்ணாவிமார்களாக திரு.காளிக்குட்டி, திரு.சின்னத்தம்பி, திரு.வேலாயுதம் போன்றோர் புகழ்பெற்று விளங்கியுள்ளனர்.

இதேபோல பள்ளிக்குடியிருப்பில் திரு. தாமோதரம்பிள்ளை அண்ணாவி, திரு. கணபதிப்பிள்ளை அண்ணாவி, திரு. சின்னையா அண்ணாவி, திரு. சிதம்பரப்பிள்ளை அண்ணாவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இதிலே சிதம்பரப்பிள்ளை அண்ணாவி அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாலிவதை, குருகேத்திரன்போர், பாஞ்சாலி சபதம்" போன்ற கூத்துக்களை இயற்றியும் நடித்தும் மேடையேற்றியுள்ளார்.

இவர்கள் தாங்களாகவே உடனுக்குடன் பாடல்களை இயற்றி இசையமைத்து தாளத்திற்கேற்ப கூத்துக்களாகவோ நாடகங்களாகவோ கொட்டியாரபுரப்பற்று கிராமங்கள், திருகோணமலை, மட்டக்களப்பு, தம்பலகாமம் போன்ற பிரதேசங்களுக்கு மாட்டு வண்டில்களிலும், கால்நடையாகவும் பயணம் செய்து மேடைகள் பலவற்றை அலங்கரித்ததோடு, கொட்டியாரபுரப்பற்று பிரதேசத்தின் கலை இலக்கியங்களை அழியவிடாது பேணிவளர்த்து வந்த அண்ணாவிமார்கள் வரிசையில் வைத்து போற்றப்படுகின்றனர்.

சென்ற இருபதாம் நூற்றாண்டுகளின் பிற்பகுதிகளில் கொட்டியாரபுரப்பற்றைச் சேர்ந்த கிராமங்கள் அனைத்தும் உள்நாட்டு ஆயுதமோதல்கள் காரணமாக பாதிப்புகளுக்கு உள்ளாகியிருந்தன. இதனால் அடிக்கடி இடப்பெயர்வுகள், உயிரிழப்புகள், சொத்தழிவுகள் பலவற்றைச் சந்தித்திருந்த போதிலும் கூட, இக்கிராமங்களில் தோற்றம் பெற்றிருந்த பல இலக்கிய மன்றங்கள் மூலம் இப்பிரதேச மக்களின் கலை கலாசாரங்கள் பேணப்பட்டு, அடுத்த தலைமுறைகளுக்கும் கடத்தப்பட்டு வந்திருந்தமையானது இம் மக்கள் கலையுணர்வுகளின் மீது கொண்டிருந்த ஆர்வத்தை பிரதிபலிப்பதாகவே அமைந்திருந்தது.

### 1.1.1 இலக்கிய மன்றங்கள்

அந்தவகையில் பின்வரும் இலக்கிய மன்றங்கள் கொட்டியாபுரப்பற்று பிரதேசங்களில் சிறப்பாக செயற்பட்டு வந்துள்ளன.(6) பட்டித்திடல் கலைமகள் நாடகமன்றம், மூதூர் எங்கள் நாடகமன்றம், மூதூர் முத்தமிழ் நாடகமன்றம், மூதூர் இளம் கிறிஸ்தவ மகளிர் கலைவட்டம் (பெண்கள் கலைவட்டம்), மூதூர் கத்தோலிக்க இளைஞர் மன்றம், மூதூர் மதியரசி மன்றம், மூதூர் கலாமன்றம், வின்சண்ட்டி போல் சபை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னம்போடிவெட்டை வாணி கலாமன்றம், சேனையூர் விநாயகர் நாடகமன்றம், கட்டைபறிச்சான் விநாயகர் நாடகமன்றம் மற்றும் சம்பூர் நாமகள் நாடகமன்றம் போன்றனவாகும்.

இவைகளைவிட இக்காலங்களில் "சம்பூர் தமிழ்கலாமன்றம்" என்றொரு இலக்கிய அமைப்பு சம்பூரில் இருந்துள்ளதாகவும், இம் மன்றத்தின் சிறப்பான நாடகமாக "தங்கையின் பாசம்" பேசப்பட்டதாகவும் கூறப்படுகின்றது(7). மேலே கூறப்பட்ட சம்பூர் நாமகள் நாடகமன்றமே இத் தமிழ்கலாமன்றமாக இருக்கலாம்.

அதுமட்டுமல்லாது சம்பூரில் நாடக கலாமன்றம், சம்பூர் தமிழ்கலாமன்றம், சிறிமுருகன் இசைக்கழகம், விநாயகர் இசைக்கழகம், துர்க்கா இசைக்கழகம் போன்றனவும், ஈச்சிலம்பற்றில் ஊற்று வலையுலக கலைஞர் மன்றம், கட்டைபறிச்சான் சேனையூர் பிரதேசத்தில் கலைவாணி இசைக்கழகம், சாரங்கா இசை நடனக்கல்லூரி, சந்தோசபுரத்தில் இசைவாணி கழகம், கங்குவேலி அகத்தியர் கலைமாமன்றம், பாரதிபுரம், வேவ்டான்ஸ் ஸ்டுடியோ, மூதூர் கலை இலக்கிய ஒன்றியம், மூதூர் இலக்கிய வட்டம், மூதூர் உமர் நெய்னார் புலவர் கழகம் போன்ற இலக்கிய அமைப்புக்களும் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்து இலக்கிய உலகில் நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, மொழிபெயர்ப்பு, விமர்சனம், வெளியீடுகள் என அனைத்துத் துறைகளிலும் தனது ஆற்றலால் மிளிர்ந்த வ.அ இராசரெத்தினம் அவர்கள் மூதூரைச் சேர்ந்தவர். இவர் ஏராளமான மேடை நாடகங்களையும், வானொலி நாடகங்களையும் வெளியிட்டுள்ளார். அத்தோடு முன்னாள் நுண்கலைப் பிரிவு விரிவுரையாளர் திரு. பாலசுகுமார் (சேனையூர்)அவர்கள் நாடகநூல் வெளியீட்டில் குறிப்பிடத்தக்கவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைவிட இன்னும் எத்தனையோ பல கலைஞர்கள் பலவிதமான நாடகங்களை மேடையேற்றி பலரதும் பாராட்டுக்களையும் பெற்றிருந்தனர். அவைகள் நூல்வடிவம் பெறாத காரணத்தாலும், இப்பகுதியிலுள்ள கிராமங்கள் அடிக்கடி பலமுறை வன்செயல் பாதிப்புகளை சந்தித்ததினாலும் ஏராளமான எழுத்துமூலப் பிரதிகள் எமது கைகளுக்குக் கிட்டவில்லை என்பது வருந்தத்தக்கது.

### அடிக்குறிப்புகள்

1. திருகோணமலை கலை இலக்கிய வரலாறு – திருமலை நவம் (பக்-155)
2. திருகோணமலை பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம் (1994) - பாலசுகுமார், திருமலைநவம், சிவபாலன் (பக்-28,29)
3. போற்றுதற்குரிய ஆற்றலாளர்கள் இவர்கள் (2014)–வேலாயுதம் தங்கராசா (பக்- 16)
4. சம்பூர் பிரதேசத்தின் தொன்மை (2013) – வைத்தியகலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் (பக்-53)
5. திருகோணமலை பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம் (1994) - பாலசுகுமார், திருமலைநவம், சிவபாலன் (பக்-36)
6. மேலது- (பக்-46)
7. சம்பூர் பிரதேசத்தின் தொன்மை (2013) – வைத்தியகலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் (பக்-53)

## 1.2. காவியங்கள், புராணங்கள்

கொட்டியாபுரத்து பிரதேசத்தின் தமிழ்க்கலை இலக்கியங்களை வளர்ப்பதிலும் பாதுகாப்பதிலும் மதவேறுபாடுகளின்றி மொழியால் ஒன்றுபட்டுள்ள இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்த மக்கள் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளை நாம் அறிகின்றோம். இருந்தும் துரதிஷ்டவசமாக இவற்றை ஆவணப்படுத்துவதில் ஏற்பட்ட இடர்பாடுகள், கவலையீனங்கள் காரணமாக பெருமளவிலானவற்றை நாம் இழந்த நிலையிலுள்ளோம். ஆனாலும் இன்று எம்மிடையே புலமை நிறைந்த எழுத்தாளர்களும் பாவலர்களும் பண்டிதர்களும் தோன்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுதான் உள்ளனர். கைக்கு கிட்டிய இலக்கியப் பொக்கிசங்களை ஆவணப்படுத்தும் முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த வகையிலேயே புராணங்களும் காவியங்களும் தமிழ் மொழியின் இன்பரசனையையும், கால வளர்ச்சி மாற்றங்களையும், பிரதேசத்தின் வரலாற்றுக் குறிப்புகளையும் காட்டுவதனால் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழில் முன்னே தோன்றிச் சிறப்புப் பெற்ற இலக்கியங்களுள் காப்பியங்கள் முதன்மையானவை.

சங்ககாலத்தைச் (கி.மு 300- கி.பி. 250) சேர்ந்த இலக்கியச்சுவை மிகுந்தனவாகக் கூறப்படுகின்ற இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை போன்றவை தமிழிலுள்ள காப்பியங்களுள் பழமையானவையாகும்.

தமிழிலே தலபுராணங்கள் பலவும் இந்தியாவின் தமிழ்நாட்டை நோக்கிப் படையெடுத்த முகம்மதியர்களின் காலத்திலேயே எழுந்துள்ளனவாகக் கூறப்படுகின்றது (1). இஸ்லாமிய முகம்மதியர்கள் தமிழ்நாட்டிலுள்ள தமிழ்க் கோயில்களை இடித்தழித்து அவற்றிலிருந்த செல்வங்களைக் கொள்ளையிட்டனர். மூவேந்தர்களும் பலமிழந்து காணப்பட்ட இக்காலத்தில் முகம்மதியர்களை நாயக்கர்களும், மராட்டியர்களும் விரட்டியடித்தனர்.

இக்காலத்திலேயே எழுச்சியை ஊட்டுமுகமாக கோயில்களுக்கு ஆரியப்பாணியிலான தேவலோகக் கதைகள், வடமொழியிலமைந்த புராணங்களின் மொழிபெயர்ப்புகள் வழித் தொடர்ச்சியாக வரலாற்றம்சங்களை முக்கியத்துவப்படுத்தி தலபுராணங்கள் எழுதப்பட்டன என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

கொட்டியாரபுரப்பற்றில் தோற்றம் பெற்ற இவ்வாறான சில மூத்த படைப்புக்கள் எம் மூதாதையர்களால் பேணப்பட்டு வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழியாகவும், ஏட்டுவடிவிலும் இருந்த இவை காலத்திற்குக் காலம் மீள்பதிப்பு செய்யப்பட்டு வந்துள்ளன.

## திருக்கரைசைப்புராணம்

"பொன்னிரவிதனை வளைத்துப்
புகுந்துலவும் ஒரு நேமிப் பொற்றேர் மீது
மன்னிரவி யென வழங்கு
சுதரிசன மூவிலை மேல் வயங்கு சங்க
மின்னிரவி யிருள் கடியும்
பிறைக்கோடுங் கரத்தேந்தி மேவாருள்ளக்
கல்நிரவி மதம் பொழியும்
கரைசையில் வாழ் கரிமுகனைக் கருத்துள் வைப்பாம்..."

என்றவாறு செல்கின்ற இப்புராணம் சைவசமயம் சார்ந்த படைப்பாகக் காணப்படுகின்றது. இருப்பினும் இலங்கை நாட்டின் சிறப்புக்கள் மற்றும் இங்கு பிரவாகித்துப் பொங்கி நுரைதள்ளியோடும் மாவலிகங்கையின் சிறப்புக்களோடு தமிழ்மொழியின் கவித்துவமிகு கலைச்சொற்கள் என்பனவும் எடுத்தாளப்படுகின்றன. திருக்கரைசைப்புராணம் இன்றைய கங்குவேலி கிராமத்திற்கு அடுத்தாற் போலுள்ள திருக்கரைசையம்பதி என்னும் தலத்தினுடைய வரலாறு பற்றி கூறுகின்றது.(2)

திருக்கோணேஸ்வரத்தைப் போலவே திருக்கரைசையம்பதியும் சைவசமய மக்களின் புராதன வரலாற்றுத் தலமாகும். திருக்கோணேஸ்வரத்திற்கு தட்சணகைலாய புராணம் போலவே திருக்கரைசையம்பதிக்கு திருக்கரைசைப் புராணம் பெருமை சேர்க்கின்றது.

வடகயிலையில் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நடைபெறும் திருமணக்கோலத்தைக் காண்பதற்காக இருஞ்சுரர், முனிவர், சித்தர், இயக்கர், கந்தர்வர் முதலானோர் கூடியபோது வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்து. சமநிலை தளம்பியது. அச்சமயம் சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைத்த வாக்கிற்கிணங்க குறுமுனியாகிய அகத்திய மாமுனிவர் பொதிகை சென்றார். பின் அங்கிருந்து ஈழத்தை அடைந்து, தென்கயிலைவாசன் கோணநாயகரை வழிபட்டார்.

சமனையங்கிரியில் (சிவனொளிபாதமலை) பிறந்து கோணையங்கிரியில் (திருகோணேஸ்வரம்) தலைவைத்துக் கிடப்பது போல் உள்ள மாவலி கங்கையின் பெருமையை உணர்ந்து சிவனுடைய எண்ணப்படி கரைசைப்பதிக்குச் சென்றார். அங்கு இலிங்கதாபனம் செய்து அதற்கு சர்வதீர்த்தமுடையவர் என்று பெயருமிட்டு, நவதீர்த்தக் கணபதியையும் தாபித்து வழிபட்டு வந்தார். இவ்வாறு தாபித்த இலிங்கத்தினின்றும் தோன்றிய சிவபெருமான் உமாதேவியார் சமேதரராய் திருமணக்கோலத்தில் அகத்தியமுனிருக்கு கூறிய வாக்கிற்கிணங்க காட்சி கொடுத்தார். இவ்வாறு இப்புராணத்தின் கங்கை சருக்கம், தாபன சருக்கம் என்னும் பகுதிகளில் கூறப்பட்டுள்ளது. இவற்றோடு இலங்கைச் சருக்கம் மற்றம் பூசைச் சருக்கம் என்னுமிரு பகுதிகளும் பாடல்களாகக் காணப்படுகின்றன.

தேசத்து மக்கள் அனைவரும் மாவலி கங்கைக் கரையோரத்திலே ஆடியமாவாசை தினத்தன்று கூடி புராண படனம் செய்யும் திருக்கரைசைப்புராணத்தை எழுதியவர் யாரென்று உறுதியாகத் தெரியாத போதிலும் சிலர் இதை உமாபதி சிவாச்சாரியார் பரம்பரையைச் சேர்ந்த ஒருவரே இயற்றினார் என்பர். அறிந்த வரையில் கொட்டியாபுரப்பற்று வன்னிமையாகிய ஸ்ரீ மத் பூபாலபிள்ளை வன்னிமை அவர்களினுடைய முயற்சியினால் இப் புராணம் இத் தீர்த்தக் கரையில் படித்தும், பொருள் சொல்லப்பட்டும் வருகின்றது. அதே போல குருலிங்க சங்கம பக்திகளில் சிறந்தவரும் பரோபகாரசீலருமாகிய கொட்டியாபுரப்பற்று வன்னிமை ஸ்ரீ மத் த. முத்துக்குமாரபிள்ளை அவர்களின் வேண்டுகோளின் படி திருகோணமலைத் தமிழறிஞர் திரு. வே. அகிலேசபிள்ளை அவர்களால் ஓலைச்சுவடியில் இருந்து கி. பி. 1893 இல் அச்சிட்டுக் கொடுக்கப்பட்டது. இதற்காக அகிலேசபிள்ளை புலவர் அவர்கள் பல இடங்களிலிருந்தும் தேடி சேகரித்த பத்து பிரதிகளில் ஒன்று சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்டிருந்தது என்றும், இதற்கு உரை செய்தவர் யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவர் என்றும் திரு.வே.அகிலேசபிள்ளை அவர்கள் கி.பி. 1885 ஆம் ஆண்டு எழுதிய வரலாற்றுக் கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது(3).

இதைத் தொடர்ந்து திருக்கரைசைப்புராணம் 1950 களின் பின் பலமுறை 1952(கோணேசர் அச்சகம்), 1975(கட்டைபறிச்சான் இந்து இளைஞர் மன்றம்), 1999 (திரு. சி. நந்தகுமார்), 2009(இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம்), 2011(கொட்டியாபுரப்பற்று இந்துசமய அபிவிருத்தி ஒன்றியம்) இல் பதிப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தமிழ்ஒளி வ.அ. இராசரத்தினம் அவர்கள் 1975 இல் திருக்கரைசைப்புராணத்தை மறுபிரசுரம் செய்தபோது இவ்வாறு கூறுகின்றார். அதாவது கொட்டியாபுரப்பற்றின் சூழலையும் மற்றும் மாவலி கங்கையாற்றின் பரிவாகத்தையும் நன்கு அறிந்த ஒருவரால் தான் இதைப் பாடமுடியும். எனவே இது கொட்டியாரபுரப்பற்றில் வாழ்ந்த புலவரால்தான் அல்லது கவிஞரால்தான் பாடமுடியும் என்று அடித்துக் கூறியுள்ளார்(4).

## நவரத்தின புராணம்

மூதூர் முகைதீன் பிச்சைப்புலவர் பாடிய இன்னுமொரு பாடல் நவரத்தினபுராணம் ஆகும். இதன் பதிப்பு கைக்கு கிடைக்ககவில்லை.

## கங்கைக்காவியம்

"சீராறு மகாவலி கங்கையின் வியப்பும்
தெத்திகள் அமைந்திடும் விஸ்தார விதமும்
நேரான காவியம் நாவால் இசைக்க
நித்தனே என்னாவில் வெற்றி தருவாயே..."

என்று தொடங்கும் இக்காவியத்தை 19 ஆம் நூற்றாண்டளவில் மூதூரைச் சேர்ந்த முகைதீன் புலவர் அவர்கள் பாடியுள்ளார். "புலவர் சாலையர்" என்றழைக்கப்படும் இவர் கொட்டியாபுரத்திலுள்ள பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களை வளமாக்கிக் கொண்டிருக்கின்ற மாவலி கங்கையின் சிறப்புக்களையும், அதன் அழகையும், கங்கைநீர் பாய்ந்து வருகின்ற போது இடைநடுவிலுள்ள வெண்மணல் திட்டுக்களின் (தெத்திகள்) சிறப்புகளை தனது துணைவியாருக்கு விபரிப்பது போல இக்காவியத்தை அமைத்துள்ளார்.

தமிழிலக்கணப்புலமை நிறைந்த இவரால் இலக்கியச்சுவை செறிந்ததாக ஆக்கப்பட்ட இக்காவியம் 33 பாடல்களைக் கொண்டது. மூதூரின் தமிழிலக்கியப் பாரம்பரியத்தை எடுத்தியம்பும் மூத்த காவியங்களுள் ஒன்றான இதனை, மூதூரைச் சேர்ந்த ஜனாப். ஏ.எஸ். உபைத்துல்லா அவர்கள் 1997இல் திருகோணமலை, ஈழத்து இலக்கியச்சோலை வெளியீடாக பதிப்பு செய்து மகத்தான சேவை புரிந்துள்ளார்.

### குட்டிக்காளி காவியம்

"திருமருவு கோணமலை வடசார்பிலாகச்
செய்யவொரு வாரிதிரை கீழ்சார்பிலாகக்
குருக்கள் எனும் வளகங்கை மேல் சார்பிலாக
வெருகல் எனும் செழுமைநதி தென்சார்பிலாக ...."

என்று கொட்டியாபுரப்பற்றின் எல்லைகளைத் தெளிவாக வரையறை செய்து தொடர்கின்ற இக்காவியம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதைப் பாடியவர் பற்றிய குறிப்புக்களேதும் இதுவரை அறியப்படவில்லை. இக்காவியம் முழுவதுமாக அச்சேறியதாகவும் தெரியவில்லை. கொட்டியாபுரப்பற்றில் வாழ்ந்த முதியவர்களால் வாய்மொழியாகப் பாடப்பட்டுவந்த இக்காவியத்தை முழுவதுமாகத் தெரிந்த ஒருவரைக் காண்பது மிக அரிதாகவே உள்ளது.

இக்காவியத்தின் கருப்பொருளை அறிந்தவர்களின் கூற்றுப்படி! சம்பூர் வாசியான குட்டிக்காளி என்பவன் கிளிவெட்டியில் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றான். குடும்பத் தகராறு காரணமாக குடும்பத்திலுள்ளவர்களை சுட்டுக்கொலை செய்துவிட்டு திருமங்கலாய் காட்டில் ஒளிந்து வாழ்கின்ற வேளையில், காவல்துறையினரால் பிடிக்கப்பட்டு பின்னர் மரண தண்டனைக்குள்ளாகின்றான். இதுவே இக்காவியத்தின் பிரதான கதையெனக் கூறப்படுகின்றது.

அக்காலத்தில் கிளிவெட்டியில் வாழ்ந்த கவிஞர் ஒருவரே இதை பாடியதாகக் கருதப்படுகின்றது.

## குறிஞ்சாமுனைக் காவியம்

"ஆதியுன்னருள் தங்கு தோப்பூரில் வாலிபர்கள்
ஆனியிதிலேவிருந் தானதுகள் செய்த
சேதிகளை யானுமொரு பாவினை இசைக்க
தீதாறு காரணம தான இறையருள்வாய்.................."

என்று ஆரம்பிக்கின்ற இக்காவியம் 1868ஆம் ஆண்டு தோப்பூரில் பிறந்த மீராலெப்பை குப்பைத்தம்பிப்புலவர் அவர்களால் 1908ஆம் ஆண்டு பாடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. தோப்பூர் இளைஞர்கள் காட்டிலே விருந்துண்ணச் செல்லும் சம்பவங்களைப் பிரதான கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தம் முனைப்புப் பெறமுன்பு மூதூர் பிரதேசத்தின் பல கிராமங்களில் இளைஞர்களாகவும், குடும்பங்களாகவும் இவ்வாறு காலையிலே காட்டுக்குள் சென்று அங்கே சமைத்து சாப்பிட்டு மாலைவேளையில் வீடு திரும்பும் நிகழ்வுகள் இடம்பெறுவது வழமை.

40 பாடல்களைக் கொண்ட குறிஞ்சாமுனைக் காவியம் தோப்பூர் மற்றும் அதனருகிலுள்ள அல்லைக்குளம், முல்லை மற்றும் மருத நிலங்களின் சிறப்புகள் வனப்புகள் போன்றவற்றை இலக்கியச்சுவையோடு பாடப்பட்டுள்ளது. இக்காவியத்தை மூதூரைச் சேர்ந்த ஜனாப். ஏ.எஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபைத்துல்லா அவர்கள் 1997இல் திருகோணமலை, ஈழத்து இலக்கியச்சோலை வெளியீடாக பதிப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புகாரி காவியம்

"சீர் தங்கு முலகுமுதல் யாவையும் படைத்து
செப்பு முத்தொழில் புரியும் ஆதி றகுமானே
பேர் தங்கு காவியமான தினி தோதப்
பெரியவா துணை நின்றுன் அருள் புரிகுவாயே..........."

என்று செல்கின்ற இஸ்லாமியமதம் சார்ந்த இக்காவியத்தை 1907ஆம் ஆண்டு மூதூரில் பிறந்த உமறு நெய்னாப்புலவர் அவர்கள் அழகு தமிழில் இஸ்லாமிய பக்தி மணம் கமழ பாடியுள்ளார். மூதூர் நத்வத்துல் உலமாசபையினரின் வேண்டுகோளுக்கிணங்க 1950-60 காலப்பகுதியில் புகாரிகந்தூரியைப் பற்றிப் பாடப்பட்ட இக்காவியத்தில் மூதூரின் இயற்கையழகும் வளங்களும் சிறப்புற வர்ணனை செய்யப்பட்டுள்ளன. இக்காவியத்தையும் மூதூரைச் சேர்ந்த ஜனாப். ஏ.எஸ். உபைத்துல்லா அவர்களால் 1997இல் திருகோணமலை, ஈழத்து இலக்கியச்சோலை வெளியீடாக பதிப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வெருகல் கோயில் களவு காவியம்

"பூலோகந்தொட்டு உயிர்த்தெழுந் நாளில் பிறந்ததோர்
சந்நிதியாம் நல்ல வேலவனார் நின்று
நடனம் புரிந்திடும் வெருகலின் சந்நிதியாம் அழகு
பொருந்திடும் ஐங்கரர் நித்தமும்..."

என்று தொடங்கிச் செல்லுகின்ற இக்காவியம் இந்துக்களின் புனித வணக்கத்தலங்களுள் ஒன்றான வெருகல் கிராமத்தில் உள்ள சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலில் (முருகன் கோயில்) 1812 ஆம் ஆண்டு ஒரு நாளி தங்க அரிசி உட்பட பலபெறுமதி வாய்ந்த பொருட்கள் களவாடப்பட்டு, பின்னர் பிடிபட்ட சம்பவங்களைக் கருப்பொருளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காலம், இயற்றியவர் பெயர், என்பன அறியப்படவில்லை. இன்றுவரை இக்காவியம் கொட்டியாரப்பற்றிலுள்ள முதியவர்களால் வாய்மொழியாகப் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்னமும் பதிப்பு செய்யப்படாத இதனை மேன்காமத்தை சேர்ந்த திரு. சித்திரவேல் (75வயது) அவர்களிடமிருந்து வாய்மொழியாகப் பெற்றுக்கொண்டேன். ("கொட்டியாரபுரப்பற்று முதுசங்கள்" என்னும் என்னுடைய நூலில் இக்காவியத்தை பதிப்பு செய்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது)

## மழைக்காவியம்

தோப்பூரைச் சேர்ந்த முகமது லெப்பைப் புலவர் அவர்களால் இம் மழைக்காவியம் பாடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நெல்வயல்களிலே வேளான்மைகளுக்கு நீரில்லாத சந்தர்ப்பமொன்றில் வான்பொய்க்கவே, மழையை வேண்டி இக்காவியம் பாடப்பட்டதாகவும், அவ்வேளையில் மழை பெய்ததாகவும் செவிவழிக்கதைகள் மூலமாக அறியமுடிகின்றது. எனினும் இம்மழைக்காவியம் பதிப்பு செய்யப்பட்டிருப்பதாக அறியப்படவில்லை.

## பட்டோலைக்காவியம்

பலநாட்டுக்கப்பல்களும் தரித்துச் செல்லும் பாதுகாப்பான துறையாக கொட்டியாரத்துறை சரித்திரகாலம் முதலாக விளங்கி வருகின்றது. இவ்வாறாக இந்தியாவிலிருந்து இங்குவந்த மரக்கலம் ஒன்றில் கொண்டுவரப்பட்ட பலவிதமான வாசனைத்திரவியங்கள், மூலிகைச் சரக்குகள் முதலான பொருட்கள் பற்றி பாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற இக்காவியம் பட்டோலைக்காவியம் என அழைக்கப்படுகின்றது. இதன் வடிவம், இயற்றியவர் பெயர், காலம் என்பனவும் அறியப்படவில்லை. தற்காலத்தில் இதை அறிந்தவர்களைக் காண்பதுவும் அரிதாகவுள்ளது.

## வெருகல் சித்திரவேலாயுதர் காதல்

"சீர்பூத்த தென்வெருகற் சித்திரவேலாயுதர் மேல்
ஏர்பூத்த செந்தமிழாலின் பரசக்காதல் சொல்ல
வார்பூத்த கும்பதனவல்லவை தன்பாகமுறுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்பூத்த மேனிக்கணபதி தாள்காப்பாமே. ......."

என்று தொடங்கிச் செல்கின்ற இப்பாடல் தம்பலகாமத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் ஐயம்பெருமாள் மகன் வீரக்கோன் முதலியார் அவர்களால் பாடப்பட்டுள்ளது. இதை திரிகோணமலை ஸ்ரீலஸ்ரீ. ந. கதிர்காமத்தம்பி அவர்கள் கேட்டுக்கொண்டபடி மேற்படியூர் திரு. வே. அகிலேசபிள்ளை அவர்கள் பரிசோதித்து பின்னர் பதிப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதில் வெருகலம்பதியின் சிறப்புக்கள், முருகப்பெருமானின் அற்புதப்பெருமைகள், அக்காலத்தய வரலாற்றுக் குறிப்புகள் போன்றவைகளை அறியக்கூடியதாயுள்ளது. அப்போதய கொட்டியாபுரத்து வன்னிமையாகவிருந்த "இளஞ்சிங்கம்" காலத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது என்றும், இதே காலத்தில் கண்டி ராசதானியை ஆட்சிபுரிந்த மன்னன் ராசசிங்கன் போன்றவர்கள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றது.

முதலியார் தம்பலகாமத்தைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும், கொட்டியாபுரத்தின் பல கிராமங்களைப் பற்றியும் தெளிவாக அறிந்துகொண்டு, இங்கேயிருந்த (சம்பூர், நீலாப்பளை முதலான) தமிழ்மக்களின் பல வணக்கத்தலங்கள் பற்றியும் இந்நூலில் பாடியுள்ளார்.

## சம்பூர் பத்திரகாளியம்மன் காவியங்கள்

இந்து மதத்தினரின் வழிபாடுகளில் ஒன்று தாய்த்தெய்வ வழிபாடு. கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயங்களுள் சம்பூர் கிராமத்திலுள்ள பத்திரகாளியம்மன் ஆலயம் பிரதானமானது. இதன் வரலாற்றுக் குறிப்புகள் கி.பி 1600 காலப்பகுதிகளுக்குரியதான ஆவணங்களிலும் காணப்படுகின்றது. இப் பத்திரகாளி அம்மன்மீது பலர் பாடிய காவியங்கள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன. இக்காவியங்களில் கொட்டியாபுரப்பற்றிலுள்ள (இன்றைய மூதூர்) சம்பூர் கிராமத்தின் இயற்கையழகு, வளங்கள், பத்திரகாளியம்மனின் மகிமைகள் மற்றும் அற்புதங்கள் போன்றன தமிழிலக்கியச் சுவையோடு பக்திமணம் கமழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது. இவற்றுள் அனேகமானவை கி.பி. 1800 – 2000 வரையிலான காலப்பகுதியினுள் பாடப்பட்டவையாகும்.

இவைகளுள் சம்பூர் கூத்தாடி வைரர் (வயிரமுத்து) பாடியதாகக் கூறப்படும் காவியம் மட்டக்களப்பு திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பதிப்பித்த மகாமாரித்தேவி திவ்வியகரணி என்னும் நூலில் காணப்படுகின்றது. இப் பத்திரகாளியம்மன் மீது பாடப்பட்ட ஏனைய காவியங்களை மருதடிச்சேனை மாரிமுத்து பண்டிதர், மருதடிச்சேனை காளியப்பு விசயசிங்கம், சம்பூர் கோணாமலை கண்டுமணி, சேனையூர் சிவஸ்ரீ.அ. அரசரெத்தினம் ஆகியோர் பாடியுள்ளனர்.

கையெழுத்துப் பிரதிகளாகவும், வாய்மொழியாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்கூறப்பட்ட ஐந்து காவியங்களையும் இக்கட்டுரையாளனாகிய நான் (அருமைநாதன் ஸதீஸ்குமார்) 2014ஆம் ஆண்டு "அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்" என்னும் நூலினூடாக அச்சேற்றியுள்ளேன்.

இவைகள் தவிர கட்டைபறிச்சான் குமரேசு கனகசிங்கம் என்பவரால் "சேனையூர் முத்துமாரியம்மன் காவியம்", மருதடிச்சேனை காளியப்பு விசயசிங்கம் என்பவரால் "சம்புக்களி பத்தினியம்மன் காவியம்", பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த கலாபூசணம் த. சிதம்பரப்பிள்ளை அவர்களால் "பத்தினியம்மன் குளிர்த்திக் காவியம்" என்பவை பாடப்பட்டுள்ளதாகவும் ஆவணங்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

### கினாந்திமுனைக் காவியம், நாயக காவியம், ஊர் துறந்த காவியம்

அண்மைக்காலத்தில் மூதூரின் 2006ஆம் ஆண்டு இடப்பெயர்வை மையப்படுத்திய கலாபூசணம் எம்.ஏ.பரீத் (மூதூர்) அவர்களின் "கினாந்திமுனைக்காவியம்" (2012) மற்றும் எம்.எம்.ஏ. அனஸ் (மூதூர்) அவர்களின் ஊர்துறந்த காவியம்" (2014), அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.எம்.ஏ.அனஸ் (மூதூர்) அவர்களின் இஸ்லாமிய சமய "நாயக காவியம்" (2014) என்பனவும் வெளிவந்துள்ளன.

பேர்கங்கை வளைந்தோடி புனல்பாயு மருதம்
பூமிஞ்சி தேன்சிந்தி வனப்பாகு முல்லை
நீர்பொங்கி அலை தாவி கழிமேவும் நெய்தல்
நீளாறு குறிஞ்சியொடு அரண்காணும் முத்தூர்...."

(கினாந்திமுனைக் காவியம்)

"விண்ணுலகை மண்ணுலகை விரிந்தபெரும் கடலை
வகைவகையாம் படைப்பினத்தை வனப்புடனே படைத்த
மன்னோனாம் ஓர்இறைக்கே மாபெரிய புகழும்
மாட்சிமையும் உரித்தென்று மொழிகின்றேன் நன்கு...."

(நாயக காவியம்)

"பொன்மணிகள் விளைந்தேதான் பொலிவுற்றுத் திகழ்ந்த
பொற்பதியாம் மூதூரும் பேரின்னல் உற்று
கண்ணீராய்க் காட்சி தந்த கதையதனை நானும்
காவியமாய்ப் பாடுவதற்குக் கரிசனையே கொண்டேன்....."

(ஊர் துறந்த காவியம்)

அத்தோடு மூதூரில் எழுந்ததாகக் கொள்ளப்படுகின்ற நவரத்தினபுராணம் மற்றும் பந்தல்காவியம் பற்றி அறியமுடியாதுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள காவியபுராண கர்த்தாக்களை விட பண்டிதர் பத்தினியர் பரிகாரி, ஹலிபா சாகிப்புலவர், நெய்னாகான்புலவர், சீனித்தம்பிப்புலவர், மாரிமுத்து பண்டிதர், கறுத்தப்புலவர் (திரு.ஏ.தியாகுப்பிள்ளை பெர்ணாண்டோ), வெள்ளைப்புலவர் (திரு.அந்தோனி றோச் டி வாஸ்), சவரிமுத்துப் பண்டிதர், நிக்கலஸ் பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் திரு.அருணாசலம் பரசுராமன், சைவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்களான திரு.அருளம்பலம் குகராசா, திரு.செ.விபுணசேகரம், திரு.க.வெற்றிவேல் ஆகியோர்களும் எமது கொட்டியாபுரப்பற்று மண்ணில் வாழ்ந்தனர். வாழ்ந்தும் வருகின்றனர்.

மேலே கூறப்பட்ட காவியங்கள் நூல்வடிவில் வெளிவந்ததாக என்னால் அறியப்பட்டவை மட்டுமே. இவற்றை விட இன்னமும் எமது கைகளுக்குக் கிட்டாததும், பதிப்புக்கு உள்ளாகாமல் இருந்ததும் இருப்பதுமானவைகள் ஏராளமாக இருக்கலாம். இப்படிப்பட்டவைகளை தேடிப்பாதுகாத்து அச்சிலேற்ற ஆர்வலர்கள் முனையவேண்டும். அப்போது தான் எமது பிரதேச கலை இலக்கிய வரலாறு முழுமைபெறும்.

### அடிக்குறிப்புகள்

1. தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் (1987) – பேராசிரியர் மது.ச. விமலானந்தம் எம்.ஏ.
2. திருக்கரைசைப்புராணம் (2009) - பதிப்பாசிரியர், க. இரகுபரன்
3. புலவர் வே. அகிலேசபிள்ளை (2006) - கலாபூசணம் த. சித்தி அமரசிங்கம்
4. இலக்கியப் பூந்துணர்- தமிழ்ஒளி,கலாபூசணம் வ.அ. இராசரத்தினம் அவர்களின் பவளவிழா 2000.- தொகுப்பாசிரியர்- கலாவிநோதன், கலைவிருதன், கலாபூசணம் த. சித்தி அமரசிங்கம், (பக்-154)
5. கங்கை காவியம் (1997) – ஜனாப் ஏ.எஸ். உபைத்துல்லா
6. வெருகல் சித்திரவேலாயுதர் காதல் நூல் (திரு. வே. அகிலேசபிள்ளையால் பரிசோதித்தது)
7. அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும் (2014) – டாக்டர். அருமைநாதன் ஸதீஸ்குமார்
8. கொட்டியாரம் இலக்கிய மரபு (2010) – பாலசுகுமார்

## 1.3 மூதூரின் முதல் நூல் வெளியீட்டு விழா (1962)

1946 ஆம் ஆண்டளவில் எழுத்துலகில் பிரவேசித்த திருவாளர் வஸ்தியாம்பிள்ளை அந்தோனி இராசரெத்தினம் (வ.அ) அவர்கள் ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், நாவல்கள், வானொலி நாடகங்கள், மொழிபெயர்ப்புகள், நூல்பதிப்புகள் போன்றவைகளில் தமிழ் மொழியின் சிறப்புக்களை வெளிக்கொணர்ந்ததோடு தன்னை ஒரு தலைசிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியவாதியாகவும் வெளிக்காட்டினார். மூதூரில் 05.06.1925 ஆம் ஆண்டு பிறந்த இவருடைய "தோணி" என்னும் சிறுகதை நூல்வெளியீட்டு விழா 1962ஆம் ஆண்டு மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையில் நடைபெற்றது. இதுவே மூதூரில் இடம்பெற்ற முதலாவது நூல்வெளியீட்டு விழாவாகும்.

முன்னைய கொட்டியாரபுரப்பற்றில் (இன்றைய மூதூர், சேருவில, வெருகல்) காரியாதிகாரியாகக் (DRO) கடமையாற்றியவரும், வ.அ வின் குருநாதருமான இலங்கையர்கோன் அவர்களின் சவாலை ஏற்று பிறந்ததே இத்தோணி என்ற சிறுகதையாகும் என்பது பலரின் கருத்து.

தோணி என்னும் சிறுகதையுட்பட 14 சிறுகதைகள் கொண்ட "தோணி" என்னும் சிறுகதைத் தொகுதிக்கு, 1963ஆம் ஆண்டு தமிழ் நூல்களுக்கான சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அப்போது இவரின் புகழ் கிழக்கிலங்கையில் மட்டுமல்ல இலங்கை பூராகவும் பரவத் தொடங்கியது. பாராட்டுகளும் குவிந்தன. அவ்வேளை திருவாளர் வ.அ அவர்கள் சம்பூர் பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றிக் கொண்டிருந்தார். இவரைக் கௌரவிக்கு முகமாக சம்பூர் மக்களும், இப்பாடசாலை ஆசிரியர்களும் அப்போதய சம்பூர் கிராமசபைத் தலைவரான திரு. நா.சி. சரவணமுத்து அவர்கள் தலைமையில் ஏற்பாடு செய்திருந்த பாராட்டு நிகழ்வை இவ்வாறு நினைவுபடுத்திப் பார்க்கின்றார்.

"அன்று சுமார் 10 மணியளவில் தான் சம்பூர் கிராமத்தின் வாயிலை அடைந்த போது கிராமசபைத் தலைவரான திரு. நா.சி. சரவணமுத்து அவர்கள் தலைமையில் ஊர்மக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் தன்னை ஊரின் வாயிலிலே வரவேற்று, மாலையணிவித்து, வெடிகள் வெடிக்க வைத்து சம்பூர் பத்திரகாளி கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அர்ச்சனை செய்த பின்னர் அங்கிருந்து சம்பூர் கிராமத்தின் தெருக்கள் மற்றும் குச்சொழுங்கைகள் ஊடாக ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அத்தோடு வீட்டு வாசலில் நிறைகுடம் வைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரத்தி சுற்றி, பொட்டிட்டு நான் இலக்கியப் பரிசு பெற்ற செய்தியில் மகிழ்ந்து எனக்களித்த வரவேற்பை என்றைக்குமே என்னால் மறக்கவே முடியாது." என தனது இலக்கிய நினைவுகள் (1995) என்னும் நூலில் வ.அ அவர்கள் உள்ளந் திறக்கின்றார்.

இத் தோணி என்னும் சிறுகதை ரஷ்ய, ஆங்கில, மலையாள, சிங்கள மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது க.பொ.த. (சா.த) தமிழ் இலக்கிய நயம் பாடப்பரப்பிலும் இச்சிறுகதை சேர்க்கப்பட்டுள்ளமை இவரது ஆக்கங்களின் தரத்திற்கு நல்ல சான்றாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. இலக்கிய நினைவுகள் - கலாபூசணம் வ.அ. இராசரெத்தினம் (1995)
2. இலக்கியப் பூந்துணர் - தமிழ் ஒளி வ.அ. அராசரெத்தினம் அவர்களின் பவளவிழா 2000 ஆண்டு. தொகுப்பாசிரியர்: த. சித்தி அமரசிங்கம்
3. வீரகேசரி (21.05.2015) – கட்டுரை அருமைநாதன் ஸதீஸ்குமார்
4. ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் வ.அ. இராசரெத்தினத்தின் தடங்கள் (2016) – பேராசிரியர் செ. யோகராசா


## 1.4 மூதூர் முத்தமிழ் விழா (1964)

மூதூர் நகரத்திலும் அதைச் சூழவுள்ள கிராமங்களிலும் எத்தனையோ தமிழ் பண்டிதர்களும் புலவர்களும் வித்துவான்களும் வாழ்ந்தபோதிலும் இவர்களில் பலரின் ஆக்கங்களும் புலமைகளும் காட்டில் எறித்த நிலாப்போல் பிறர்க்குப் பயன்படாமலேயே மறைந்துவிட்டன. போக்குவரத்து வசதிகள் குறைந்த, அச்சுவாகன வசதிகள் அற்ற அக்காலத்தில் ஏடுகளில் எழுதி பேணப்பட்டவைகளும் செல்லரித்தும் எறிகுண்டில் எரிபட்டும் அழிந்துவிட்டன. மீதியானவற்றைக் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலுருவிலேற்ற அவர்களின் பொருளாதாரச் சுமைகள் இடம்கொடுக்கவில்லை.

இவர்களுள் தமிழறிஞரான மருதடிச்சேனை பத்தினியன் பரிகாரி (உமறு நெயனாப் புலவரின் குரு), மூதூர் சவரிமுத்து பண்டிதர் (உமறு நெயனாப் புலவர், வ.அ.இராசரெத்தினம் ஆகியோரின் குரு), மூதூர் உமறு நெயனாப் புலவர், தமிழ் ஒளி வ.அ.இராசரெத்தினம் (மூதூரின் பெருமையை உலகறியச் செய்தவர்), மூதூர் முகைதீன் பிச்சை புலவர், மூதூர் மஸ்கூர் மௌலவி, தோப்பூர் குப்பைத்தம்பி புலவர், மல்லிகைத்தீவு அ.கணபதிப்பிள்ளை, தோப்பூர் முகமது லெப்பை புலவர், தோப்பூர் முகமது முகைதீன் புலவர், மருதடிச்சேனை காளியப்பு விஜயசிங்கம், சம்பூர் பு.செல்லக்குட்டி ஆகியோர் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

இவ்வாறாக பல முத்தமிழ் அறிஞர்களையும் பண்டிதர்களையும் புலவர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டு தமிழ் வளர்த்த கொட்டியாரபுரப் பற்று மண்ணில் முத்தமிழ் விழாவொன்று நடாத்தப்பட வேண்டும் என்னும் வேட்கை ஒன்று 1964 ஆம் ஆண்டில் உருவாகியது. முன்னைய காலத்தில் கொட்டியாரம் என்றும் பின்னரான காலத்தில் மூதூர் என்றும் அழைக்கப்பட்ட நகரத்தில் முத்தமிழ் விழா நடத்தவேண்டும் என்ற வ.அ.இராசரெத்தினம் அவர்களின் முயற்சியினால் விழாக்குழு அமைக்கப்பட்டு 1964 இல் 3 நாட்கள் விழா நடைபெற ஏற்பாடாயிற்று.

முன்னாள் கொட்டியாபுரப்பற்று வன்னிமை திருவாளர் வைரமுத்து அவர்களின் மருகரான கோபாலையா என்பவர் தலைவராகவும், வ.அ.இராசரெத்தினம் காரியதரிசியாகவும், திரு.செ.கதிர்காமத்தம்பி உதவி காரியதரிசியாகவும், மூதூர் உதவி வைத்திய அதிகாரி திரு. நல்லலிங்கம் (தம்பலகாமம்) பொருளாளராகவும் மற்றும் மூதூர் உதவி வைத்திய அதிகாரியாக பணிபுரிந்த திரு.சிதம்பரநாதன் (வல்வெட்டித்துறை) கட்டைபறிச்சான், சம்பூர், மல்லிகைத்தீவு, கிளிவெட்டி, ஈச்சிலம்பற்றை கிராமசபைத் தலைவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட விழாக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டது. மூதூர் அந்தோனியார் பாடசாலைக்கு முன்னாலிருந்த திறந்த வெளியில் மேடை அமைத்து விழா நடாத்தப் பட்டிருந்ததாக அறிய முடிகின்றது.

அப்போதைய காலத்தில் மூதூரில் மின்சார வசதிகள் இருக்கவில்லை. போக்குவரத்து வசதிகள் மிகமிகக் குறைவு. கொட்டியாரப்பற்று பிரதேசத்துக்கு வரும் வழிகள் யாவும் நீர்நிலைகளைக் கடந்தே வரக்கூடியதாக இருந்தது. இது ஒரு தீவுப்பகுதி போலவே காணப்பட்டது. இவ்வாறான ஒரு கஷ்ட சூழ்நிலை நிலவிய மூதூரில் ஒரு சிறந்ததான தமிழ்விழாவை நடத்த முயற்சித்து, அதில் வெற்றியும் கண்டு, மகத்தான சாதனை படைத்தமைக்கு திருவாளர் வ.அ அவர்களின் விழாக்குழுவும், அவர்களுக்கு உதவியாயிருந்த மூதூர் பிரதேச மக்களின் ஆதரவும் கிடைத்தமையே காரணங்கள் எனலாம்.

இவ்வாறு மூன்று நாட்கள் நடைபெற்ற இம் முத்தமிழ் விழாவுக்கு இலங்கையின் பல பிரதேசங்களில் இருந்தும் பல அறிஞர்கள் வருகை தந்திருந்தனர். இவர்களை திருவாளர் வ.அ. அவர்கள் தமது இலக்கிய நினைவுகள் என்னும் நூலின் மூலம் இவ்வாறு நினைவு கூர்கின்றார். பேராசிரியர் ஆ.சதாசிவம், விரிவுரையாளர் தனஞ்செயராசசிங்கம், எம்.ஏ.ரகுமான், மகாகவி அண்ணல், அருள். தியாகராசா, யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களான பண்டிதர் துரைசிங்கம், கனக செந்திநாதன், தேவன், இ.நாகராஜன், மட்டக்களப்பை சேர்ந்த F.X.C நடராசா, எஸ்.பொ அவர்கள், மலையகத்தைச் சேர்ந்த கவிஞர் சக்தி பாலையா, ஏ.வி.பி. கோமாஸ், கவிஞர் சொக்கநாதன், கொழும்பைச் சேர்ந்த நாவற்குழியூர் நடராசன், வீ.ஏ. சிவஞானம், மூதூர் பாராளுமன்ற உறுப்பினர்களான A.L.A மஜித், M.E.H.முகமதலி, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான செ.இராசதுரை ஆகியவர்களுடன் தமிழறிஞர் சங்கைக்குரிய தம்மரத்தினதேரர், கற்கையாளன் மற்றும் முன்னைநாள் மூதூர் காரியாதிகாரிகளான திரு. நவரெத்தினராசா, திரு. செல்வரெத்தினம் ஆகியோர்கள் விழாவில் கலந்து சிறப்பித்த இலக்கிய நண்பர்கள் என அவர் நினைவு படுத்துகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழாவில் பல இலக்கியவாதிகளாலும் தமிழறிஞர்களாலும் இயல், இசை, நாடகம் முதலியன அரங்கேற்றப் பட்டன. தமிழ் மீது பற்றுக்கொண்ட இவர்களுடைய வருகையால் மூதூர் மண் புனிதமடைந்தது என்றே கூறவேண்டும். பல்வேறு அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் அக்காலத்து மக்களுக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம்.

இந்நிகழ்வு மூதூரை பொறுத்தவரையில் ஒரு வரலாற்று நிகழ்வாகவே நோக்கப்படுகின்றது. இனியொரு தடவை இம்மாதிரியான முத்தமிழ் விழாவொன்றை மூதூரில் காண்போமா என்பது கேள்விக்குறியாகவே இருக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாபுரப்பற்று இலக்கியவாதிகள்

# 2

நமது முந்தய தலைமுறைகளுக்கு முற்பட்ட காலங்களிலிருந்தே பல புலவர்களையும் பண்டிதர்களையும் தன்னகத்தே கொண்டு தமிழ் மொழி வளர்த்த இடங்களுள் கொட்டியாரப்பற்று பிரதேசத்திற்கும் ஓரிடமுண்டு. இத் தமிழ் அறிஞர்கள் பரிகாரிகளாகவும், பூசகர்களாகவும், மாந்திரீகத்தில் வல்லவர்களாகவும், நாட்டு மருத்துவர்களாகவும் இருந்துள்ளனர். இப் பெருமக்களின் இலக்கியப் படைப்புக்கள் வெளியுலகுக்கு கொண்டு செல்லப்படாது மறைந்து போயலாயிற்று. அல்லது அழிக்கப்பட்டுவிட்டது. இவைகளை ஆவணப்படுத்தும் முயற்சிகளும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு இடம்பெறவில்லை பெருந்துன்பம். பல்வேறு அடக்குமுறைகள், அடிக்கடி இடம்பெற்ற இடப்பெயர்வுகள், வாழ்விட அழிப்புகள் போன்றன இவற்றுக்கு காரணங்களாக அமைய முடியும். ஆனாலும் சில இலக்கியங்கள் வாய்மொழி வழியாக சந்ததிகளுக்கு கடத்தப்பட்டு இன்றும் மீட்கப்படுகின்றன.

அந்த வகையில் கொட்டியாரப்பற்று பிரதேசத்திலிருந்த பிரதான கிராமங்களான மூதூர், சம்பூர், மருதடிச்சேனை, தோப்பூர், கிளிவெட்டி, மல்லிகைத்தீவு, ஈச்சிலப்பற்று போன்றவற்றில் வாழ்ந்து தமிழும் சமயமும் வளர்த்த அறிஞர் பெருமக்கள் பலரின் படைப்புகள் எமது கைகளுக்குக் கிட்டவில்லை. இவர்களுள் நாமறிந்தவர்களாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரைச்சேர்ந்த புலவர் சாளையர், சிவத்தவாப்பு என்னும் உமறுலெப்பை, சவரிமுத்துப் பண்டிதர், சீனித்தம்பிப் புலவர், நெய்னாகான் புலவர், உமறுநெயனாப் புலவர், கருத்தப்புலவர் என்ற தியோகுப்பிள்ளை பெர்னாண்டோ, வெள்ளைப்புலவர் என்றழைக்கப் பட்ட அந்தோணி றோச் டி வாஸ், சவரிமுத்துப் பண்டிதர், நிக்கோலஸ் பண்டிதர்.

சம்பூரை சேர்ந்த திருவாளர் வைரமுத்து (கூத்தாடி வைரர்), திரு.வயிரமுத்து (சுக்குரியர் பரிகாரி) மற்றும் திரு. பு. செல்லக்குட்டி அதிபர் போன்றோருடன் கட்டைபறிச்சான்-சேனையூரை சேர்ந்த பத்தினியன் பரிகாரி, மாரிமுத்துப் பண்டிதர், திருவாளர்களான விஸ்வலிங்கம், சங்கரப்பிள்ளை, கனகசபை, விஜயசிங்கம் ஆகியோரும் மல்லிகைத்தீவைச் சேர்ந்த அருணாசலம் கணபதிப்பிள்ளையும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தோப்பூரில் மீராலெப்பை குப்பைத்தம்பிப் புலவர், முகமது லெப்பை புலவர், குப்பைத்தம்பி அசனார் லெப்பை (உடையார் அப்பா), குப்பைத்தம்பி முகமது லெப்பை மரைக்கார் (கீப்பர் அப்பா), குப்பைத்தம்பி முகமது முகைதீன் (கிளாக்கர் அப்பா) போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

*குறிப்பு:-*

*இலக்கிய ஆர்வலர்களுக்கு எனது அன்பான வேண்டுகோள் இத்தொகுப்பு எழுத்தாளர்களை ஆவணப்படுத்தும் நோக்கேயன்றி, அவர்களது படைப்புகளை விமர்சனத்துக்கு உட்படுத்துவது அல்ல.*

**1. மூகைதீன் பிச்சை புலவர் (சாளையர்)**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மூதூரில் வாழ்ந்த இவர் காட்டுமரம் அரிதல், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வந்த ஒருவராவார். தமிழ் மொழியில் சிறந்த இலக்கண இலக்கிய அறிவுடைய இவர் மாவலி கங்கையினூடாக தோணியில் தொழிலுக்குச் சென்றுவரும் வழக்கமுடையவர். இக்காலங்களில் கங்கை நதிப்பிரவாகத்தின் அழகு, கங்கைக் கரைத்தோட்டங்களின் சிறப்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வெண்மணல் தெத்திகளின் வனப்புகள் போன்றனவற்றை தனது இல்லாளுக்கு விபரித்துக் கூறுவது போல காவியம் ஒன்றைப் பாடியுள்ளார். கங்கைக்காவியம் என்னும் பெயர்கொண்டு அழைக்கப்படும் இத்தமிழ் இலக்கியம் 1997 ஆம் ஆண்டு ஜனாப்.ஏ.எஸ். உபைத்துல்லா அவர்களால் தொகுத்து நூலுருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு முகைதீன் பிச்சை புலவரே நவரத்தின புராணத்தையும் பாடியுள்ளார்.

## 2. முகமது லெப்பை புலவர்

தோப்பூரைச் சேர்ந்த இவர் பயிர்கள் மழை நீரின்றி வாடியபோது மழையை வேண்டிப் பாடிய காவியமொன்றை யாத்துள்ளார். இது கிடைப்பதற்கு அரிதாகவே உள்ளது. "மழைக் காவியம்" என்னும் பெயருடைய இது பற்றிய மேலதிக தகவல்களை என்னால் அறியமுடியாதுள்ளது. இது போன்ற மழைக்காவியங்கள் நாட்டின் பல பாகங்களிலும் பாடப்பட்டுள்ளமையை நாம் அறிந்துள்ளோம். இவற்றுள் அம்பாறையில் தம்பிலுவில் கிராமத்து மழைக்காவியம் குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

## 3. மீராலெப்பை குப்பைத்தம்பிப் புலவர்

தோப்பூரைச் சேர்ந்த சிறந்த தமிழ் புலமையாளரான இவர் கைதேர்ந்த நாட்டு வைத்தியரும் கூட. அக்காலத்தில் தோப்பூர் வாலிபர்கள் சிலர் விருந்து சமைத்து சாப்பிட காட்டுக்குள் சென்ற நிகழ்வுகளையும் தோப்பூர் சார்ந்த பிரதேசத்தின் இயற்கை வளங்களையும் தமது தமிழ் புலமை கொண்டு 1908 ஆம் ஆண்டளவில் ஒரு காவியமாகப் பாடியுள்ளார். "குறிஞ்சாமுனைக்காவியம்" என அழைக்கப்படுகின்ற இக்காவியமானது 1997 ஆம் ஆண்டு ஜனாப்.ஏ.எஸ். உபைத்துல்லா அவர்கள் வெளியிட்ட கங்கைக்காவியம் என்னும் நூலில் பதிப்பு பெற்றுள்ளது.

இவ் அறிஞர்களைத் தொடர்ந்து வந்த பிற்பட்ட காலங்களில் கொட்டியாரபுரப்பற்றின் இலக்கிய செயற்பாடுகள் மற்றும் ஆவணங்கள் போன்றனவற்றை அறியமுடியாத பாரிய இடைவெளி காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் மூதூரை சேர்ந்த வ.அ.இராசரெத்தினம் அவர்களின் இலக்கிய வருகையைத் தொடர்ந்து இப் பகுதியில் மீண்டும் இலக்கிய முயற்சிகள் தழைக்கத் தொடங்கலாயிற்று என்றே கூற முடியும். வ.அ தலைமையில் கொட்டியாரபுரப்பற்றில் தமிழ் விழாக்களும் இலக்கிய செயற்பாடுகளும் நடந்தேறின. தொடர்ந்து வருகின்ற காலங்களில் இன மத பேதம் கடந்த பல இலக்கியவாதிகள் இங்கு தோன்றி தமிழன்னைக்கு சேவைகள் செய்தனர்.

### 4. இலக்கியகலாநிதி கலாபூசணம் வ.அ. இராசரெத்தினம்



இருபதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் திருகோணமலை மாவட்டத்தின் இலக்கிய பிதாமகராகத் திகழ்ந்த மூதூரை சேர்ந்த வ.அ. இராசரெத்தினம் அவர்கள் (1925-2001) கொட்டியாரப்பற்று கிராமங்களின் வரலாற்று சம்பவங்கள், அவை அனுபவித்த துன்பதுயரங்கள் என்பனவற்றை தனது சிறுகதைகள், நாவல்கள், கவிதை, நாடகம், இலக்கிய பேச்சுக்கள் என்பனவற்றின் மூலம் பின்னைய சந்ததிகள் அறிவதற்காக நூலுருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது ஈழத்தமிழ் நாட்டில் பல தமிழிலக்கியப் பணிகளை மேற்கொண்ட இவர் திருகோணமலை மண்ணின் பெருமையை உலகறியச் செய்தவர்களுள் முக்கியமானவர்.

தான் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்திருந்த போதிலும் இந்து சமய புராணங்கள் பலவற்றின் உள்ளடக்கங்களையும், இஸ்லாமிய நற்போதனை மார்க்கங்களையும் கற்றறிந்து இன நல்லுறவைப் பேணிய ஒரு தலைமகன் என பல விமர்சகர்கள் போற்றுகின்றனர். தனது எழுத்துக்களில் கொட்டியாபுரத்து மண்வாசனையை கமழ விட்ட இவர் "பழமையை அறியாதவனுக்கு புதுமையை சிருஷ்டிக்க உரிமை இல்லை" என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். 20-30 க்கு மேற்பட்ட சிறுகதைகளையும், கிழக்கிலங்கையில் முதலாவதாக எழுதப்பட்ட தமிழ் தொடர் நாவலையும் ("கொழுகொம்பு" — 1955 இல்), "கிரௌஞ்சப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைகள்" என்னும் வரலாற்று நாவலையும், பல கவிதைகளையும், நாடகங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். இவர் சம்பூர் மகாவித்தியாலயத்தில் 1963 ஆம் ஆண்டில் ஆசிரியப் பணியாற்றிய போது அங்கு மேடையேற்றிய "முதல்முழக்கம்" என்னும் நாடகமே 1975 இல் கிரௌஞ்சப் பறவைகளானது குறிப்பிடத்தக்கதாகும்.

சம்பூர், சேனையூர், மூதூர், ஆலங்கேணி முதலான பல கிராமப் பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1964 ஆம் ஆண்டில் இலங்கையின் நாலாபுறமிருந்தும் பல அறிஞர் பெருமக்களை மூதூருக்கு வரவழைத்து "முத்தமிழ் விழா" கொண்டாடிய ஒரு பெருமகனாவார். அத்தோடு 1962 இல் மூதூரில் முதலாவது நூல் வெளியீட்டு விழா ஒன்றை புனித அந்தோனியார் பாடசாலையில் நிகழ்த்தி (தோணி நூல் வெளியீடு) சாதனை புரிந்தார். இந் நூலுக்கு 1963 ஆம் ஆண்டு தமிழ் நூல்களுக்கான சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தமையை நாம் பெருமையுடன் நினைவு கொள்கின்றோம்.

மூதூரின் இலக்கணப் புலியும், பழமைவாதியும், நிரம்பிய தமிழ் புலமையாளனுமாகிய உமறு நெய்னா புலவரை சீறாப்புராணத்தின் பதுறு படலத்திற்கு உரை செய்விக்கக் காரணமானவரும் இவரே. ஈழநாகன் என்னும் புனைப் பெயரிலும் பல ஆக்கங்களை பத்திரிகைகளுக்கு எழுதியுள்ளார். இவரின் எழுத்துக்களை ஈழகேசரி, ஈழநாடு, வீரகேசரி, மித்திரன், தினக்குரல், வசந்தம் சஞ்சிகை மற்றும் விவேகி மாத இதழ் ஆகியன தாங்கி வெளிவந்துள்ளன. மூதூரின் முதலாவது அச்சகமான "அமுதா அச்சகம்" இவரது நண்பரான மட்டக்களப்பு செல்வராசகோபால் அவர்களைக் கொண்டு 1977 ஆவணி மாதம் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. வ.அ வின் மொழிபெயர்ப்புக் கவிதையான " பூவரசம்பூ", நீலாவணனின் " வேளாண்மை", அ.ஜெயராசாவின் "சேகுவாரா" கவிஞர் செ.குணரத்தினத்தின் "நெஞ்சில் ஒரு மலர்" என்னும் கவிதைத் தொகுதி ஆகியனவற்றை அச்சுப் பதிப்பித்த இவருடைய இவ் அச்சகம் மூதூரில் இடம்பெற்ற வன்செயலில் தீக்கிரையாக்கப்பட்ட துன்பக் கதை வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிந்தே விட்டது. இத் துர்ச்சம்பவத்திலிருந்து வ.அ. இறக்கும் வரை அவரால் விடுபடவே முடியவில்லை என அவரது இலக்கிய நண்பர்களும் குடும்ப உறவினர்களும் கனத்த இதயத்துடன் கூறுகின்றனர்.

"மூதூர் தூய அந்தோனியார் ஆலய பூர்வ வரலாறு" என்னும் நூலை எழுதியதன் மூலம் மூதூர் கிறிஸ்தவ மக்களின் பழம் பெருமைகளை இன்றுள்ள கிறிஸ்தவ சந்ததியினருக்கும் வரலாற்றில் ஆர்வமுடையோருக்கும் ஒரு ஆவணமாகத் தந்துள்ளார். அத்தோடு புனித அந்தோனியார் ஆலயத்தின் வரலாற்றையும், அவ் ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு மெருகேற்றிய அடிகளார் பலரையும் உலகறியச் செய்த பெருமைக்குரியவரும் இவரே.

## 5. உமறு நெய்னா புலவர்



மூதூர் குளத்தடி தெரு (ஜாயா வீதி) பகுதியில் 1907 இல் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை திருவாளர் அருளப்பு றோச் டி வாஸ் அவர்களின் திண்ணைப்பள்ளியில் கற்றார். தமிழ் இலக்கணத்தை சேனையூரைச் சேர்ந்த திருவாளர் பத்தினியன் பரிகாரி அவர்களிடம் முறையாகக் கற்றார். மூதூர் சவரிமுத்துப் பண்டிதரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்தார். யாழ்ப்பாணத்திலும் கல்வி கற்று "தமிழ் இலக்கண வித்துவான்" என்ற பட்டமும் பெற்றிருந்தார். சமூக சேவையில் நாட்டம் கொண்டிருந்த இவர் ஆசிரியராக மூதூர், சம்பூர், கிண்ணியா, தோப்பூர் ஆகிய இடங்களிலும் பணிபுரிந்துள்ளார். மரபுக் கவிதையில் வல்லவரான இவரை "இலக்கணப்புலி" "பழமைவாதி" "நிரம்பிய தமிழ் புலமையாளன்" என்று தமிழ் ஒளி வ.அ. இராசரெத்தினம் அவர்கள் புகழ்ந்துள்ளார். 1959 களில் நான்காம் வகுப்பு மாணவர்களுக்கான "இஸ்லாம் மதபோதினி" என்ற நூலை வெளியிட்டார். வ.அ. அவர்களின் தூண்டுதல் காரணமாக சீறாப்புராணத்தின் பதுறுப் படலத்திற்கு (பதவுரை, பொழிப்புரை, இலக்கண விளக்கம்) உரை எழுதி 1960 களில் வெளியிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூதூரில் உள்ள அல்-ஹிதாயா மகாவித்தியாலயம் (அக்கரைச்சேனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை) உருவாவதற்கு புலவரே முக்கிய காரணம் என கூறப்படுகின்றது. மூதூர் நத்துவத்துல் உலமா சபையினர் வேண்டிக் கொண்டதற்கமைய புகாரி கந்தூரியைப் பற்றி 1961 ஆம் ஆண்டில் "புகாரிக்காவியம்" எழுதியுள்ளார். இவர் 1963 ஆம் ஆண்டில் மறைந்து வெகு நாட்களின் பின்னரே இவரது "நீதிக்கதைகள், பெண்கல்வி, இஸ்லாமியக்குறள்கள், சோபனம், நபி மொழிகள் (வெண்பா)" முதலிய பிரதிகள் அச்சேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவற்றை அச்சிட்டு வெளியிட்ட ஜனாப்.கே.எம்.எம்.இக்பால் அவர்களின் சேவை என்றும் போற்றுதற்குரியது.

இவரது கவிதைத் தொகுப்புகளை "மூதூர் உமர் நெய்னார் புலவர் கவிதைகள்" என்னும் பெயரில் இவரது பேரன் மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் அவர்கள் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இக்காலத்தில் இவர் பெயரில் மூதூரில் "உமர் நெய்னார் புலவர் கழகம்" இயங்கி வருகின்றது.

### 6. கலாபூசணம் அ. அரசரெத்தினம்

1944 ஆம் ஆண்டு சேனையூரில் பிறந்த இவர் இலங்கை போக்குவரத்து சபை யில் நடத்துனர் மற்றும் சாலைபரிசோதகராகப் பணி புரிந்துள்ளார். கவிக்குயிலன், சேனையூரான், உண்மை விளம்பி என்னும் புனைப் பெயர்களில் ஆக்கங்கள் பலவற்றை 1963 முதல் தினபதி, சிந்தாமணி, சுடரொளி, வீரகேசரி, மலைமுரசு போன்ற பத்திரிகைகளுக்கு 1960 ஆம் ஆண்டு தொடக்கம்




எழுதி வருகின்றார். ஆன்மிகம், சோதிடம், வைத்தியம், அழகியல், வில்லுப்பாட்டு, விமர்சனம், கவிதைகள், காவியங்கள், கட்டுரைகள், சந்தம் மிக்க பாடலாக்கம், போன்றவற்றில் புலமையுள்ள இவர் ஒரு பூசகராவார். இவரின் "எதிர் நீச்சலடிப்போம் ஏமாறாதிருப்போம்" (2011), "ஏக்கம்" (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு "சமூகதீபம்" , "கலைமாமணி" , 2011 ஆம் ஆண்டில் "கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது" மற்றும் 2014 ஆண்டில் "கலாபூசணம் விருது" என்பவை வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**7. புலவர் V.M நஜிமுதீன்**



மூதூர் குளத்தடித்தெரு என்னுமிடத்தில் பிறந்த இவர் (1947) ஒரு முன்னாள் நீர்ப்பாசன திணைக்களப் பணியாளர். மரபுக்கவிதை எழுதுவதில் வல்லவர். தினகரன், தினபதி, சிந்தாமணி, சுதந்திரன், வீரகேசரி ஆகிய பல பத்திரிகைகளில் கவிதைகள் எழுதியுள்ள இவரது "எதிர்நீச்சல்" என்னும் கவிதைத் தொகுப்பு 2011 ஆம் ஆண்டு மூதூர் M.M.K பவுண்டேசன் சார்பாக கலாநிதி K.M.M. இக்பால் மற்றும் அல்ஹாஜ் எஸ்.மஜுூன் அதிபர் அவர்களால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**8.மௌலவி M.I.M மசூர் ஆலிம்**

மூதூர் அக்கரைச்சேனையில் 1928 ஆம் ஆண்டு பிறந்த சிறுகதை எழுத்தாளரான இவர் ஒரு அரபுமொழிப் புலமையாளர். இவரது எழுத்துக்கள் தினகரன், சிந்தாமணி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அத்தோடு இவரது படைப்புக்களில் "குட்டிக்கதைகள்" என்னும் தொகுப்பு குறிப்பிடத்தக்கதாகும். 1973 ஆம் ஆண்டில் அமரத்துவம் அடைந்த பின் இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பை இவரது மகளான சுகைதா கரீம் என்பவர் "மர்கூம் மஷ்கூர் கதைகள்" என்னும் பெயரில் 2004ஆம் ஆண்டு வெளியீடு செய்துள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. திருவாளர் கனகசபை தேவகடாட்சம்



மல்லிகைத்தீவு என்னும் கிராமத்தைச் சேர்ந்த இவர் 1953 ஆம் ஆண்டு பிறந்தவர். ஓய்வு பெற்ற கிராமசேவையாளர். சிறுகதைகள் எழுதுவதில் வல்லவர். "மதில்மேல்" (1995), "காலக்கீறல்கள்" (1996), குமுறல்கள்" (1998), "குருதிமண்" (2000) போன்ற இவருடைய சிறுகதைத் தொகுதிகள் சிறப்பாகப் பேசப்படுகின்றன. தன்னுடைய படைப்புக்களில் தான் சார்ந்த சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், பண்டைய வரலாற்றுச் சம்பவங்கள் போன்றவற்றை வெளிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர் ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் இவர் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 10. கலாபூசணம் மூதூர் முகைதீன்




தான் பிறந்த மண்ணை வெகுவாக நேசித்து அதனையே தனது முகவரியாகக் கொண்டு புதுக்கவிதை, மரபுக்கவிதைகளை படைத்துவரும் இவர் ஓய்வு பெற்ற அதிபராவார். இவர் மூதூரில் 1951 ஆம் ஆண்டில் பிறந்தார். மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவராக இருந்து இலக்கியப் பணியாற்றி வருகின்ற இவருடைய படைப்புக்களில் "பிட்டும் தேங்காய்ப் பூவும்" (1976), "முத்து" (1976), "இழந்துவிட்ட இன்பங்கள்" (2003), "ஒரு காலம் இருந்தது" (2010) ஆகியன புகழ் பெற்ற கவிதைத் தொகுப்புகளாகும். அத்தோடு "அபோதம்" என்னும் உருவகக் கதைகளின் தொகுப்பையும் 2017இல் வெளியிட்டுள்ளார். அத்தோடு "ஓசை" என்னும் காலாண்டு கவிதை சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்து வருகின்ற இவர் 2007 ஆம் ஆண்டு கலாபூசணம் விருது, 2011இல் முதலமைச்சர் விருது என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**11. திருவாளர். பாலசுகுமார்**



நாடகங்கள், கவிதைகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதில் தேர்ச்சி பெற்ற பாலசிங்கம் சுகுமார் அவர்கள் சேனையூர் கிராமத்தைச் சேர்ந்தவர். 1955 ஆம் ஆண்டு பிறந்த இவர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறைத் தலைவராகவும், விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவருடைய படைப்புக்களில் "திருகோணமலைப் பிரதேச நாடக அரங்கப் பாரம்பரியம்" (1994), "உலக நாடக அரங்கு" (1996), "கொட்டியாரம் இலக்கியமரபு" (2010), "பாலசுகுமார் நாடகங்கள்" (1993), "கும்பம்-சேனையூர் ஒரு பண்பாட்டியல் குறிப்பு" (2015) ஆகியன குறிப்பிடத்தக்கவை. அதுமட்டுமல்லாது இவர் எழுதிய "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திடுவோம்" என்னும் நாடகத்திற்கு 1991 ஆம் ஆண்டும், "எங்களை வாழவிடுங்கள்" என்னும் நாடகத்திற்கு 1992 ஆம் ஆண்டும் தேசிய விருது கிடைத்திருந்தமை சிறப்பு. அதுமட்டுமல்லாது "ஈழத்தமிழர் இசையும் நடனமும்", "தம்பலகாமம்" , "ஈழநாட்டியம்" போன்ற நூல்களும் எடுத்துக்காட்டு. தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்கின்ற இவர் இன்றுவரை அனாமிகா பதிப்பகத்தை நடாத்திவருகின்ற இலக்கிய கர்த்தாவாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

**12. கவிஞர். க.யோகானந்தன்**




சம்பூர் கிராமத்தில் 1961 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு கலைப்பட்டதாரி ஆவார். தற்போது பாடசாலை அதிபராகக் கடமையாற்றி வருகின்ற போதிலும் இலக்கிய உணர்வு நிரம்பப் பெற்றவர். கவிதை எழுதும் திறன் வாய்க்கப் பெற்ற இவரின் " உண்மை என்றும் உயிர் பெறும்" (2005) என்னும் கவிதை நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு 2006ஆம் ஆண்டு கிடைத்திருந்தமை சிறப்புக்குரியது. அத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்குரிய படைப்பான "மழலைக்கோர் பாட்டு" என்னும் நூலானது 2006 ஆம் ஆண்டு வெளிவந்திருந்தது.

**13. கலாபூசணம் திரு.கோ. திரவியராசா**



சம்பூரை பிறப்பிடமாகக் (1952 ஆம் ஆண்டு) கொண்ட இவர் ஒரு ஓய்வுநிலை கோட்டக்கல்வி அதிகாரியாவார். பத்திரிகை நிருபராகக் கடமையாற்றியுள்ளதோடு வீரகேசரி, சிந்தாமணி, சஞ்ஜீவி முதலான பத்திரிகைகளுக்கும் ஆக்கங்கள் பலவற்றை எழுதியுள்ளார். வரலாறு சார்ந்த இவரது படைப்புக்களுள் 2010 இல் "மூதூர்" என்னும் நூலும், 2013 இல் "சம்பூர்" என்னும் நூலும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இவரது இலக்கிய சேவைகளைப் பாராட்டி 2014 ஆம் ஆண்டு "கலாபூசணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

**14. கலாபூசணம் K.M.M. இக்பால்**



மூதூரில் 1951 ஆம் ஆண்டு பிறந்த கச்சு முகம்மது முகம்மது இக்பால் அவர்கள் ஒரு பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர். கவிதைகள், சிறுகதைகள், சிறுவர் நாவல்கள் போன்ற இலக்கியங்களைப் படைப்பதில் வல்லவர். "இதய ஒலி" என்னும் கவிதைத் தொகுதி , "நடுக்கடலில்" மற்றும் "தியாகி" என்னும் சிறுவர் நாவல்கள், "விடிவெள்ளி", "மரணத்தின் விளிம்பில்" என்னும் நாவல்கள் போன்றவை இவற்றுள் சிலவாகும். அத்தோடு மூதூரில் அதிகளவு நூல்களை (67) வெளியிட்டு சாதனையும் படைத்துள்ளார்.

தற்போது கிண்ணியாவில் வாழ்ந்து வருகின்ற இவரது இலக்கிய சேவையைப் பாராட்டி கிண்ணியா பிரதேச செயலக கலாச்சார பேரவை 2008, 2009 ஆம் ஆண்டுகளில் "கலைப் பரிதி" மற்றும் "கலை வேந்தன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் பட்டங்களைக் கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அத்தோடு மார்சல் ஆர்ட்ஸ் நிறுவனத்தால் "கௌரவ கலாநிதி" பட்டமும், 2011 இல் "கலாபூசணம் விருது" 2014 ஆம் ஆண்டில் "வித்தகர் விருது" போன்றனவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**15. திரு. ந. சித்திரவேல்**



1948 இல் பிறந்தவரும், பாரதிபுரம் கிளிவெட்டியில் வசிப்பவருமான திருவாளர் நல்லையா சித்திரவேல் ஓய்வு பெற்ற நிதி உதவியாளர். 1968 களில் எழுத்து துறையில் நுழைந்து அநேக சிறுகதைகளையும், குறுநாவல்களையும் எழுதியுள்ளார். இவரின் படைப்புகள் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளிலும் மாணிக்கம் என்னும் சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளன. "நெஞ்சில் ஒரு நிறைவு" (2000 ஆம் ஆண்டு) என்னும் சிறுகதைத் தொகுப்பு இவரது சிறந்த படைப்புக்களுள் ஒன்றாகும். சொந்த மண்ணில் தான் கண்ணுற்ற நிகழ்வுகளை இவர் இங்கு பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**16. கவிஞர்.மு. வதனரூபன்**



சம்பூர் கிராமத்தில் 1977 ஆம் ஆண்டில் பிறந்த முத்துக்குமார் வதனரூபன் அவர்கள் ஓர் ஆசிரியர். கவிதை இலக்கியத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இதன் பிரதிபலிப்பாக இத் துறையில் தடம் பதித்து இவர் எழுதிய கவிதைகள் ஏராளம். அவற்றுள் "குறைந்த பட்ச கோரிக்கைகள்" 2006 இலும், "அடையாளமற்றிருத்தல்" 2013 இலும் கவிதைத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. சமகால நிகழ்வுகளின் துணிகரப் பதிவுகள் இவற்றில் வெளிக்காட்டப்படுகின்றமை சிறப்பம்சம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 17. கவிஞர்.அ. அச்சுதன்



சேனையூர் பதியில் 1979 ஆம் ஆண்டு பிறந்த அரசரெத்தினம் அச்சுதன் நூலக உதவியாளராகவும், ஊடகவியலாளராகவும் கடமையாற்றி வருகின்றார். தனது தந்தையாரைப் போலவே கவிதைகள், கட்டுரைகள் பலவற்றை எழுதிவருகின்றார். தான் சார்ந்த துறையை தனது இலக்கிய மேம்பாட்டுக்கு மிக லாவகமாகப் பயன்படுத்தி வரும் இவர் " இந்த மண்ணில் எங்களையும் மனிதராக வாழவிடுங்கள்" என்னும் சமகால செய்தித் தொகுப்பை 2011 இலும், "விடிகாலைக் கனவுகள்" மற்றும் "பேச்சும் செயலும்" என்னும் கவிதைத் தொகுப்புகளை முறையே 2004, 2015 களிலும் வெளியிட்டுள்ளார். 2016 இல் கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இளங் கலைஞர் விருது, மலையக கலை கலாசார சங்கத்தினால் தேசபிமாணி ஊடக விபோஷனம் விருது, 2013இல் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் சாமசிறி கலாஜோதி விருது, 2015 இல் கலைத்தீப பட்டம், கலைசுடர் விருது, 2013இல் நகர முதல்வர் விருது போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

### 18. கவிஞர் முகைதீன் முகமது அனஸ்



1964 ஆம் ஆண்டு நெய்தல் நகரில் பிறந்த அனஸ் அவர்கள் இலக்கியத்திலும் அரசியலிலும் சமூக அக்கறையிலும் மிகுந்த நாட்டமுடையவர். கவிதைகள், காவியங்கள், சிறுவர் பாடல்கள், குறள்கள், கட்டுரைகள் ஆக்குவதில் வல்லவர். இதுவரை வெளியிட்டுள்ள 20 நூல்களில் "அமைதிப் பூக்கள்", "வசந்தம்", "எந்தன் ஊரே" போன்ற கவிதைத் தொகுப்புகளும் "நாயக காவியம்"(2015) -கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது, "ஊர் துறந்த காவியம்", அஸ்ரப் அமர காவியம்" "தங்கத்துரைக்காவியம்"(2016), அமீன் அருங்காவியம் போன்ற ஏழு காவியங்களும், உமர் நெய்னார் புலவர் கவிதைகள் மற்றும் சீறாப்புராண உரை தொகுப்பு நூல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கவை. அத்தோடு இவர் ஒரே தடவையில் 2015 இல் 9 நூல்களை மூதூரில் வெளியிட்டுள்ளார் என்பது சிறப்பு.

**19. கலாபூசணம் எம். அப்துல் பரீத்**



மூதூரில் 1945 ஆம் ஆண்டு பிறந்தவரும், முத்தூர் பரீத் என அழைக்கப்படுபவருமான இவர் ஒரு இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர். தமிழ் மொழியில் புலமை மிக்க இவர் உமர் நெய்னார் புலவரின் மூத்த சகோதரரின் மகன். தலைசிறந்த மரபுக் கவிஞர். இவரது படைப்புக்களுள் "கினாந்திமுனைக்காவியம்" (2010), அறநெறிநூல் தொகுப்பான "சிந்தைப் பூக்கள்" (2012) மற்றும் "நிகழ்வும் நெறியும்" (2016) என்னும் கவிதை நூல் என்பன குறிப்பிடத்தக்கன. அத்தோடு இவர் 2014ஆம் ஆண்டு "கலாபூசணம் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



**20. கலாபூசணம் செ. விபுணசேகரம்**

கட்டைபறிச்சானைச் சேர்ந்த இவர் 1943 ஆம் ஆண்டு பிறந்தார். ஓய்வு பெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர். தமிழ் இலக்கண இலக்கியத்தில் பாண்டித்தியம் பெற்றவர். அத்தோடு நாட்டாரிசை, நாட்டுக்கூத்து, சிந்துநடைக்கூத்து, இசை, நாடகம் போன்றவற்றில் சிறந்த கலைஞர். இவரது கட்டுரைகள் பல சிறப்புமலர்களில் வெளிவந்துள்ளது. 1967 இல் "இளம் சைவப்புலவர்" பட்டம் மற்றும் 2006 இல் "கலாபூசணம் விருது" கிடைக்கப் பெற்றார். அதுமட்டுமல்லாது 2010 இல் நாட்டாரிசைக்காக "கிழக்குமாகாண முதலமைச்சர் விருது" மற்றும் 2014 இல் "நாட்டாரிசைக் கலாவித்தகர் விருது என்பனவும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. கவிஞர் எஸ்.எல்.எம். முகைதீன்**



மூதூரில் தக்வாநகர் – வட்டம் கிராமத்தில் 1937 ஆம் ஆண்டு பிறந்த இவர் கவிதைகள் எழுதுவதில் சிறந்தவர். இவரது படைப்புக்களில் சில "மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்" என்னும் பெயரில் இவரது மகன் அனஸ் அவர்களால் 2014 இல் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**22. பண்டிதர் வ. நிக்கோலஸ்**



மூதூரை பிறப்பிடமாகக் கொண்ட தமிழறிஞர். 1948 களில் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் சேவையாற்றியுள்ளார். மரபுக் கவிதை பாடுவதில் திறமை மிக்கவர். 1954 இல் "பாலபண்டிதர்" பின்னர் "பண்டிதர்" பட்டம் பெற்று மூதூர் மண்ணுக்கு பெருமை சேர்த்தார். 1965 இல் "நான் கண்ட பாரதி" என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இவரது ஏனைய ஆக்கங்கள் துரதிஸ்டவசமாக அச்சேறாத நிலையில், 1990 ஆம் ஆண்டு மூதூரில் இடம்பெற்ற வன்செயலில் அகாலமரணமடைந்தார்.

**23. கலாபூசணம் ஏ.எஸ். இப்ராஹிம்**



மூதூரில் 1943 இல் பிறந்த இவர் 1970 களில் இருந்து கவிதை, சிறுகதைகள், கட்டுரைகள் போன்றவற்றை தினபதி, தினகரன், வீரகேசரி, சிந்தாமணி, நவமணி, மித்திரன் முதலிய நாளிதழ்களிலும், மூதூரிலிருந்து வெளிவந்த "துலாம்பரம்" என்ற சஞ்சிகையிலும் மற்றும் "ஓசை" என்னும் கவிதை சிற்றிதழிலும் எழுதியுள்ளார். இவரது ஆக்கங்களுள் "பைங்கிளியே" (1967), மகரந்தம் (2005), மற்றும் "தங்கப்பாலம்" என்னும் கவிதைத் தொகுப்புகள் குறிப்பிடத்தக்கவை. 1969 இல் "கலைமேகம்",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கலாசூரி", 2007 இல் "ஆளுநர் விருது", 2009 இல் "கலைநேசன்", 2007 இல் "கலாபூசணம் விருது" பெற்ற இவர் மரபுவழி நின்று கவிதை புனைவதில் வல்லவர்.

## 24. கலாபூசணம் ஏ.எஸ். உபைத்துல்லா



1955 ஆம் ஆண்டு பிறந்த, ஓய்வு பெற்ற அதிபரான இவர் மூதூரைச் சேர்ந்தவர். 1970 கள் தொடக்கம் சிறுகதைகள், நாடகம், கட்டுரைகள், இலக்கிய விமர்சனங்கள் மூலமாக இலக்கிய உலகில் தடம் பதித்து வந்துள்ளார். "ஊர்வலம்" என்னும் சிறுகதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவருடைய ஆக்கங்கள் தினகரன், தினக்குரல், வீரகேசரி, நவமணி முதலான பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

வாய்மொழியாக பேணப்பட்டு வந்த கொட்டியாரப்பற்றின் முதுபெரும் காவியங்களான கங்கைக்காவியம், குறிஞ்சாமுனைக் காவியம் என்பனவற்றை 1997 இல் அச்சுவாகனம் ஏற்றிய பெருமை இவருக்குரியது. அத்தோடு தினகரன் பத்திரிகை நிருபராகவும் (1979-89) கடமையாற்றியுள்ளார். மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராகவும் உள்ள இவரது கலை இலக்கிய சேவையை பாராட்டி 2016 இல் "வித்தகர் விருது", "கலாபூசணம் விருது" கிடைக்கப் பெற்றிருந்தது. இவருடைய ஆக்கங்களில் 2008 ஆம் ஆண்டு வெளிவந்த "ஜலசமாதி" என்னும் சிறுகதைத் தொகுப்பு, "நாகம்மாள் நாவல் ஒரு கண்ணோட்டம்" என்பன குறிப்பிடத்தக்கது.

## 25. கவிஞர் ஜீ.எம். பரம்சோதி



மலைமுந்தல் கிராமத்தை பிறப்பிடமாகவும் பாலத்தடிச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 1980-90 களில் இலக்கிய உலகில் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். இலங்கை வானொலி, ஒலிமஞ்சரி, வீரகேசரி, தினக்குரல் முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களுக்கு கவிதை எழுதி வந்துள்ளார். இவருடைய மெல்லிசைபாடல்கள் இலங்கை வானொலியில் மிகப் பிரசித்தமானவை. தான் சார்ந்துள்ள பிரதேச மக்களின் அவலங்களை கவிதைகள் மூலம் வெளிப்படுத்திய இவர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த "பொதுமை" என்னும் சஞ்சிகையின் உதவி ஆசிரியராகவும் இருந்துள்ளார். கிராமசேவை அதிகாரியாக இருந்த அன்னாரின் பெயரில் தற்போது "கவிஞர் பரம்சோதி கல்வி நிறுவனம்" தொண்டாற்றி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அன்னாரது 9 ஆவது நினைவையொட்டி அவரது கவிதைகள் 2016 இல் "நாங்கள் விட்டில்கள் அல்ல" என்னும் பெயரில் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**26. கலாபூசணம் எம்.எஸ். அமானுல்லா**



மூதூரில் 1946 ஆம் ஆண்டில் பிறந்த இவர் ஒரு ஓய்வு பெற்ற அதிபராவார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த உதயசூரியன் பத்திகையில் எழுதிய "இருதுளிக் கண்ணீர்" என்னும் சிறுகதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்தார். கிராமிய மணம்கமழும் பல சிறுகதைகளை தந்துள்ள இவரது படைப்புக்களுள் "வரால்மீன்கள்" என்னும் சிறுகதைத் தொகுதிக்கு 2007 ஆம் ஆண்டு "இலங்கை அரச இலக்கிய விருது" கிடைத்திருந்தது. மூதூர் இலக்கிய வட்டத்தின் தலைவராக இருந்துவருகின்ற இவருக்கு 2010 ஆம் ஆண்டு "கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது" மற்றும் "கலாபூசண விருது" என்பன கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

**27. கவிஞர் எம்.எம். ஜவாத்**



மூதூர் நெய்தல் நகரில் 1973 இல் பிறந்தவர். பல்கலைக்கழக பட்டதாரியான இவர் எழுதியுள்ள கவிதைகள் பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன. இவரது சிறப்பான படைப்புக்களாக 2001 இல் "பொய் முகங்கள்" மற்றும் 2002 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"தரிசனம்" என்னும் கவிதை நூல்களும், மூன்றாவது சிந்தனை, வாசிப்பு கலாச்சாரம் போன்ற நூல்களும் வெளியிடப்பட்டுள்ளது.

## 28. கவிஞர் இரா. இரத்தினசிங்கம்



சேனையூரில் 1956 ஆம் ஆண்டு பிறந்த இரா. இரத்தினசிங்கம் அவர்கள் ஒரு ஓய்வு பெற்ற அதிபர். நாடகம் மற்றும் கவிதைத் துறையில் மிகவும் ஈடுபாடு கொண்ட இவருடைய பல கவிதைகள் சேனையூர் இரா.இரத்தினா என்னும் பெயரில் தினக்குரல், வீரகேசரி, சுடரொளி, மலைமுரசு முதலான பத்திரிகைகள் மற்றும் வானொலி மூலமாகவும் வெளிவந்துள்ளன. இவரது கவிதைத் தொகுப்புக்களான "பொன்னாவரை" 2014 ஆம் ஆண்டிலும், "ஓய்வு" 2016 ஆம் ஆண்டிலும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 29. திருவாளர். எம்.ஏ. சமது



மூதூர் நெய்தல் நகரை சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபரான இவர் 1938 ஆம் ஆண்டு பிறந்தவர். பல சமூக முன்னேற்றச் செயற்பாடுகளில் ஈடுபடுவதோடு 2003 ஆம் ஆண்டு வெளியிட்ட "கொட்டியாபுரப்பற்று வரலாறு" என்னும் நூல் மூலம் தற்போதைய மூதூர், சேருவில, ஈச்சிலம்பற்று பிரதேசங்களின் வரலாற்றின் பெரும்பாலானவற்றை எமக்கு அறியத் தந்துள்ளார். இவரது பணி அளப்பெரியதொன்றாகும். இவரது "பெரும் பயணம்" என்னும் நூல் (2017) இல் வெளிவந்திருந்தது.

## 30. மூதூர் முறாசில்



மூதூர் ஆலிம்சேனை யில் 1970 ஆம் ஆண்டு பிறந்த அமீர் என்னும் பெயருடைய இவர் ஒரு இலங்கை தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தரும் ஊடகவியலாளருமாவார். இவரது ஆக்கங்களில் "முஸ்லீம்களும் சமகாலப் பிரச்சினைகளும்- சில பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம்-1" என்னும் கட்டுரைத்தொகுப்பு 2013 ஆம் ஆண்டிலும், "எரிகிடங்கைப் பயந்து கொள்வோம்" என்னும் நூல் 2014 ஆம் ஆண்டிலும் வெளிவந்திருந்தது..

**31. சைவசித்தாந்த பண்டிதர் அ. பரசுராமன்**



ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் ஆநெய்த்தீவு என்னும் கிராமத்தில் 1938 ஆம் ஆண்டில் பிறந்த இவர் இந்துசமய சேவைக்கால ஆலோசகராகவும், கோட்டக்கல்வி பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். 1992 – 1993 காலப்பகுதியில் கொழும்பு மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெறுகின்ற இந்துசமய ஆசிரியர்களுக்கான எழுத்தாளராகச் செயற்பட்டு ஆறு நூல்களை எழுதியுள்ளதாக அறியமுடிகின்றது. பேராசிரியர். சி. பத்மநாதன் அவர்களின் " இலங்கையில் இந்துக் கோயில்கள்" என்னும் நூலில் காணப்படும் வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் பற்றிய இவரது கட்டுரை முக்கியமானதொரு வரலாற்று ஆவணமாகும். இவர் "சைவப்புலவர் பட்டம்" 1970 ஆம் ஆண்டிலும், "கலாபூசணம்" 2005 இலும், "தேசகீர்த்தி" பட்டத்தை 2007 இலும், "திருக்குறள் திலகம்" என்னும் பட்டத்தை 1970 இலும், "சைவசித்தாந்த பண்டிதர்" என்னும் பட்டத்தை 2014 ஆம் ஆண்டிலும்பெற்றுக் கொண்டுள்ளமை சிறப்பு. எழுத்துத்துறையில் மட்டுமல்லாது அரசியலிலும் தடம் பதித்த இவர் 2008-2012 காலப்பகுதிகளில் கிழக்கு மாகாணசபை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

**32. திருவாளர். எம்.சி.எம். செரீப்**



மூதூர் அக்கரைச்சேனை- கேணிக்காடு என்னும் கிராமத்தில் 1960 ஆம் ஆண்டு பிறந்த எம்.சி.எம். செரீப் அவர்கள் ஒரு பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. தற்போது கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளராக பதவி வகிக்கும் இவர் 2004 ஆம் ஆண்டு "சங்கமம்" என்னும் நூலையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 ஆம் ஆண்டு "சுவடுகள் பாகம்-1" என்னும் வரலாற்று நூலையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூல் மூதூர் பிரதேசத்தினுடைய வரலாற்றின் ஒரு பகுதியை தன்னகத்தே கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 33. கலாபூசணம் அருளம்பலம் குகராசா



சம்பூரில் 1951ஆம் ஆண்டு பிறந்த இவர் கவிதை, காவியம், நாட்டுக்கூத்து, நாடகத்துறை, இந்து ஆலயங்களுக்கான கும்மி, ஊஞ்சல்பாட்டு இயற்றல் போன்றவற்றில் தனித்திறமை படைத்தவர். இவரின் "சுபத்திரா கல்யாணம்", வள்ளி திருமணம்", பாஞ்சாலி சபதம்" என்னும் நாட்டுக்கூத்துக்கள் சிறப்பாகப் பேசப்பட்டவை. இவரது படைப்புக்களுள் திருக்கரசைப் புராணத்துக்கான உரையும், "திருமுருகன் திருப்பாடல்கள்", "கங்குவேலி ஆதிசிவன் பத்து" என்பன சிறப்பானவை. இளம் சைவப்புலவர் பட்டம் பெற்ற இவர் 2014 ஆம் ஆண்டு "கலாபூசணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

### 34. கவிஞர் தில்லைநாதன் பவித்ரன்




மூதூரில் 1990 ஆம் ஆண்டு பிறந்த இவர் கவிதைகள் புனைவதில் தனிச் சிறப்புப் பெற்றவர். வீரகேசரி, தினக்குரல், சுடரொளி எனப் பல பத்திரிகைகளுக்கும் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவருடைய "ரசவாதம்", "குறி இடல்" என்னும் கவிதைத் தொகுதிகள் 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டது. "பகிர்வுகள்" என்னும் இலக்கிய அமைப்பின் ஏற்பாட்டாளராகவும் உள்ள இவருக்கு கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2017 ஆம் ஆண்டு இளங்கலைஞர் விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35. கவிஞர் பு. ஜெயாகரன்**



கட்டைபறிச்சானில் 1975 ஆம் ஆண்டு பிறந்த இவர் மதுமதுரன் என்னும் புனைப் பெயரில் இலக்கிய உலகில் வலம் வந்து கொண்டிருக்கின்றார். கவிதைகள், நாடகங்கள், மற்றும் பாடலாக்கம் போன்றவற்றில் கைதேர்ந்த ஜெயாகரனின் படைப்புக்களுள் 2010 இல் வெளியான "கீதாசாரசாரம்" என்னும் கவிதை நூல் ஒரு வித்தியாசமான படைப்பு. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அரச பணியாளர்களுக்கான கவிதைப் போட்டியில் பல பரிசுகளையும் வென்றுள்ளார். தற்போது "மரங்கொத்தி" என்னும் சமூக விழிப்புணர்வு ஏட்டையும் மற்றும் "பொலி" என்னும் முத்திங்கள் பா இதழையும் வெளியீடு செய்து இலக்கியத் துறையை வளர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**36. கவிதாயினி எம். எஸ். பஸ்மிலா**



மூதூரில் தக்வாநகரில் 1990 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஓர் ஆசிரியர். கவிதைத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவருடைய படைப்புக்களுள் "நிழலாகும் நிஜங்கள்" என்னும் கவிதைத் தொகுப்பு 2012 இல் வெளியானது.

**37. வைத்தியகலாநிதி அ. ஸதீஸ்குமார்**



சம்பூரைச் சேர்ந்த வைத்தியகலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் (இந்நூலாசிரியன்) 1982 ஆம் ஆண்டில் பிறந்தவர். வைத்தியராகக் கடமையாற்றி வருகின்ற இவரால் 2013 ஆம் ஆண்டில் "சம்பூர் பிரதேசத்தின் தொன்மை" என்னும் வரலாற்று நூல், (இந்நூலுக்கு 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற கிழக்கு மாகாண கலை இலக்கிய விழாவில் ஆய்வு துறையில் "சிறந்த தமிழ் நூல் எழுத்தாளருக்கான விருது" கிடைத்தது.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு 2014 ஆம் ஆண்டு "பத்திரகாளி அம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும்" என்னும் சம்பூர் பத்திரகாளியம்மனைப் பற்றிய வரலாற்று நூலும், 2015 இல் "கொட்டியாபுரத்து சிங்கம்" என்னும் வரலாற்று குறுநாவலும், 2016 இல் "நிலக்கரி மின் ஆலையில் சம்பூர்" என்னும் (சம்பூரில் அமைக்கப்பட இருந்து தடைப்பட்ட நிலக்கரி அனல்மின் நிலையம் பற்றியது) நூலும், அதேயாண்டில் "கொட்டியாரபுரப்பற்று முதுசங்கள்" என்னும் வரலாற்று நூலும் வெளியிடப்பட்டிருந்தது. (இந் நூலுக்கு 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற கிழக்கு மாகாண கலை இலக்கிய விழாவில் "சிறந்த தமிழ் நூல் எழுத்தாளருக்கான விருது" கிடைத்தது)

மேலும் பல வரலாற்றுக் கட்டுரைகள் வீரகேசரி பத்திரிகையிலும், கலைக்கேசரி மாத இதழ்களிலும் வெளிவந்துள்ளன. அத்தோடு இவரது சமூக சமய சேவைகளைப் பாராட்டி அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் "சாமாஸ்ரீ தேசமான்ய விருது" 2013 ஆம் ஆண்டிலும், கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் "இளங்கலைஞர் விருது" 2016 ஆம் ஆண்டிலும் கிடைத்திருந்தது.

### 38. திருவாளர் முகமட் ராபி



மூதூரில் (நொக்ஸ் வீதி) 1966 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு பாடசாலை ஆசிரியர். எழுத்தாளரான இவரது பல சிறுகதைகள் தினக்குரல், மீள்பார்வை போன்ற பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன.

புதிய சிந்தனையும் நவீனத்துவம் மிக்கதுமான இவரது சிறுகதைத் தொகுதிகளுள் " இலுப்பம் பூக்கள்" 2014 ஆம் ஆண்டிலும், "முயல்களும் மோப்ப நாய்களும்" 2016 ஆம் ஆண்டிலும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 39. மூதூர் அ.ச. பாய்வா



1948 ஆம் ஆண்டு மூதூரில் பிறந்த இவர் இப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மட்டக்களப்பில் வசித்து வருகின்றார். தமிழ், ஆங்கிலம் போன்ற மொழிகளில் கவிதைகள், சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ள இவரது ஆக்கங்களில் "பிணத்தில் அதிகமாய் ஈக்கள் மொய்க்கத் தொடங்குகின்றன" மற்றும் " எட்டாவது ஸ்வரம்" போன்றவை சிலவாகும். இவரது "ஆத்ம விசாரம்" என்னும் சிறுகதைத் தொகுப்புக்கு 2008 இல் இலங்கை சாகித்திய விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

### 40. கவிஞர் ப. சுஜந்தன்



சம்பூரில் 1982 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு கலைப்பட்டதாரி. தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார். புரட்சிகரமான கவிதைகள் எழுதுவதில் திறமைவாய்ந்த இவரது கவிதைத் தொகுப்புக்களுள் "மறுக்கப்பட்ட நியாயங்கள்" 2006 ஆம் ஆண்டிலும், "நிலம் பிரிந்தவனின் கவிதை" 2011 ஆம் ஆண்டிலும் (இந்நூலுக்கு இலங்கை சாகித்திய விருது கிடைத்தது), "மண்டியிடா மானம்" 2015 ஆம் ஆண்டிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### 41. கலாபூசணம் க. ஜெயநாதன்



சம்பூரைச் சேர்ந்த இவர் ஓர் ஓய்வு பெற்ற அதிபர். 1972 கள் தொடக்கம் கவிதை பாடிவருகின்ற இவர் நடிப்புத்துறையிலும் பாடலாக்கத்திலும் திறமை படைத்தவர். காசியப்பித்தன் என்னும் பெயரில் எழுதிவருகின்ற இவருடைய வெளியீடான "அற்றைத்திங்கள் கவிதைகளும் பாடல்களும்" என்னும் நூல் 2016 இல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இவருடைய கலை சேவையை பாராட்டி 2017 ஆம் ஆண்டு கலாபூசணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42. கவிஞர் சு. சிவசங்கரன்**



கட்டைபறிச்சானைச் சேர்ந்த இவர் 1975 ஆம் ஆண்டு பிறந்தவர். கிழக்கு பல்கலைக்கழக விவசாயபீடத்தின் உயிர்முறைகள் தொழில்நுட்ப விரிவுரையாளராவார். "கொட்டிய ஆரன்" என்னும் புனைப்பெயரில் சமய மற்றும் எழுச்சிக் கவிதைகள் பலவற்றை எழுதிய இவருடைய "சிறகலரும் சிறுபூக்கள்" என்னும் கவிதைத்தொகுப்பு 2016 ஆம் ஆண்டு வெளிவந்திருந்தது.

**43. கலாபூசணம் த. சிதம்பரப்பிள்ளை**



பள்ளிக்குடியிருப்பைச் சேர்ந்த ஓய்வுநிலை அதிபரான இவர் கவிதை, பாடலாக்கம், நாடகம், நாட்டுக்கூத்து போன்றவற்றில் திறமை படைத்தவர். 1948 ஆம் ஆண்டு பிறந்த இவருடைய படைப்புக்களுள் " சபதங்கள்" (பாஞ்சாலி சபதம் நாட்டுக்கூத்து) 2000 ஆம் ஆண்டிலும், "கொம்புமுறிக்கொம்பு விளையாட்டுப் பெருவிழாவும் சிறுதெய்வ வழிபாடுகளும்" மற்றும் "பத்தினியம்மன் குளிர்த்திக் காவியம்" என்னும் நூல்களை 2015 ஆம் ஆண்டிலும், "விரியும் விம்பங்கள்" என்னும் கவிதைநூல் 2016 இலும் வெளிவந்திருந்தமை சிறப்பு. முன்னாள் வெருகலம்பதி ஆலய பரிபாலனசபைத் தலைவராகவும் இருந்துள்ள இவருக்கு 2014 ஆம் ஆண்டு " கலாபூசணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**44. திருவாளர் A.W. முஹ்சீன்**



மூதூர் ஜாயா வீதி (குளத்தடித் தெரு) பகுதியில் 1960 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு ஓய்வுநிலை ஆசிரியர். 1990 காலப்பகுதிகள் தொடக்கம் எழுத்துத்துறையில் மிளிர்ந்ததோடு, "மருதூர் பசீத்" என்னும் புனைப்பெயரிலும் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரது படைப்புக்களாக 2004 இல் " சோனகதேசம்", 2006 இல் "இலங்கை முஸ்லீம்களின் பூர்வீகம்", 2016 இல் "பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல்", "ஜனநாயகம்", "இங்கினையும் ஒரு மஹ்சர்" போன்ற கட்டுரைகளும் சிறுகதைகளும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 45. திருவாளர் ஜமால்டீன் நஜாத்



மூதூர் பெரிய பாலத்தைச் சேர்ந்த இவர் 1979 ஆம் ஆண்டு பிறந்தவர். மூதூர் பிரதேச சபையின் செயலாளராக (2016) கடமையாற்றி வருகின்றார். எழுத்தாற்றல் மிக்க இவர் எழுதிய "எட்டாவது பாராளுமன்ற தேர்தலும் மக்கள் தீர்ப்பும்" என்னும் அரசியல் தொடர்பான நூல் 2016 ஆம் ஆண்டு வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசியலோடு மூதூர் சம்பந்தப்பட்ட பெருமளவிலான தகவல்களும் இதில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 46. சோதிடக் கலாமாமணி செ. லோகராஜா



பாலத்தடிச்சேனை கிராமத்தை பிறப்பிடமாகவும் (1956 ஆம் ஆண்டு), முன்னம்போடிவெட்டை கிராமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மூதூர் வலய பிரதி கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்றார். இவரது பல கவிதைகள், கட்டுரைகள் வானொலியிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. 1982 ஆம் ஆண்டில் "கலைமாறன்" என்னும் பட்டமும், சோதிடத்துறையில் புகழ்பெற்று விளங்கியமைக்காக 2015 இல் "சோதிடக் கலாமாமணி" என்ற பட்டமும் பெற்றுள்ளார்.

இவரது படைப்புக்களுள் 2016 இல் "நிலவே முகம் காட்டு" என்னும் கவிதைத் தொகுதியும், "தென்பொதிகைச் சந்தனமே" என்னும் கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 47. திருவாளர் ஆ. செல்வநாயகம்



பள்ளிக்குடியிருப்பை சேர்ந்த இவர் 1955 ஆம் ஆண்டு பிறந்தவர். முதுகல்விமானி பட்டம் பெற்றவரும், இலக்கிய ஆர்வலரும், பிரதிக்கல்வி பணிப்பாளருமாகிய இவரது துறைசார் ஆய்வு படைப்புக்களாக "பாடசாலைத் தலைமைத்துவம்" 2015 ஆம் ஆண்டிலும் "கற்பித்தல் நுட்பங்கள்" 2016 ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டமை சிறப்பு. இந் நூல்களை விட "அகவிழி" "ஆசிரியம்" ஆகிய சஞ்சிகைகளிலும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

### 48. கவிதாயினி பாத்திமா ரொசானா ரசீம்



மூதூர் ஆலிம் நகரை சேர்ந்தவரும், 1993 ஆம் ஆண்டு பிறந்த பாத்திமா ரொசானா ரசீம் அவர்கள் தற்பொழுது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றி வருகின்றார். வளர்ந்துவரும் சிறுகதை எழுத்தாளரான இவர் கவிதை எழுதுவதிலும் தேர்ந்தவர். இவருடைய "பயிரொன்று கதிராகின்றது" என்னும் சிறுகதைத் தொகுதி 2016 இல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

### 49. மஸ்கூர் சுகைதா




1960 ஆம் ஆண்டு அக்கரைச்சேனையில் பிறந்த எழுத்தாளரான இவர் "கலைத்தீபம்" (2008), "கவிக்குயில்" (2012) என்னும் விருதுகளைப் பெற்றுள்ளதோடு தனது தொகுப்புக்களை நூலுருப் படுத்திக் கொண்டிருக்கும் ஒருவராவார். அத்தோடு தனது தந்தையாரான எம்.ஐ.எம். ஆலிம் அவர்களின் சிறுகதைகளைத் தொகுத்து "மர்கூம் மஸ்கூர் கதைகள்" என்னும் பெயரில் 2004 இல் வெளியீடு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**50. திருவாளர் எகதார் நளீம்**



மூதூரில் 1980 ஆம் ஆண்டு பிறந்த நளீம் அவர்களால் "ஊமைக்காவியங்கள்" என்னும் கவிதை நூல் வெளியிடப்பட்டது.

**51. திருவாளர் அப்துல்சமது முபாரக்**

மூதூர் அக்கரைச்சேனையில் 1957 ஆம் ஆண்டு பிறந்த இவர் ஒரு ஓய்வு பெற்ற நூலகர். இலக்கியத்திலும் ஆவணப்படுத்தலிலும் அதிக நாட்டம் கொண்ட இவர் சாகரத் தென்றல்(1993), இளம்தென்றல்(1992) என்னும் இரு கதம்ப இதழ்களை வெளியீடு செய்துள்ளார்.



**52. அருட்பணி. சீ.றோ. ஜெயரெத்தினம் :-**



1974 ஆம் ஆண்டு மூதூரில் பிறந்தவர். அருட்தந்தையான இவரது "மறக்கப்பட்ட மகான் அருட்பணி மைக்கல் டி மெல்லோ" என்னும் பெயர் கொண்ட மொழிபெயர்ப்பு தொகுப்பு நூல் 2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது.

**53. திரு. அந்தோனி இராசேந்திரம் :-**



1934 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் பிறந்து, மூதூர் இக்பால் வீதியில் வசித்து வருகின்ற ஓய்வுநிலை அதிபராவார். கலை இலக்கிய துறையில் மிகவும் ஈடுபாடு கொண்ட இவரது நூலான "மூதூரில் எனது பணிகளும் பாடுகளும்" 2016 ஆம் ஆண்டு வெளிவந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. கவிஞர் த. தவரூபன்



ஈச்சிலம்பற்றையை சேர்ந்த ஷரூபன் அவர்கள் 1982 ஆம் ஆண்டு பிறந்தவர். பத்திரிகை நிருபராகக் கடமையாற்றி வருகின்ற இவர் இலக்கிய துறையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். 2015 ஆம் ஆண்டு "யன்னலோரத்தில் நிலா" எனும் கவிதை நூலையும், 2016 இல் "ஆயுதப் பூ" என்னும் சிறுகதைத் தொகுப்பையும், 2017 ஆம் ஆண்டு "இரவைத் தேடும் விடியல்" என்னும் கட்டுரை தொகுப்பையும் வெளியீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

## 55. திருவாளர் மஸ்ஹூர்.எம். மனாசீர்



1990 ஆம் ஆண்டு நெய்தல் நகர் கிராமத்தில் பிறந்தார். கலைப்பட்டதாரியான இவரது "விழுதுகள் பாகம் 1" (மூதூரின் முதன்மைகள்) என்னும் வரலாற்று நூலானது 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

## 56. திருவாளர். இம்தியாஸ்



ஜனாப். இம்தியாஸ் மூதூரை சேர்ந்த இவருடைய மொழிபெயர்ப்பு நூலான "பிரச்சனைகளை கொஞ்சம் தள்ளி வைப்போம்" என்னும் கட்டுரை தொகுப்பு 2017 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

## 57. திருவாளர் எம்.எம். அனீஸ்



மூதூர் நெய்தல் நகரில் 1976 ஆம் ஆண்டு பிறந்த பட்டதாரி ஆசிரியரான இவர் இலக்கிய துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவருடைய "சந்தனச் சாந்து" என்னும் நூல் 2017 ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**58. திருவாளர் ஜுனைட்.எம். இஹ்சான்**



1994 ஆம் ஆண்டு பிறந்த இவர் நெய்தல் நகரை சேர்ந்தவர். ஆவணப்படுத்தல் மற்றும் இலக்கிய விமர்சனம் செய்வதில் ஆர்வம் கொண்ட பல்கலைக்கழக பட்டதாரியான இவரின் " அல்குர்ஆனும் விஞ்ஞானமும்" கட்டுரை தொகுப்பு நூல் 2018 இல் வெளியீடு செய்யப்பட்டது.

**59. கவிஞர் .வி. நவரெத்தினராஜா**



சேனையூரில் 1958 ஆம் ஆண்டு பிறந்த ஓய்வு நிலை அதிபரான இவர் கவிதை, நாடகத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவரது "பூத்தது தமிழ்" என்னும் கவிதை நூல் 2018 ஆம் ஆண்டு வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**60. மூதூர் ஜாபீர்**



மூதூர் அக்கரைச்சேனையை (1954ஆம் ஆண்டு) பிறப்பிடமாகக் கொண்ட இவர் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர். இவரது படைப்புகளுள் ஒன்றான "மாயமனிதன்" என்னும் சிறுகதைப் புத்தகம் 1980இல் வெளிவந்திருந்தது.

இவ்வாறாக காலத்தின் கண்ணாடிகளைப் பொருத்திய இலக்கியவாதிகள் யாவரும் நூல்கள் வெளியிட்டவர்கள் என்ற ரீதியில் இங்கே என்னால் வரையறை செய்யப்படுகின்றார்கள். அநேகமான தகவல்கள் 2015 ஆம் ஆண்டுக்குள் பெறப்பட்டிருந்த போதிலும், 2016,2017,2018ஆம் ஆண்டு தகவல்களையும் குறிப்பிடத்தக்களவு சேர்த்துள்ளேன்.

இவர்களை விட சேனையூரை சேர்ந்த கலாபூசணம் வில்லுப்பாட்டு வீரசிங்கம், கலைவாணி இசைக்கழகத்தை ஆரம்பித்தவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைபறிச்சானை சேர்ந்தவருமான கலாபூசணம் ச.செல்வநாயகம், வாத்தியங்களை இசைப்பதில் வல்லவரான கட்டைபறிச்சானை சேர்ந்த கலாபூசணம் திரு.செ. சசிதரன், பாட்டாளிபுரத்து கவிஞர் கலாபூசணம் திரு.வைரன் பாக்கியராசா போன்றோர்களுடன் இன்னும் ஏராளமான கவிதை எழுதுவதில் வல்லமை படைத்தவர்கள். பலரின் ஆக்கங்கள் வெளிவரக்காத்துக் கொண்டிருக்கின்றமை சிறப்பான விடயமாகும்.

குறுந்திரைப்படத் துறையினர் (சம்பூர் திரு.ம.சச்சிதானந்தம், திரு.சு.ராஜரதன், கங்குவேலி பரமேஸ் போன்றோர்), நாடகக் கலைஞர்கள் இசைக்கலைஞர்கள், கொட்டியாபுரப்பற்றெங்கும் பரந்து காணப்படுகின்றமை இம் மண்ணுக்கேயுரிய தனித்துவமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றுள் ஏதேனும் தவறவிடப்பட்டிருப்பின் பெரிய மனதுடன் மன்னிக்கவும். ஏனெனில் முழுமையான வரலாறுகள் எமக்கு கிடைப்பதில் பாரிய சிரமம் உள்ளது. அத்தோடு வரலாறுகள் ஒருபோதும் முழுமை பெறுவதில்லையே................. என்று திருப்தியடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# கொட்டியாபுரப்பற்று அரசியல் பிரதிநிதித்துவங்கள்

இலங்கை தீவை ஆக்கிரமிப்புச் செய்து ஆட்சிபுரிந்த போர்த்துக்கேயர் இங்கு வரும்போது கண்டி, யாழ்ப்பாணம், கோட்டே என்னும் பிரதான இராச்சியங்களும் பல சிற்றரசுகளும் காணப்பட்டன. போர்த்துக்கேயரைத் தொடர்ந்து ஒல்லாந்தர், பிரான்சியர், பின் ஆங்கிலேயர் என ஒருவர் பின் ஒருவராக இலங்கை மீது ஆதிக்கம் செலுத்தியபோதும் ஆங்கிலேயராலேயே இத்தீவு முழுவதும் ஒரு குடையின் கீழ் கொண்டுவர முடிந்தமை வரலாறு.

கி.பி. 1505 இல் இலங்கையில் காலடி எடுத்து வைத்த போர்த்துக்கேயரைத் தொடர்ந்து, ஒல்லாந்தர் கி.பி. 1796 வரை இலங்கையின் சில பகுதிகளை தமது அதிகாரத்தின் கீழ் அடக்கியாண்டனர். பின்னர் இலங்கை முழுவதையும் கி.பி. 1815 தொடக்கம் தமது பூரண ஆதிக்கத்தை நிலைநாட்டிய பிரித்தானியர் படிப்படியாக இத்தீவிலுள்ள மக்களுக்கு அவர்களது உரிமைகளை வழங்கத் தொடங்கி இருந்தனர். இதற்காக கோல்புறூக் (1833), குறுப் - மக்கலம் (1912), மன்னிங் அரசியல் திட்டம் (1921 , 1924), டொனமூர் (1931), சோல்பரி (1947) போன்ற பல அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. (1)

பிரித்தானியர் ஆட்சியின் போது நிர்வாக இலகுவாக்கலுக்காக கி.பி. 1833 ஆம் ஆண்டில் இலங்கையானது வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மத்தி என ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1845

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் வடமேல் மாகாணமும், 1866 இல் ஊவா மாகாணமும், 1873 இல் வடமத்திய மாகாணமும், 1889 இல் சப்பிரகமுவ மாகாணமும் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் பொறுப்பாக அரசாங்க அதிபர்கள் இருந்துள்ளனர். இவர்களின் கீழ் மாவட்டங்களுக்குப் பொறுப்பாக உதவி அரசாங்க அதிபர்கள் நிர்வாக அலுவல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

1931 ஆம் ஆண்டில் டொனமூர் அரசியல் யாப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 18 மாவட்டங்களுடன், ஒன்றன் பின் ஒன்றாக புதிய பல மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இறுதியாக 1984 இல் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்துடன் தற்போது மொத்தமாக 25 நிர்வாக மாவட்டங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1921 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மன்னிங் சீர்திருத்தத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சட்டநிரூபண சபைக்காக (The legislative council) 1921.03.31 இல் கிழக்கு மாகாணத்துக்கு நடாத்தப்பட்ட தேர்தலில் திரு.ஈ. தம்பிமுத்து என்பவர் போட்டியின்றி தெரிவாகினார். இதேபோல 1924 இல் இடம்பெற்ற சீர்திருத்தத்தின் கீழ் சட்டநிரூபண சபைக்காக 1924.09.27 அன்று நடாத்தப்பட்ட தேர்தலில் திரு.எம்.எம். சுப்பிரமணியம் என்பவர் தெரிவுசெய்யப் பட்டிருந்தார். 1931 இல் இடம்பெற்ற சீர்திருத்தத்திற்கு அமைய அரசாங்க சபைக்கு திருகோணமலை- மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து திரு.எம்.எம். சுப்பிரமணியம் அவர்கள் தெரிவாகினார். இவ்வாறே 1936 இல் அரசாங்க சபைக்கு திருகோணமலை- மட்டக்களப்பு தேர்தல் தொகுதியிலிருந்து திரு.ஈ.தம்பிமுத்து என்பவர் தெரிவாகியிருந்ததாகவும் அறியமுடிகின்றது. (2)

1947 ஆம் ஆண்டு அறிமுகமாகிய சோல்பரி அரசியல் சீர்திருத்தத்தின் படி இலங்கையின் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதன்போது திருகோணமலை மாவட்டமானது திருகோணமலை மற்றும் மூதூர் ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளை மாத்திரம் கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தொடர்ந்து மக்கள் பிரதிநிதித்துவத்தின் தேவைகள் உணரப்பட கட்சிகள் உருவாகத் தொடங்கின. ஆனாலும் இலங்கையர்கள் என்ற ரீதியில் தேசிய தலைவர்களால் "இலங்கை தேசிய காங்கிரஸ்" கட்சியானது சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களை தலைவராகக் கொண்டு 1919.11.19 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1912 ஆம் ஆண்டில் சட்டவாக்கக் கழகத்தில் 3:3 என்றிருந்த தமிழ்-சிங்கள பிரதிநிதித்துவம் 1920 சீர்திருத்தத்தின் பின்னர் சிங்களவர்களுக்கு 14 ஆசனங்களும், தமிழர்களுக்கு 4 ஆசனங்களும் கிடைத்த நிலையில் தமிழ்-சிங்கள தலைவர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு தமது அரசியல் கோரிக்கைகளை தனித்தனியே முன் வைக்கத் தொடங்கினர். இதன் பலாபலனாக 1921 ஆம் ஆண்டு "தமிழ் மகாஜன சபா" உருவாக்கப்பட்டது.

தொடர்ந்துவரும் காலங்களில் பல சிறிய கட்சிகள் ஒன்றிணைந்து திரு. டி.எஸ். சேனாநாயக்கா தலைமையில் 1946.02.06 இல் ஐக்கியதேசியக் கட்சி (UNP) உருவாக்கப்பட்டது. அத்தோடு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1944.08.29 இலும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 1949.12.18 இலும், சிறிலங்கா சுதந்திரகட்சி 1951.09.02 இலும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1981.09.21 இலும் அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் 2008 இலும் (பின்னர் இதன் பெயர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என மாற்றப்பட்டது) தோற்றுவிக்கப்பட்டன.

## 3.1 பாராளுமன்ற பொதுத்தேர்தல்கள்

இவ்வாறு 1944 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்புக்கிணங்க இலங்கைத் தீவானது 89 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பாராளுமன்ற ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. இக்காலத்தில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான சம்மதத்தை பிரித்தானிய மகாராணியின் நிர்வாகம் 1947.06.23 இல் அறிவித்திருந்தது. இதன் தொடர்ச்சியாக 1947ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற பொதுத்தேர்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23.08.1947 - 20.09.1947 வரை 19 நாட்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதில் 89 தேர்தல் தொகுதிகளில் இருந்தும், பிரித்தானிய அரசாங்கத்தின் 6 பிரதிநிதிகளும் அடங்கலாக 95 உறுப்பினர்கள் தெரிவாகினர். (3)

இதன்படி திருகோணமலை மாவட்டமானது திருகோணமலை, மூதூர் என்னும் இரு தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இதன்படி நடைபெற்ற முதலாவது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதி சார்பாக ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிட்ட கிண்ணியாவைச் சேர்ந்த ஜனாப். அபூபக்கர் அவர்களும், திருகோணமலை தொகுதியிலிருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் (வீட்டு சின்னம்) போட்டியிட்ட திரு. எஸ். சிவபாலன் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதியிலிருந்து சுயேட்சை வேட்பாளரான ஜனாப்.எம்.ஈ.எச்.முகமது அலி அவர்களும், திருகோணமலை தொகுதியிலிருந்து தமிழரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சி) யை சேர்ந்த திரு. என்.ஆர். இராஜவரோதயம் அவர்களும் தெரிவாகினர். 1956ஆம் ஆண்டு இடம்பெற்ற மூன்றாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும் இவ்விருவருமே மீண்டும் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1960 பங்குனி மாதம் இடம்பெற்ற நான்காவது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதியிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்லகூடிய வாய்ப்பு கிட்டியது. இக்காலத்தில் மூதூர் மற்றும் பொத்துவில் தொகுதிகள் இரட்டை அங்கத்தவர் தேர்தல் தொகுதியாக மாற்றப்பட்டதன் காரணமாக இவ்வாய்ப்பு கிடைத்திருந்தது. இதில் தமிழரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்ட திருகோணமலையைச் சேர்ந்த திரு. த.ஏகாம்பரம் அவர்களும், சுயேட்சையாகப் போட்டியிட்ட ஜனாப். எம்.ஈ.எச்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமது அலி அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இதேபோல திருகோணமலை தொகுதியிலிருந்து திரு. என்.ஆர். இராஜவரோதயம் (இ.த.அ.க) அவர்களும் தெரிவாகினார்.

ஆனால் பாராளுமன்றம் குறுகியகால இடைவெளிக்குள் கலைக்கப்பட்டு மீண்டுமொரு தேர்தலை 1960 ஆம் ஆண்டு ஆடி மாதம் சந்தித்திருந்தது. இதன்போது மூதூர் தொகுதியிலிருந்து திரு. த. ஏகாம்பரம் (இ.த.அ.க) மற்றும் கிண்ணியாவைச் சேர்ந்த ஜனாப். ஏ.எல்.ஏ. மஜீது (சுதந்திரக் கட்சி) அவர்களும், திருகோணமலை தொகுதியிலிருந்து திரு. என்.ஆர். இராஜவரோதயம் (இ.த.அ.க) அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாகினர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை கொட்டியாபுரப்பற்றுக்கு அறிமுகம் செய்து வெற்றியை ஈட்டிய மஜீது அவர்கள் பின்னர் பொது மாரமைத்து பிரதியமைச்சராகவும் தகவல் ஒலிபரப்புத்துறை பிரதி அமைச்சராகவும் பதவி வகித்தார்.

மூதூர் தொகுதியிலிருந்து தெரிவாகிய திரு. த. ஏகாம்பரம் அவர்கள் காலமாகியதன் காரணமாக மூதூரில் 1962 ஆனியில் இடைத்தேர்தல் ஒன்று நடைபெற்றது. இதன்போது முன்னர் தோல்வியடைந்திருந்த ஜனாப். எம்.ஈ.எச். முகமது அலி அவர்கள் தமிழரசுக்கட்சியில் இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். அத்தோடு திரு.என்.ஆர். இராஜவரோதயம் அவர்கள் 1963 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ஆம் திகதி மரணமடைந்ததன் காரணமாக இடம்பெற்ற இடைத் தேர்தலில் (1963.11.23) திருகோணமலையைச் சேர்ந்த திரு.எம். மாணிக்கராஜா (இ.த.அ.க) அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதியிலிருந்து ஜனாப். எம்.ஈ.எச். முகமது அலி (இ.த.அ.க) அவர்களும், ஜனாப். ஏ.எல்.ஏ. மஜீது (சுதந்திரக் கட்சி) அவர்களும் தெரிவாகினர். ஆனால் பிற்காலத்தில் தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்ட முகமது அலி அவர்கள் அதிலிருந்து விலகி ஐக்கிய தேசியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியுடன் இணைந்தார். திருகோணமலை தொகுதியிலிருந்து திரு.எம்.மாணிக்கராஜா (இ.த.அ.க) அவர்கள் தெரிவாகியிருந்தார். (4)

அடுத்ததாக 1970 ஆம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் மூதூர் தொகுதி சார்பாக ஜனாப். ஏ.எல்.ஏ. மஜீது (ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி) அவர்களும், கிளிவெட்டியைச் சேர்ந்த திருவாளர் அருணாசலம் தங்கத்துரை (இ.த.அ.க) அவர்களும் வெற்றியீட்டினர். திருகோணமலை தொகுதியிலிருந்து திரு.பா. நேமிநாதன் (இ.த.அ.க) அவர்கள் வெற்றி பெற்றார். இத்தேர்தலிலேயே முதன் முதலாக மூதூர் பிரதேசத்தைச் (கிளிவெட்டி) சேர்ந்த ஒருவருக்கு (திரு.அ. தங்கத்துரை) பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

1947- 1956 வரை நடைபெற்ற முதல் மூன்று பாராளுமன்ற தேர்தலிலும் மூதூர் தொகுதியிலுள்ள தமிழ் வாக்காளர்கள் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கே தமது ஆதரவை நல்கி வெற்றிபெறச் செய்தனர். அதன் பின்னர் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி முறையின் போதும் தமிழர் ஒருவரும், முஸ்லீம் ஒருவருமாக தேர்வாகினர். இக்காலத்து அரசியல்வாதிகளான அப்துல் மஜீது, முகமது அலி, தங்கத்துரை ஆகியோர்களுக்கிடையேயும், அவர்கள் சார்ந்த கட்சிகளுக்கிடையேயும் இடம்பெற்ற பல விட்டுக்கொடுப்புகளால் தமிழ்-முஸ்லீம் சமூகங்கள் அடைந்த பெருமைகள் காலத்தால் நினைவில் இருத்தப்பட வேண்டியவையாகும்.

இ.த.அ.க சார்பாக முகமது அலி அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றமை, 1981ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைகள் உருவாக்கப்பட்டு அதற்கான தேர்தல்கள் நடாத்தப்பட்ட போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் திரு.அ. தங்கத்துரை அவர்களை அப்துல் மஜீது அவர்கள் ஆதரித்தும், ஐ.தே.க வில் போட்டியிட்ட ரஹீம் அவர்களை எதிர்த்தும் தமிழ்-முஸ்லீம் உறவைப் பலப்படுத்தியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாது 1977 ஆம் ஆண்டு தேர்தலின் போது மூதூர் தொகுதிக்கு ஒரு முஸ்லீம் வேட்பாளரையே நிறுத்தவேண்டும் என்ற கட்சியின் முடிவை ஏற்றுக்கொண்டு ஜனாப்.எஸ்.எம். மக்கீன் அவர்களுக்கு இ.த.அ.க சார்பாகப் போட்டியிட தங்கத்துரை அவர்கள் விட்டுக்கொடுத்திருந்தமை போன்ற பல சம்பவங்கள் இம் மூதூரில் இடம்பெற்றுள்ளன.

1972 இல் குறிப்பிடத்தக்க சில அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றன. கொட்டியாபுரப்பற்று உ.அ.அ.பிரிவிலிருந்து சேருவில உ.அ.அ.பிரிவு உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி 1977 இல் உடைக்கப்பட்டு சேருவில என்னும் புதிய தேர்தல் தொகுதி தோன்றியது. இதன் காரணமாக மூதூர், சேருவில தேர்தல் தொகுதிகளுக்குள் உள்ளடக்கப்பட்ட சுமார் 65 க்கு மேற்பட்ட தமிழ் கிராம மக்கள் தங்களுக்குரிய தமிழ் பாராளுமன்ற அங்கத்துவத்தை இழந்தனர் என்று அரசியல் அவதானிகள் கூறியிருந்தனர்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற எட்டாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மூதூர் தொகுதியிலிருந்து எம்.ஈ.எச். மகரூப் (ஐ.தே.க) அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலில் அப்துல் மஜீது தோற்கடிக்கப்பட்டார். இ.த.அ.க சார்பில் போட்டியிட்ட எஸ்.எம்.மக்கீன் அவர்களும் தோல்வியுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. புதிதாக உருவாக்கப்பட்ட சேருவில தேர்தல் தொகுதியிலிருந்து சிங்கள இனத்தைச் சேர்ந்த திரு. எச்.டி.எல். லீலாரத்ன என்பவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருந்தார்.

1978 ஆம் ஆண்டு சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன (ஐ.தே.க) அவர்களால் தொகுதிவாரி பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்குப் பதிலாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 1982 இல் பொதுத்தேர்தல் நடாத்தப்படாது சர்வசன வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் மேலும் 6 வருடங்களுக்கு அதிகரிக்கப்பட்டது.

1989 இல் இடம்பெற்ற ஒன்பதாவது பாராளுமன்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து எம்.ஈ.எச். மகரூப் (ஐ.தே.க), திரு. எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன (ஸ்ரீ.சு.க) ஆகியோருடன் ஈரோஸ் என்னும் தமிழ் போராளிகள் அமைப்பு சுயேட்சையாக களமிறங்கி போனஸ் ஆசனத்துடன் இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியது. எனினும் அவ் அமைப்பின் கொள்கைகளுக்கமைய தமிழ்-முஸ்லிம் உறவை மேம்படுத்து முகமாக வெற்றிபெற்ற திரு. கோ. மாதவராசா அவர்கள் தனது பா.உ பதவியை விட்டுக்கொடுக்க, ஒரு உறுப்பினர் பதவி இவ்வமைப்பின் நீண்டகால உறுப்பினரான ஜனாப்.ஏ.பசீர் அமீர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. மேலும் இத் தேர்தலில் திரு. சி. இரத்தினராஜா அவர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற 10 ஆவது பாராளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.க சார்பாக அல்ஹாஜ் எம்.ஈ.எச். மகரூப், திரு. விதானக்கே சுனில் சாந்த ரணவீர அவர்களும் த.வி.கூ. சார்பாக திரு.அ. தங்கத்துரை அவர்களும், ஸ்ரீ.ல.மு.கா சார்பாக ஜனாப்.நஜீப் அப்துல் மஜீத் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

திருவாளர் அ. தங்கத்துரை அவர்கள் 05.07.1997 அன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி கட்டட திறப்பு விழாவில் நிகழ்ந்த இச்சம்பவத்தில் இவரோடு இக் கல்லூரி அதிபரான திருமதி. இராஜேஸ்வரி தனபாலசிங்கம், திரு.எஸ். ஜோசெப் (அதிபர்), திரு. சீவரெத்தினம் (அதிபர்), திரு. இரத்தினராஜா (கல்வித்திணைக்கள பொறியியலாளர்), திரு. கணேசலிங்கம் (பொதுச் சேவையாளர்) மற்றுமொரு பாதுகாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இதனால் ஏற்பட்ட பா.உ. வெற்றிடத்துக்கு த.வி.கூ. இரா. சம்பந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதே போன்றதொரு சம்பவம் 20.07.1997 அன்று மற்றுமொரு மூதூர் தொகுதி பா.உறுப்பினரான எம்.ஈ.எச். மகரூப் அவர்கள் திருகோணமலை புல்மோட்டைவீதி ஆறாம் கட்டை பகுதியில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமடைந்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திரு. ஆரியபாலா வால்பிட்டிகம (ஐ.தே.க) அவர்கள் நியமிக்கப்பட்டார்.

இனமுறுகலும் நெருக்கடியுமிக்க 2000 ஆம் ஆண்டு இலங்கையின் 11 ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது. இத் தேர்தலில் தமிழரசுக் கட்சி உட்பட தமிழ் கட்சிகளைச் சேர்ந்த எவருமே தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு தமிழ் மக்கள் வாக்களிப்பு மீது காட்டிய அக்கறையின்மை, தமிழ் கட்சிகளுக்கிடையேயான ஒற்றுமையின்மை போன்றன காரணங்களாகக் கூறப்பட்டிருந்தன. அத்தோடு ஜனாப் ஏம்.ஏ.எம்.மகரூப் (ஐ.தே.க), ஜனாப். நஜீப் அப்துல் மஜீத் (பொ.ஐ.மு), ஸ்ரீ.ல.மு.காங்கிரசை சேர்ந்த ஜனாப் எம்.எஸ். தௌபீக் (பொ.ஐ.மு), திரு. எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன (பொ.ஐ.மு) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

எனினும் 2001 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியற் குழப்பங்கள் காரணமாக பாராளுமன்றம் இடைநடுவில் 10.10.2001 இல் கலைக்கப்பட்டது. பின்னர் 05.12.2001 அன்று 12 ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது. இதன் போது திரு.இரா. சம்பந்தன் (த.வி.கூட்டணி), ஜனாப் ஏம்.ஏ.எம். மகரூப் (ஐ.தே.க), ஸ்ரீ.ல.மு.காங்கிரசை சேர்ந்த ஜனாப் கெ.எம்.தௌபீக் (ஐ.தே.க) மற்றும் திரு. எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன (பொ.ஐ.மு) ஆகியோர் தெரிவாகியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தேர்தலின் போது மூதூரைச் சேர்ந்த திடீர் தௌபீக் என்பவர் பா.உ பதவியைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது சேனையூரை சேர்ந்த திரு.க. துரைரெட்னசிங்கம் அவர்களும் த.வி.கூ சார்பாக போட்டியிட்டு தோல்வியடைந்திருந்தார். ஆனால் இதே கட்சியைச் சேர்ந்த தேசியபட்டியல் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டிருந்த திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் மரணமடைந்ததன் காரணமாக அவ்விடத்துக்கு இளைப்பாறிய அதிபரான திரு.க. துரைரெட்னசிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் மீண்டும் இரு வருடங்களின் பின்னர் 07.02.2004 அன்று கலைக்கப்பட்ட பாராளுமன்றம் 13 ஆவது பொதுத் தேர்தலை 2004 ஆம் ஆண்டு எதிர்நோக்கியது. இதன்போது திரு.இரா. சம்பந்தன் (இலங்கை தமிழரசு கட்சி), திரு.க. துரைரெட்னசிங்கம் (இ.த.அ.க), ஜனாப் நஜீப் அப்துல் மஜீத் (ஸ்ரீ.ல.மு.கா), திரு. எஸ்.டபிள்யு.எம். ஜயந்த விஜயசேகர (ஐ.சு.மு) ஆகியோர் தெரிவாகியிருந்தனர். இங்கு இ.த.அ.க (தமிழ் தேசிய கூட்டமைப்பிலே) அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்பன ஒன்றாகி போட்டியிட்டிருந்தன. அத்தோடு 2012 ஆம் ஆண்டில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அமைப்பும் இணைந்திருந்தது.

இலங்கையின் 14 ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தல், 30 வருடகால உள்நாட்டு ஆயுத மோதல் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் 22 மாவட்டங்களிலும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக 2010.04.08 ஆந் திகதி இடம்பெற்றது. இங்கு திரு.இரா. சம்பந்தன் (இ.த.அ.க), ஜனாப் எம்.எஸ். தௌபீக் (ஐ.தே.மு), திரு. சுசந்த புஞ்சிநிலமே (ஐ.ம.சு.கூ), திரு. எம்.கே.ஏ.டி.எஸ். குணவர்த்தன (ஐ.ம.சு.கூ) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக நடந்த 15 ஆவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் 17.08.2015 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் திரு.இரா. சம்பந்தன் (இ.தமிழரசுக் கட்சி), ஜனாப் இம்ரான் மகரூப் (ஐ.தே.க), திரு. சுசந்த புஞ்சிநிலமே (ஐ.ம.சு.கூ), ஜனாப் எம்.ஏ.எம். மகரூப் (ஐ.தே.க) ஆகியோர் தெரிவாகினர். அத்தோடு இ.த.கட்சியின் தேசிய பட்டியல் பா.உ ஆக சேனையூரைச் சேர்ந்த திரு.க. துரைரெத்தினசிங்கம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தல் மட்டுமல்லாது இலங்கையில் ஆறு வருடங்களுக்கொரு முறை நடைபெறுகின்ற சனாதிபதித் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சிசபைத் தேர்தல் போன்றனவும் இடம்பெறுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. வரலாறு தரம் -11 (2003)- கல்வி வெளியீட்டு திணைக்களம் - (பக்- 34)
2. சுவடுகள் பாகம் -1 (2011) - ஜீவைரியா செரிப் - (பக் -338)
3. இலங்கை அரசியல் வரலாறு இழப்புகளும் பதிவுகளும் (2012) - குமாரதுரை அருணாசலம் (பக் 21 - 22)
4. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.ஏ. சமது (பக் - 391)

## 3.2 மாகாணசபைத் தேர்தல்கள்

பிரித்தானியரின் ஆட்சியின் போது நிர்வாக இலகுபடுத்தலுக்காக 1833 ஆம் ஆண்டு இலங்கைத் தீவானது வடக்கு, கிழக்கு, மத்தி, தெற்கு, மேற்கு என ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து 1845 இல் வடமேல் மாகாணமும், 1866 இல் ஊவா மாகாணமும், 1873 இல் வடமத்திய மாகாணமும், 1889 இல் சப்பிரகமுவ மாகாணமும் புதிதாக உருவாக்கப் பட்டிருந்தன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் பொறுப்பாக அரசாங்க அதிபர்கள் (Government Agent) இருந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை பிரதேசமானது ஆரம்பகாலம் தொட்டு பிரித்தானியர் ஆட்சிக்காலம் வரை நான்கு பற்றுக்களாக நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளதை வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. திருகோணமலைப்பற்று, கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப்பற்று, கட்டுக்குளம்பற்று என்னும் இந்நான்கு நிலப்பரப்புகளும் திருக்கோணேஸ்வரத்தை முதன்மைப்படுத்தியதாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போதைய நிர்வாகப் பிரிப்பு முறையில் திருகோணமலை மாவட்டமானது பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அவையாவன!

திருகோணமலை பட்டணமும் சூழலும்,
குச்சவெளி,
மூதூர்,
கிண்ணியா,
தம்பலகாமம்,
கந்தளாய்,
சேருவில,
மொறவேவ,
கோமரங்கடவல,
பதவிஸ்ரீபுர,
வெருகல் என்பனவாகும்.

தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம் முதலான தமிழ் அரசியல் தலைமைகளின் இலங்கை அரசுடனான அகிம்சைப் போராட்டங்கள் தோல்வியடைந்த நிலையில், 1970 களின் பின்னர் "ஈழ" மற்றும் "தமிழீழ" என்னும் பகுதிப் பெயர்களைத் தாங்கிய பல ஆயுத விடுதலை இயக்கங்கள் எழுச்சி பெற்றன. ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட பல தமிழ் போராளிக் குழுக்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக தமிழ் இனத்தின் விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருந்த காலத்தில், இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் 1987 ஆடி மாதம் 29 ஆந் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும், இலங்கை சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கும் இடையில் கொழும்பில் வைத்து ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. இதுவே இலங்கை வரலாற்றில் அதிமுக்கியத்துவம் பெற்ற "இலங்கை-இந்திய ஒப்பந்தம்" ஆகும்.

இவ் ஒப்பந்தத்தில் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு மாகாணசபை அமைப்பது அத்தோடு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு வடகிழக்கு மாகாணசபை அமைப்பது போன்றனவும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

பல பாராளுமன்ற தேர்தல்களையும், சனாதிபதித் தேர்தல்களையும் சந்தித்து வந்த மக்கள், மாகாணசபை தேர்தல் என்னும் புதியதொரு வகையிலான தேர்தலொன்றுக்கும் தயாராகினர். இதனடிப்படையில் 19.11.1988 அன்று வடகிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்பட்டது. இந்திய அமைதிப் படையினரின் ஆதரவுடன் வடமாகாணத்தில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் ஈ.என்.டி.எல்.எப் ஆகிய இரு அமைப்புக்களும் ஏனைய எக்கட்சியினரும் போட்டியிடாத நிலையில் அம்மாகாணத்துக்குரிய 36 ஆசனங்களையும் முறையே 24, 12 என பகிர்ந்து கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்ட ஈ.பி.ஆர். எல்.எப் (17), ஸ்ரீ.ல.மு.கா (17), ஐ.தே.க (1) ஆசனங்களைப் பெற்றுக் கொண்டன. இதன் விளைவாக அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட ஈ.பி.ஆர். எல்.எப் கட்சியைச் சேர்ந்த திரு. அ. வரதராஜப்பெருமாள் அவர்கள் 1988-12-10 ஆந் திகதியன்று கொழும்பில் வைத்து சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் வடகிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். இதனைத் தொடர்ந்து திருகோணமலை நகரசபை மண்டபத்தில் வைத்து வடகிழக்கு மாகாண ஆளுநரான லெப்டினனட் ஜெனரல் ஜி.டி.ஜி. நளின் செனவிரட்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் முன்னிலையில் ஏனைய உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இத் தேர்தலில் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிட்டு இரண்டாவது பெரும்பான்மை ஆசனங்களை பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் அல்ஹாஜ் சேகு இஸ்ஸதீன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவரானார். இம்மாகாண சபைக்கு முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர் (1). இம்மாகாணசபை திருகோணமலை நகரை மையமாகக் கொண்டு இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ் வடகிழக்கு மாகாணசபைக்கு திருகோணமலை மாவட்டம் சார்பில் தெரிவாகியோர்களாக:

1. திரு. யோ. தம்பிராசா (ஈ.பி.ஆர்.எல்.எப்.)
2. திரு. எச். கிங்க்ஸ் ரொபட் (ஈ.பி.ஆர்.எல்.எப்.)
3. திரு. இ. திலகராசா (ஈ.பி.ஆர்.எல்.எப்.)
4. திரு. சி. தயாபரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்.)
5. திரு.எல்.பொன்சேகா போல்ராஜ் பாய்வா (ஈ.பி.ஆர்.எல்.எப்.)
6. ஜனாப். எம்.எம். ரிசான் (ஸ்ரீ.ல.மு.கா)
7. ஜனாப். ஏ.எம். முஹம்மத் யாவத் (ஸ்ரீ.ல.மு.கா)
8. ஜனாப். எம்.ஆர். ஜமால்டீன் ஷரூமி (ஸ்ரீ.ல.மு.கா)
9. ஜனாப். எம்.எம். முஹம்மத் பசீர் (ஸ்ரீ.ல.மு.கா)
10. ஜனாப். எம்.ஜே.எம். உக்காஸ் (ஸ்ரீ.ல.மு.கா)

இவ்வாறு 15 மாதங்கள் வரை நீடித்த மாகாணசபையின் ஆட்சி 1990.03.01 கைவிடப்பட்டது. இதற்கு இலங்கை அரசு - இந்திய அரசு - விடுதலைப்புலிகள் ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட யுத்தங்கள், உடன்படிக்கைகள், வேண்டுகோள்கள் என்பவற்றின் அடிப்படையில் இந்திய அமைதி காக்கும் படை 1990.03.31 ஆந் திகதியுடன் கட்டம் கட்டமாக இலங்கையைவிட்டு வெளியேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதராஜப்பெருமாள் அவர்களுடன் பல தமிழ் போராளி இயக்க உறுப்பினர்கள், இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்தமை. போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றன.

ஆனால் வடகிழக்கு மாகாணங்களுக்காக கொண்டுவரப்பட்ட மாகாணசபை நிர்வாகம் இங்கு செயலிழக்க ஏனைய மாகாணசபைகள் தொடர்ந்தும் இயங்கின. இதன் பின்னர் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுனர்களினாலேயே வடகிழக்கு மாகாணசபையின் நிர்வாகம் 16 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வந்துள்ளது.

இவ்வாறு இயங்கிக் கொண்டிருந்த வடகிழக்கு மாகாணசபையை தனித்தனியாகப் பிரிக்கக் கோரி ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஜயந்த விஜேசேகர, திரு. எல்.கெ. வசந்த, ஜனாப். ஏ.எஸ். முஹம்மத் புகாரி ஆகியோரால் உச்சநீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இதன் பிரகாரம் பிரதம நீதியரசர் திரு. சரத்.என்.சில்வா அவர்களினால் நீதிபதிகளான திரு. சி.என்.ஜயசிங்க, திரு. என்.கெ.உதலாகம, திரு. ராஜா பெர்னாண்டோ மற்றும் திரு. என்.ஜி.அமரதுங்க ஆகியோரைக் கொண்ட அமர்வில் 2006.10.16 அன்று வடகிழக்கு மாகாண இணைப்பு செல்லுபடியற்றது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

16 வருடங்களாக இணைந்திருந்த வடகிழக்கு மாகாணங்கள் இரண்டும் பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் 2008.05.10 அன்று நடைபெற்றது. இத் தேர்தலில் 37 ஆசனங்களுக்காக (திருகோணமலை-10, மட்டக்களப்பு- 11, அம்பாறை- 14, போனஸ்- 2) 18 கட்சிகள் 73 சுயேட்சைக்குழுக்கள் போட்டியிட்டன.

இம் மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவதைத் தவிர்த்திருந்தது. அத்தோடு தமிழீழ விடுதலைப் புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பிலிருந்து பிரிந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, சனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யுடன் இணைந்து போட்டியிட்டது.

இதன் மற்றொரு அம்சமாக கிழக்கு மாகாணசபை முதலமைச்சராக முஸ்லீம் ஒருவரே வரவேண்டும் என்ற கோரிக்கையுடன் ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் ரவூப் கக்கீம் அவர்கள் தனது பாராளுமன்ற பதவியை ராஜினாமா செய்துவிட்டு திருகோணமலை மாவட்ட ஐ.தே.க வின் முதன்மை வேட்பாளராகக் களமிறங்கினார்.

இத் தேர்தலில் திருகோணமலை மாவட்டம் சார்பில் தெரிவாகியோர்களாக:

1. திரு. K.M.D.S. குணவர்த்தன (ஐ.ம.சு.கூ)
2. திரு. S.L.M. ஹசன் மௌலவி (ஐ.ம.சு.கூ)
3. W.G.M. ஆரியவதி கலபதி (ஐ.ம.சு.கூ)
4. ஜனாப் H.M.M. பாயிஸ் (ஐ.ம.சு.கூ)
5. ஜனாப். ரவூப் ஹக்கீம் (ஐ.தே.க)
6. ஜனாப். M.S. தௌபீக் (ஐ.தே.க)
7. ஜனாப். M.A.M. மஹ்ரூப் (ஐ.தே.க)
8. திரு. அ. பரசுராமன் (ஐ.தே.க)
9. திரு. K.G. விமல் பியதிஸ்ஸ (ஜே.வி.பி)

2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது 10 தொகுதிகளிலும் 1072 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு 982,721 வாக்காளர்கள் (திருகோணமலை - 242,463 , மட்டக்களப்பு - 330,950, அம்பாறை - 409,308) வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் (2).

இதன்போது ஐ.ம.சு.கூ (20), ஐ.தே.க (15), ஜே.வி.பி (01), தமிழ் ஜனநாயக தேசிய கூட்டணி (01) ஆசனங்களைப் பெற்றனர். இங்கு அதிகூடிய வாக்குகளைப் (41936) பெற்ற திரு, சிவநேசதுரை சந்திரகாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக சனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களினால் 16-05-2008 அன்று அலரி மாளிகையில் வைத்து பதவிப்பிரமானம் செய்து வைக்கப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஆனால் இவர் தனது மாகாணசபை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் பாராளுமன்றம் சென்றமையால் இப்பதவிக்கு அல்ஹாஜ் பசீர் சேகுதாவூத் நியமிக்கப்பட்டார். 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இவரும் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப் பட்டமையால் எதிர்கட்சித் தலைவர் பதவிக்கு ஐ.தே.க வைச் சேர்ந்த திரு. தயாகமகே அவர்கள் நியமிக்கப்பட்டார்.

2012-06-27 இல் கலைக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைக்கான இரண்டாவது தேர்தல் 2012-09-08 அன்று நடாத்தப்பட்டது. இதில் தெரிவாகியவர்களாக:

1. திரு. சி.தண்டாயுதபாணி (த.தே.கூ)
2. திரு. கு.நாகேஸ்வரன் (த.தே.கூ)
3. திரு. ஜே.ஜெனார்த்தனன் (த.தே.கூ)
4. ஜனாப். நஜீப்.ஏ.மஜீது (ஐ.ம.சு.கூ)
5. W.G.M. ஆரியவதி கலபதி (ஐ.ம.சு.கூ)
6. திரு. K.P.P. பிரேமகுமார (ஐ.ம.சு.கூ)
7. ஜனாப். அன்வர் ரம்லான் முகமத் (ஸ்ரீ.ல.மு.கா)
8. ஜனாப். ஹசன் மௌலவி (ஸ்ரீ.ல.மு.கா)
9. திரு. N.W.J. விஜயசேகர (ஐ.தே.க)
10. திரு. விஜயசேகர (தே.சு.மு)

கிழக்கு மாகாண சபையில் ஐ.ம.சு.கூ (14), த.தே.கூ (11), ஸ்ரீ.ல.மு.கா (7), ஐ.தே.க (4), தே.சு.மு (1) ஆசனங்களையும் பெற்றன. இவ் இரண்டாவது கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சராக ஜனாப். நஜீப்.ஏ.மஜீது அவர்கள் நியமிக்கப்பட்டார். எதிக்கட்சித்தலைவராக திரு. சி.தண்டாயுதபாணி அவர்கள் தெரிவாகியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 08.01.2015 அன்று நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் வெற்றி பெற்றமையைத் தொடர்ந்து கிழக்குமாகாண சபையிலும் மாற்றம் ஏற்பட்டது. த.தே.கூ வினரும் ஸ்ரீ.ல.மு.கா வினரும் சேர்ந்து 16.02.2015 இல் ஆட்சியமைத்தனர். ஜனாப். ஹாபீஸ் நசீர் அஹமத் அவர்கள் முதலமைச்சராகினார். திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் கல்வி, முன்பள்ளிக்கல்வி, இளைஞர் விவகாரம், விளையாட்டுத்துறை, பண்பாட்டலுவல்கள், புனர்வாழ்வு, மற்றும் மீள்குடியேற்ற அமைச்சராக பதவியேற்றார்.

இப் பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் பற்றிய அதிகளவிலான தகவல்களை தந்துதவிய திருமலை நவம் ஐயா அவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அடிக்குறிப்புகள்**

1. சுவடுகள் - பாகம்-1 (2011) -ஜுவைரியா செரிப் - (பக்- 315)
2. இலங்கை அரசியல் வரலாறு - இழப்புகளும் பதிவுகளும் - திரு. குமாரதுரை அருணாசலம் (பக்- 404)
3. வீரகேசரி, தினக்குரல் நாளிதழ்கள்.

## 3.3 கொட்டியாபுரப்பற்று அரச நிர்வாக சபைகள்

ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் கொட்டியாபுரப்பற்றில் இருந்த பிரதான கிராமங்களாக மூதூர், சம்பூர், கிளிவெட்டி, தோப்பூர், மல்லிகைத்தீவு, மருதடிச்சேனை, ஈச்சிலம்பற்றை ஆகியன காணப்பட்டன. இவற்றை விட ஏனைய பல சிறு கிராமங்களும் காணப்பட்டன. இன்று காணப்படுகின்ற ஏனைய கிராமங்கள் யாவும் பின்னரான காலப்பகுதியில் மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக படிப்படியாகத் தோற்றம் பெற்றிருந்தன. அத்தோடு 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற விவசாயக் குடியேற்றத் திட்டங்களின் மூலமாகவும் பல புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்று மூதூர் பிரிவில் 76



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களும், ஈச்சிலம்பற்றை பிரிவில் 37 கிராமங்களும், சேருவில பிரிவில் 26 கிராமங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்பட்ட பிரதான கிராமங்களில் ஆங்கிலேய அதிகாரிகள் கிராமத்து மக்களுடனான தொடர்புகளை நெருங்கிப் பேணும் முகமாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் கிராமத்தலைவர்களாக சிலரை நியமித்தனர். இவர்கள் பெரும்பாலும் உள்ளூர்வாசிகளாகவே இருந்தனர். இவர்கள் "விதான் அல்லது விதானையார்" என்றும் அழைக்கப்பட்டனர். கிராமங்களில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் இவர்களே பொறுப்பாக இருப்பவர்கள். இவர்கள் மூலமாகவே அரச அதிகாரிகள் தமது நிர்வாக அலுவல்களை சிறந்த முறையில் மேற்கொண்டிருந்தனர். பிற்பட்ட காலங்களில் அதாவது 1962இல் விதான் முறைக்குப் பதிலாக "கிராமசேவையாளர்" (GS) முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### 3.3.1 கிராமசபை

அத்தோடு அரச நிர்வாகத்தில் சுதேச மக்களை இணைப்பதன் மூலம் நிர்வாகத்தை சிறந்த முறையில் கொண்டு நடத்தலாம் என்னும் நோக்கில் 1934 இல் "கிராமசபை" முறை அமுல்படுத்தப்பட்டிருந்தது. தேர்தல்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் இச்சபையில் இடம்பெற்றிருந்தனர். கொட்டியாபுரப்பற்றில் மூதூர், கிளிவெட்டி, தோப்பூர், கட்டைபறிச்சான், சம்பூர், மல்லிகைத்தீவு, ஈச்சிலம்பற்றை ஆகிய கிராமங்களில் கிராமசபைகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன.

அந்தவகையில் மூதூரின் முதலாவது கிராமசபைத் தலைவராக (அக்கிராசனார்) 1935இல் தேர்தல் மூலம் மீராலெப்பை நூறு முகம்மது என்பவரும் (1), அதைத் தொடர்ந்து வந்த தேர்தல்களில் மூதூர் கிராமசபைத் தலைவர்களாக (தவிசாளர்)

- வாப்பு மரைக்கார் செயிலா காசீம் மரைக்கார்
- வாப்பு முகம்மது மதார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ அப்துல் காசீம் ஜெயினுதீன்
- ❖ அல்ஹாஜ் அப்துல் காசீம் ஜமால்தீன்
- ❖ அல்ஹாஜ் முத்துத்தம்பி கபீபு முகம்மது
- ❖ திரு. எஸ். சித்திரவேல் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

சம்பூரின் முதலாவது கிராமசபைத் தலைவராக திரு. தம்பையா அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார் (2). தொடர்ந்து

- ❖ திரு. சடாசிவம்
- ❖ திரு. சிவசுப்பிரமணியம்
- ❖ திரு.நா.சி. சரவணமுத்து
- ❖ திரு.கா. சிவராசா
- ❖ திரு.த. தாமோதரம்பிள்ளை

ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

அதே போல தோப்பூரில்

- ❖ வரிசைத்தம்பி
- ❖ அப்துல் ஹமீது
- ❖ முகமது ஹசன்
- ❖ சேகு லெப்பை
- ❖ சதக்கு முகமது அப்துல் ஹமீது
- ❖ இஸ்மாயில் முஸ்தபா ஆகியோரும்

மல்லிகைத்தீவில் கிராமசபை தலைவர்களாக

- ❖ திரு. க.சுப்பிரமணியம்
- ❖ திரு. கா. சோமசுந்தரம்
- ❖ திரு. மு. செல்லையா ஆகியோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைபறிச்சானில்

- திரு. கனகரெட்னம்
- திரு. நடராசபிள்ளை
- திரு. க.கணபதிப்பிள்ளை
- திரு. குணநாயகம்
- திரு. ஆ.கணபதிப்பிள்ளை
- திரு. சிவபாக்கியம்
- திரு. இராசரெத்தினம்
- திரு. சுந்தரமூர்த்தி ஆகியோரும்

ஈச்சிலம்பற்றில்

- திரு. கனகராசா
- திரு. ஞானகணேசன் ஆகியோரும் தெரிவாகியிருந்தனர்.(3)

இறுதியாக அமைக்கப்பட்ட கிளிவெட்டி கிராமசபையில் திரு.பூ.வினாயகமூர்த்தி அவர்கள் (21வருடங்கள்) தலைவராக இருந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து 1965 இல் அப்போதய மூதூர் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த மர்ஹூம் ஏ.எல்.ஏ. மஜீது அவர்களின் முயற்சியினால் மூதூர் கிராமசபையானது "பட்டினசபை"யாக தரமுயர்த்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 7 வட்டாரங்களாகவும் மாற்றியமைக்கப்பட்டது. மூதூர் பட்டினசபைக்காக 1966 ல் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தலில் தவிசாளராக அல்-ஹாஜ். என்.எம். அலியார்தம்பி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து இப்பட்டினசபையில் 1972 வரை

திரு. சின்னராசா,

திரு. கே. இராமலிங்கம் ஆகியோர் தவிசாளராகவிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் பட்டினசபைத்தேர்தல் நடாத்தப்படாது விசேட ஆணையாளர்களான

1. எம். பீற்றர்

2. எம். ஜாயா

3. எஸ். ஆறுமுகம்பிள்ளை ஆகியோரின் கீழ் நிர்வாகம் செயற்பட்டது.

பின்னர் 1981 - 1987 வரையான காலப்பகுதியில் மூதூர் பட்டினசபையானது "திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி சபையின்-மூதூர் உப அலுவலகம்" எனப் பெயர் மாற்றம் அடைந்தது. மூதூர் 1934 இலிருந்து கிராமசபை நிர்வாகத்திற்குள்ளும், 1965 இலிருந்து 1994 வரை பட்டினசபை நிர்வாகத்திற்குள்ளும் இருந்து வந்துள்ளது. இதைத் தொடர்ந்து வந்த காலத்தில் 1987.05.12 ஆந் திகதி மூதூர் உப அலுவலகமானது "மூதூர் பிரதேச சபை" அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது.

## 3.3.2 முதலாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (1994-1999)

1994.03.01 இல் மூதூர் பட்டினசபை, சம்பூர், கட்டைபறிச்சான், தோப்பூர், கிளிவெட்டி, மல்லிகைத்தீவு கிராமசபைகளை உள்ளடக்கியதாக, 42 கிராமசேவகர் பிரிவுகளையும், 180.6 சதுரகிலோமீற்றர் பரப்பளவையும் கொண்டமைந்த மூதூர் பிரதேசசபைக்கான உள்ளூராட்சி மன்றத்தேர்தல் நடாத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கிராமங்களை நிர்வகிக்கும் மூதூர் பிரதேச சபையின் முதலாவது தவிசாளராக 1999 வரை ஜனாப் எம்.எச்.எம். றபீக் (ஸ்ரீ.மு.கா) அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் ஸ்ரீ.ல.மு.கா (05), ஐ.தே.க (03), ஸ்ரீ.ல.சு.க (01), சுயேட்சைக்குழு-1 (01), சுயேட்சைக்குழு-2 (01) உறுப்பினர்களாக 11 பேர் தெரிவாகினர்.

1. ஏ.எம். ஹரிஸ்

2. பி.ஐ. நிசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எம்.எம்.எம்.மஹ்ரூப்
4. ஏ.ஏச். ஹமீம்
5. எம்.எச். ஹாஜா முகைதீன்
6. எம்.எஸ். ராஜீஸ்
7. கே.பி. அப்துல் ரசாக்
8. ஏம்.ஐ. காசிலெப்பை
9. எம். சௌந்தரராஜன்
10. எம். தங்கவேல்
11. முகைதீன் பிச்சை முகமது அனிபா
12. முகமது அபூபக்கர்
13. எம்.எஸ். சலீம்

### 3.3.3 இரண்டாவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (2006)

இதைத் தொடர்ந்து மூதூர் பிரதேசசபைக்கான இரண்டாவது உள்ளூராட்சி மன்ற தேர்தல் 2006ஆம் ஆண்டிலேயே (2006.03.30) நடைபெற்றது. இதுவரை காலமும் மூதூர் பிரதேச செயலாளராக கடமைபுரிந்த திரு.ஏ. நடராசா(1994-1995), செல்வி.எஸ். தங்கரத்தினம் (2005.04.22 -2006.01.03) மற்றும் ஜனாப்.ஏ.ஆர். இத்ரிஸ் (2006.01.04 -2006.04.17) ஆகியோர் இச்சபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டார்கள்.

இத்தேர்தலில் சுயேட்சைக்குழு-11 இல் போட்டியிட்ட அல்-ஹாஜ் கே.எம்.தௌபீக் அவர்கள் தவிசாளராக தெரிவாகியிருந்தார். இக்கட்சிக்கு 7 ஆசனங்கள் கிடைத்தன. இலங்கை தமிழரசுக்கட்சிக்கு 4 ஆசனங்கள் கிடைத்தன. எதிர்க்கட்சித்தலைவராக திரு.மு. சௌந்தரராஜன் (அ.இ.த.க) செயற்பட்டார். ஏனைய உறுப்பினர்களாக!

1. ஜெமீல் கபூர்
2. எம்.எஸ். ராஜீஸ்
3. என்.எம்.அப்துல் காதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஏ.யூ.யுனைதீன்
5. எம்.எஸ்.சலீம்
6. பி.கே. கலீல்
7. ஆர். கோபாலபிள்ளை
8. திரு. வீரசிங்கம்
9. த. யோகேந்திரன்
10. வி பகீரதன்

### 3.3.4 மூன்றாவது உள்ளுராட்சி மன்றத் தேர்தல் (2011)

அடுத்து மூதூர் பிரதேசசபைக்கான மூன்றாவது உள்ளுராட்சி மன்ற தேர்தல் 2011 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 7 ஆசனங்களையும், இலங்கை தமிழரசுக்கட்சி 3 ஆசனங்களையும், ஐ.தே.க ஆசனம் ஒன்றையும் பெற்றன. மூதூர் பிரதேச சபையின் தவிசாளராக ஜனாப்.ஏ.எம். ஹரிஸ் (ஐ.ம.சு.கூ), எதிர்க்கட்சித்தலைவராக திரு.க. திருச்செல்வம் (அ.இ.த.க) தெரிவாகியிருந்தார். இருப்பினும் சில காலங்களின் பின்னர் இவர் இப்பதவியை 2012 இல் இராஜினாமா செய்ய இவ்விடத்திற்கு திரு.இ.நாகேஸ்வரன் (சம்பூர்) (இ.த.அ.க) அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஏனைய உறுப்பினர்களாக!

1. ஜனாப் எம்.எச். ஹாஜா முகைதீன் (தோப்பூர்)
2. ஜனாப் பி.எம். நசீர் (நெய்தல் நகர்)
3. ஜனாப் ஜே.ஜெஸ்ரி (பெரியபாலம்)
4. ஜனாப். ஜெமீல் கபூர் (தக்வாநகர்)
5. ஜனாப் பி.ரி.ஆப்தீன் (ஜின்னாநகர்-தோப்பூர்)
6. ஜனாப் பி.ரி.எம். பைசர் (ஹைறியாநகர்)
7. திரு.இ. நாகேஸ்வரன் (சம்பூர்)
8. திரு.ரி. தமிழ்செல்வன் (பட்டித்திடல்)
9. ஜனாப் ஏ.ஜி.நிஸ்மி (பாலத்தோப்பூர்)
10. திரு.வி. மோகன் (புளியடிச்சோலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேருவில பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் திரு.டபிள்யூ.எம். நந்தன பிரியங்கார விஜேசிங்க அவர்கள் சேருவில பிரதேச சபையின் தவிசாளராக தெரிவாகியிருந்தார். ஏனைய உறுப்பினர்கள் வருமாறு.

1. திரு.ஏ.வி. சுனில் நந்தசேன - (ஐ.ம.சு.கூ)
2. திரு.டபிள்யூ.ஏ. ஜயசிறி - (ஐ.ம.சு.கூ)
3. திருமதி.கே.டபிள்யூ.சி. பத்மலதா - (ஐ.ம.சு.கூ)
4. திரு.எஸ்.எம். பிரேமரத்ன - (ஐ.ம.சு.கூ)
5. ஜனாப். எம்.எல்.எம். பைசார் - (ஐ.ம.சு.கூ)
6. திரு.சி.பி. பண்டார - (ஐ.ம.சு.கூ)
7. திரு.கே. சிவலோகேஸ்வரன் - (ஐ.ம.சு.கூ)
8. திரு.எஸ்.எச். குணபால - (ஐ.தே.க)

வெருகல் பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அகில இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு.எஸ். விஜயகாந் (பூநகர்) அவர்கள் தவிசாளராக தெரிவுசெய்யப்பட்டார். ஏனைய உறுப்பினர்கள் வருமாறு!

1. திரு.கே. மாணிக்கவாசகன் (இலங்கைத்துறை முகத்துவாரம்)
2. திரு.எஸ். ஞானதாசன் (பூநகர்)
3. திரு.ஆர். தங்கத்துரை (கறுக்காமுனை)
4. திரு.ரீ. ஜெயகாந்தன் (வெருகல்)
5. திருமதி.ரீ. சாந்தாதேவி (வெருகல் முகத்துவாரம்)
6. திருமதி.கே. கோமளகாந்தி (பூமரத்தடிச்சேனை)

இலங்கையில் தற்பொழுது (2015ஆம் ஆண்டு) 335 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றுள் 23 மாநகர சபைகளும், 41 நகர சபைகளும், 271 பிரதேச சபைகளும் அடக்கம். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 13 உள்ளூராட்சி மன்றங்களில் 2 நகரசபைகளும், 11 பிரதேசசபைகளும் அடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணையாக**

1. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.ஏ.சமது (பக்- 437)
2. சம்பூர் பிரதேசத்தின் தொன்மை (2013) - அ. ஸதீஸ்குமார் (பக்-57)
3. சேவகம் சிறப்புமலர் (2016) - வெளியீடு: மூதூர் பிரதேசசபை (பக்-07)

## 3.3.5 நான்காவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (2018)

மூதூர் பிரதேசசபைக்கான நான்காவது உள்ளூராட்சி மன்ற தேர்தல் 2018 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதன்போது தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாக!

1. ஜனாப்.எம்.எம். அப்துல் அரூஸ் - தவிசாளர் (நெய்தல் நகர்)
2. ஜனாப்.ஏ.எம். கரீஸ் (மூதூர்)
3. ஜனாப்.ப. ஆப்தீன் (ஜின்னாநகர்)
4. ஜனாப்.எம். பைசார் (கைரியா நகர்)
5. ஜனாப்.ஐ.எம். வாஜித் (அக்கரைச்சேனை)
6. ஜனாப்.ஜ். ஜெசீன் (பாலநகர்)
7. ஜனாப்.ஏ.எஸ்.எம். தனீஸ் (அல்லைநகர்)
8. திரு.சி. துரைநாயகம் - எதிர்க்கட்சித்தலைவர் (மேன்காமம்)
9. திரு.து. ஜெகன் (சம்பூர்)
10. திருமதி.த. ஜெயமாலா (சாலையூர்)
11. திரு.வே. வேல்மாறன் (பட்டித்திடல்)
12. திரு.பூ. சிறிதரன் (நல்லூர்)
13. திரு.செ. சந்திரகுமார் (மணல்சேனை)
14. ஜனாப்.எம்.ஐ. காசிலெப்பை (ஜின்னாநகர்)
15. ஜனாப்.ஏ.எஸ். றிபாஸ் (அல்லைநகர்)
16. ஜனாபா.என். பாத்திமா அஹீதா (மூதூர்)
17. ஜனாபா.உ. ஜெசீலா (ஆசாத் நகர்)
18. ஜனாப்.எம்.எம். அசாம் (கேணிக்காடு)
19. திரு.கி. சத்தியரூபன் (அம்மன்நகர்)
20. திரு.பு. ஜெயசீலன் (கடற்கரைசேனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஜனாப்.எம்.ஐ. நவ்பால்தீன் (சாபிநகர்)
22. ஜனாப்.ஜெ.எம். சுக்றி (சாபிநகர்)
23. ஜனாப்.எம்.எம். நசீர் (பெரியபாலம்)

<u>சேறுவில</u> பிரதேசசபைக்காக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாக!

1. திரு.ஏ.ஜெ. றணசிங்க பண்டா (தவிசாளர்) - சேறுவில
2. திருமதி.கே.டபிள்யூ.ஏ. சந்திரகாந்தி - சோமபுர
3. திரு.டபிள்யூ.ஏ. ஜயசிறி - நீலாப்பொல
4. ஜனாப்.ஏ. முகமது அலி - செல்வநகர்
5. ஜனாப்.ஏ. காசிம் அன்வர் - தோப்பூர்-04
6. திரு.கே.ஏ. குமாரசேன - சேறுவில
7. திரு.டி.பி.ருசான் தேவப்பிரிய - தெகிவத்த
8. திரு.சி. வல்லிபுரம் வணங்காமுடி - இலிங்கபுரம்
9. திரு.வேலுப்பிள்ளை ராசு - தங்கநகர்
10. திரு. சம்பத் பிரியதர்சன - சேருநுவர
11. திரு. ஜயந்த புஸ்பகுமார - சோமபுர
12. வண.ஜி. தம்மகீர்த்தி - சோமபுர
13. திருமதி.டபிள்யூ.டபிள்யூ.எஸ்.குமாரி - சேருநுவர
14. திருமதி.டி.ஆர். ஹர்சானி மெனிக்கே - சோமபுர
15. திரு.ஆர்.எஸ். பிரசன்ன ராமநாயக்க - தெகிவத்த
16. திருமதி.எம்.ஜி. அசோகா மானெல் - சேருநுவர

<u>வெருகல்</u> பிரதேசசபைக்காக 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களாக!

1. திரு.க. சுந்தரலிங்கம்- தவிசாளர்(இலங்கைத்துறைமுகத்துவாரம்)
2. திரு.தே. சங்கர் (கல்லடி)
3. திரு.தே. விஜயரகுவரன் (உப்பூறல்)
4. திரு.வ. ஜெகநாதன் (சின்னகுளம்)
5. திரு.க. தவராசா (முத்துசேனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 6. திரு.கு. ரமேஸ்வரன் | (மாவடிச்சேனை) |
| 7. திருமதி.தி. மேகலா | (புன்னையடி) |
| 8. திரு.சி. சிறிகாந்தன் | (கறுக்காமுனை) |
| 9. திரு.இ. தவகுமார் | (பூநகர்) |
| 10. திரு.ரா. தங்கத்துரை | (கறுக்காமுனை) |
| 11. திரு.நா. ஞானகணேஸ் | (சூரநகர்) |
| 12. திரு.பா. விஸ்வநாதன் | (கல்லடி) |
| 13. திரு.க. உதயகுமார் | (முத்துசேனை) |

தகவல்கள்:- மூதூர், சேறுவில, வெருகல் பிரதேச சபைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாபுரப்பற்று பாடசாலைகள் (2014, 2015 முற்பகுதி தகவல்)

# 4

கற்றலானது மனிதனுடைய வாழ்வில் மிக முக்கியமானதொன்றாகும். அனுபவங்கள் மூலம் ஆயிரமாயிரம் படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டாலும் கூட அறிவார்த்தமான சிந்தனாபூர்வ தர்க்கிக்கும் செயற்பாடுகளுக்கு குரு சீடன் முறையிலான கற்றல் அவசியமாகின்றது.

ஆரம்ப காலங்களில் எமது பிரதேசத்தில் திண்ணைப் பள்ளிகளிலேயே கல்வியானது போதிக்கப்பட்டு வந்துள்ளது. இக் கல்வி முறையும் குரு-சீடன் உறவின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது. எனினும் ஐரோப்பிய நாட்டவர்களின் இலங்கை வருகையைத் தொடர்ந்து பாடசாலைகள் என்னும் கல்வி போதனை செய்யும் ஓர் இடம் நிறுவன ரீதியாக தோற்றம் பெறத் தொடங்கியது.

இங்கும் நவீன மயப்படுத்தப்பட்ட ஆசிரியர்- மாணவர் (குரு-சீடன்) அமைப்பு முறைகளே தொடர்ந்தன. இருந்தாலும் ஆட்சிக்கு பாதகமில்லாத, ஆட்சியைப் பாதுகாக்கின்ற, சுதேசியத்தை வெளிக்காட்டாத, தலைமைத்துவம் மற்றும் பொருளாதாரம் போன்றவற்றை முன்னிறுத்தும் கல்விமுறைமையே காணப்பட்டது. இவைகளை ஆட்சியாளர்களின் பேராதரவு பெற்ற கத்தோலிக்க, வெஸ்லியன் சபைகள் நடாத்தி வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் கல்வியானது அரச தொழில் வாய்ப்புகளைப் பெறுவதிலும், பொருளாதாரத்தை ஈட்டுவதிலும், சமூக உயர் அந்தஸ்தை நிலைநாட்டுவதிலும் பெற்ற முக்கியத்துவத்தின் காரணமாக சுதேசிகள் பலர் இச்சபைகள் நடாத்தும் பள்ளிக்கூடங்களில் சேர்வதில் ஆர்வம் காட்டத் தொடங்கினர்.

எனினும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஓரளவு சுதந்திரத்தை பெற்றுக்கொண்ட சுதேச மக்கள் தங்களுடைய மொழிகள் மற்றும் சமயங்கள் சார்ந்த கல்விசாலைகளை நிறுவி தங்களது இருப்பைத் தக்கவைக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஓரளவு வெற்றியும் கொண்டனர்.

கிறிஸ்தவ சபைகளாக வெஸ்லியன், மெதடிஸ்த மிசன், அமெரிக்க சிலோன் மிசன், ரோமன் கத்தோலிக்க சபை, அங்கிலிக்கன் சபை என்பவற்றைக் கூறலாம். இந்து சபைகளுள் இராமகிருஷ்ண சபை பிரதானமானது.

அந்த வகையில் . வெஸ்லியன் மெதடிஸ்த சபையால் 25 July 1814 இல் காலி பாடசாலையாக ரிச்மண்ட் கல்லூரி (காலி), 29 August 1814 இல் மெதடிஸ்த மத்திய கல்லூரி (மட்டக்களப்பு), 1817 இல் யாழ்ப்பாணம் வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், அமெரிக்கன் சிலோன் சபையால் 9 December 1816 இல் பொது இலவச பாடசாலையாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையில் வெஸ்லியன் மெதடிஸ்த சபையால் 1819 இல் மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் 1823 இல் விக்னேஸ்வரா மகா வித்தியாலயமும் தோற்றுவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்துக்கான கல்வி வலயம் 1961 ஆம் ஆண்டில் திருகோணமலை நகரில் அமைக்கப்பட்டது. மூதூர் பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளை உள்ளடக்கிய வகையில் இயங்கி வந்த மூதூர் வட்டாரக் கல்வி அலுவலகம் 1981 ஆம் ஆண்டளவில் கிண்ணியா கல்வி வட்டாரத்துடன் இணைக்கப்பட்டவாறு செயற்படத் தொடங்கியது. இருப்பினும் புதிய நிர்வாக முறையின் கீழ் நாடு முழுவதும் அமைக்கப்பட்டதைப் போல மூதூரிலும் கோட்டக்கல்வி அலுவலகம் ஒன்று 1984 இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இம் மூதூர் அலுவலகத்திலிருந்து தனியானதாக 1991 ஆம் ஆண்டு ஈச்சிலம்பற்று கோட்டக்கல்வி அலுவலகம் உருவாக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து வரும் காலங்களில் மீண்டும் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக திருத்த முறையின் கீழ் மூதூர், கிண்ணியா, ஈச்சிலம்பற்று ஆகிய மூன்று கல்விக் கோட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு 1998 ஆம் ஆண்டு மூதூர் வலயக்கல்வி அலுவலகம் ஏற்படுத்தப்பட்டது. இதிலிருந்து கிண்ணியா வலயக்கல்வி அலுவலகம் 2009 இல் பிரிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 4.1 மூதூர்

மூதூர் என்னும் பெயர் முத்தூர் (முத்துக்குளிக்கின்ற இடம்) என்பதிலிருந்து மருவி வந்ததாகக் கூறப்படுகின்றது. இருந்த போதும் இதற்கு இன்னுமொரு காரணப் பெயரும் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது ஒல்லாந்தர் அழைத்த "மோதற" என்பதுவே மருவி மூதூர் என்றாகியது என்றும் கொள்வர்.

மூதூரில் திருச்சபை ரோமன் கத்தோலிக்க பாடசாலையொன்று கோவில் வீதி சந்தியின் அருகே உருவாக்கப்பட்டது. அமலமரி தியாகிகள் சபையைச் சேர்ந்த மஸ்ஸியே அடிகளார் என்பவர் கி.பி. 1865 ஆம் ஆண்டு மூதூரில் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஒரு ஆலயத்தை அமைத்ததோடு, அதற்கருகில் பிள்ளைகளின் நன்மை கருதி "புனித அந்தோனியார் பாடசாலை" யையும் உருவாக்கினார்(1). இப் பாடசாலையின் முதலாவது அதிபராக திரு. யோசப் வர்ணகுலசிங்கம் அவர்கள் பணிபுரிந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப்போக்கில் கிறிஸ்தவம் மட்டுமல்லாது இந்து மற்றும் இஸ்லாமிய மாணவர்களுக்கும் மத வேறுபாடுகளின்றி கல்விச் செல்வத்தை வழங்கிய இப்பாடசாலை இடப்பற்றாக்குறை காரணமாக தற்போதுள்ள இடத்திற்கு 1932.02.02 அன்று மாற்றத்திற்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் இப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு. ஞானமுத்து (யாழ்ப்பாணம்) என்பவர் சேவையாற்றியுள்ளார்(2). இப் பாடசாலை 1936 களில் கனிஸ்ட இடைநிலைப் பாடசாலையாகவும் (JSC), 1944களில் சிரேஸ்ட இடைநிலைப் பாடசாலையாகவும் (SSC), தரமுயர்த்தப்பட்டது. 1981 இல் க.பொ.த. உயர்தரம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதைய அதிபராக திருமதி. கோமளா பீட்டர் திலீப்குமார் அவர்கள் கடமையாற்றுகின்றார். "புனித அந்தோனியார் மகா வித்தியாலயம்" என்னும் இப்பாடசாலையின் மாணவர்களுள் முதுபெரும் எழுத்தாளரான அமரர் வ.அ.இராசரெத்தினம் அவர்களும் ஒருவராவார்.

1930 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட 45 பாடசாலைகள் இயங்கின. இவற்றுள் சம்பூர், தோப்பூர், மூதூர், கிளிவெட்டி, வாழைத்தோட்டம், பள்ளிக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளும் அடக்கம் என்ற குறிப்பொன்றும் உள்ளது.

மேலுமொரு தனியார் முஸ்லீம் பாடசாலை 1922 இல் இங்கு அமைக்கப்பட்டது. மூதூர் பெரிய பள்ளிவாசலுக்கு சொந்தமான காணியில் தற்போதைய குர் ஆன் மதரசா அமைந்துள்ள இடத்தில் அமைக்கப்பட்டது. இதன் தலைமை ஆசிரியராக திரு. அருளப்பு றோச் டிவாஸ் அவர்கள் கடமையாற்றினார். இது 1932 இல் அரசாங்கப் பாடசாலையாகி தற்போது அமைந்துள்ள இடத்திற்கும் மாற்றம் பெற்றது. இப்பாடசாலை அமைக்கப்பட்ட இடத்திற்கு அருகில் டச்சுக்காரர்களின் கோட்டை அமைந்திருந்த காரணத்தால் இது "கோட்டையாற்றுப் பள்ளிக்கூடம்" என்றழைக்கப்பட்டு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலை 1935 ஆம் ஆண்டில் "மூதூர் அரசினர் கனிஸ்ட பாடசாலை" என்றும்,1946 இல் "மூதூர் சிரேஸ்ட பாடசாலை" என்றும், பின்னர் மூதூர் மகா வித்தியாலயமாகி, 1982 இல் "மூதூர் மத்திய மகா வித்தியாலயம்" என்றும் தரமுயர்த்தப்பட்டது. 1995 முதல் "மூதூர் மத்திய கல்லூரி" என அழைக்கப்பட்டு வருகின்றது(3). இப் பாடசாலையின் தற்போதைய அதிபராக ஜனாப் A.H.M.பசீர் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

இங்கு கல்வி கற்றுவந்த பெண்களுக்காக தனியான பாடசாலையொன்று 1953 ஆம் ஆண்டில் "முஸ்லிம் பெண்கள் பாடசாலை" என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் இங்கு அமைந்திருந்த நெற் களஞ்சியசாலை கட்டடத்தில் இயங்கியது. இதன் முதலாவது அதிபராக திருமதி. ஏ. பொன்னுச்சாமி அவர்கள் சேவையாற்றியுள்ளார். பின்னர் 1966 ஆம் ஆண்டு தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டு "அந்-நகர் மகளிர் மகா வித்தியாலயம்" என்னும் பெயர் பெற்றுள்ள இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக எம். முஹ்சீன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

மூதூரிலிருந்த சிங்கள மொழி மாணவர்களின் வசதி கருதி 1953 ஆம் ஆண்டில் சிங்கள மொழி பாடசாலைப் பிரிவொன்றும் மூதூர் மகா வித்தியாலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1976 இல் இப் பிரிவு "சிங்கள மகா வித்தியாலயம்" என்னும் பெயரில் புளியடிச் சந்திக்கு (கெவுளியா வீதி - மணிக்கூட்டு கோபுர சாந்தி) அருகாமையில் இடமாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. இது தற்போது "ஸ்ரீ சுமேதங்கர மகா வித்தியாலயம்" ஆகும்.

மூதூரிலுள்ள ஓர் இடம் அக்கரைச்சேனை. கொல்லன் ஆற்றுக்கு அக்கரையிலும், மறுபக்கமாக ஊரியோடைக் கரைச்சைக்கு அக்கரையிலும் உள்ள இடமாதலாலும், இங்கு குடியேறிய மக்கள் சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டதாலும் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. இப்பகுதியில் பாடசாலையொன்று 1952.05.20 ஆந் தேதி "அக்கரைச்சேனை அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை" என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது. இவ் வித்தியாலயத்தின் முதல் அதிபராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர்.செ.நிக்கலஸ் அவர்கள் சேவைபுரிந்துள்ளர். 1994 களில் "அல்-ஹிதாயா மகாவித்தியாலயம்" என தரமுயர்வு பெற்ற இதன் தற்போதைய அதிபராக ஜனாப். J.M. இக்பால் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

பெரியபாலம் சூழவர வயல்வெளிகளைக் கொண்டுள்ள அழகிய கிராமம். மூதூரிலிருந்து 1930களின் பின்னரே இப்பகுதியில் மக்கள் குடியேறத் தொடங்கினர். இங்கு 1960.10.26 அன்று "பெரியபாலம் அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை" என்ற பெயரில் கல்வி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையின் முதலாவது அதிபராக ஜனாப்.N.செய்யது அகமது அவர்கள் சேவையாற்றியுள்ளார். 1990 ஆம் ஆண்டில் "அல் மினா வித்தியாலயம்" என் பெயர் மாற்றம் பெற்றது. தற்காலத்தில் "அல் மினா மகாவித்தியாலயம்" என்றழைக்கப்படுகின்ற இதன் தற்போதய அதிபராக ஜனாப். S.I.சுஹூத் அவர்கள் பணி புரிந்து வருகின்றார்.

மூதூரில் கேணிக்காடு என்னுமிடத்தில் 1961.01.02 இல் "கேணிக்காட்டுப் பாடசாலை" என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையொன்றை, 1962-09-06 அன்று "கேணிக்காடு அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை" என்னும் பெயரில் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. அக்காலத்தில் பெருமளவிலான கேணிகள் நிறைந்த காட்டுப் பிரதேசமாக இவ்விடம் காணப்பட்டமையால் இது இப்பெயர் கொண்டு அழைக்கப்படலாயிற்று.

இப் பாடசாலையின் முதலாவது அதிபராக ஜனாப். K.M. சுபைர் அவர்கள் சேவையாற்றியுள்ளார். 1967 இல் அல்-ஹிலால் முஸ்லீம் வித்தியாலயம் என்றும், 1976 இல் மகா வித்தியாலயமாகியும் பின்னர் "அல்-ஹிலால் மத்திய கல்லூரி" எனவும் தரமுயர்வு பெற்றுள்ள இப் பாடசாலையின் தற்போதய அதிபராக ஜனாப். M.L.M. முபாரக் அவர்கள் கடமைபுரிந்து கொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்-ஹிலால் மகா வித்தியாலயமானது 05.04.2000 இல் அல்-ஹிலால் சிரேஸ்ட பாடசாலை என்றும் அல்-ஹிலால் கனிஸ்ட பாடசாலை என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அல்-ஹிலால் சிரேஸ்ட பாடசாலையானது அல்-ஹிலால் ஆண்கள் மகா வித்தியாலயமாகி பின்னர் 2008 இல் மத்திய கல்லூரியாகியது.

அதேபோல் அல்-ஹிலால் கனிஸ்ட பாடசாலையானது அல்-ஹிலால் பெண்கள் பாடசாலையாகி பின்னர் மூதூர் முஸ்லீம் மகளிர் கல்லூரி ஆக பெயர் மாற்றம் பெற்றது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக ஜனாப். A.S. உபைத்துல்லா அவர்கள் கடமையாற்றியிருந்தார். 2004 ஆம் ஆண்டிலிருந்து "மூதூர் முஸ்லீம் மகளிர் கல்லூரி" எனப் பெயர் பெற்று விளங்கும் இக்கல்லூரியின் அதிபராக ஜனாப். A.S. உபைத்துல்லா அவர்களே சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் ஷாபி நகரில் (இலுப்பைச்சேனை) பாடசாலையொன்று 1969-09-01 ஆந் தேதி "ஷாபிநகர் அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை" என்ற பெயரில் அரச பாடசாலையொன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ் வித்தியாலயத்தின் முதல் அதிபராக ஜனாப். U.M.A. லத்தீப் அவர்கள் சேவையாற்றிள்ளர். " இமாம் ஷாபிஈ வித்தியாலயம்" என பெயர் மாற்றம் பெற்றுள்ள இதன் தற்போதைய அதிபராக ஜனாப். A.M. சியாத் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

மூதூர் அறபா நகரில் (இடிமண் துறை, கல்லடிச்சேனை ) 1971.11.23 இல் "அறபாநகர் அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை" ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சேவையாற்றிய ஜனாப். A.S. அப்துல் வதூத் அவர்களே இப் பாடசாலையின் முதலாவது அதிபராவார். இன்று "அறபாநகர் வித்தியாலயம்" என கூறப்படுகின்ற இதன் தற்போதைய அதிபராக ஜனாப். A.S. அபூபக்கர் அவர்கள் கடமையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டம் கடற்கரையை அண்டிய பிரதேசம். இங்கு மூதூர் மக்கள் 1930 களின் பின்னரே குடியேறினர். இப் பகுதியில் 05.01.1987 ஆம் ஆண்டு "அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை"யொன்று தோற்றுவிக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக ஜனாப். U.M.A. சமது அவர்கள் பணிபுரிந்துள்ளார். தற்போது "அல்-மனார் வித்தியாலயம்" என்னும் பெயரைக் கொண்டுள்ள இதன் அதிபராக ஜனாப்.U. மஜுன் அவர்கள் சேவையில் உள்ளார்.

மூதூரில் நடுத்தீவு என்னுமிடத்தில் 01.01.1992 இல் "சதாம் வித்தியாலயம்" என்ற பெயரில் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்ட போது ஜனாப். இஸ்ஸதீன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். தற்போது அதிபராக ஜனாப். N. ஜபருல்லா அவர்கள் சேவையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூதூரிலுள்ள பாலநகர் முன்னைய காலங்களில் பாலக்காட்டுக் கரைச்சை என்றழைக்கப்பட்டு வந்துள்ளது. இங்குள்ள "அல்-ஹுசைனியா வித்தியாலயம்" 01.01.1996 இல் ஜனாப்.M.A. சமது அவர்களை முதல் அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இதன் அதிபராக ஜனாப். M. நிஜாம்தீன் அவர்கள் கடமைபுரிந்து வருகின்றார்.

இதே போல ஹைறியா நகரில் (கைவாய்க்கால்சேனை) 01.01.1996 இல் K.M.A. ஜினகா என்பவரைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட "அல்-ஹைறியா வித்தியாலயம்" இன் தற்போதய அதிபராக M. கரீம் அவர்கள் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மூதூரிலுள்ள ஜாயா வீதி (குளத்தடிச்சேனை) என்னும் பகுதியிலேயே உமறு நெய்னாப்புலவர் 1907-12-08 இல் பிறந்தார். இங்கு 1997.01.01 இல் "ஜாயா வித்தியாலயம்" என்னும் பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக ஜனாப். A.M.M. பஷீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சேவையாற்றியுள்ளார். இன்று இப்பாடசாலையின் அதிபராக ஜனாப். V. M. முசம்மில் அவர்கள் பதவி வகித்து வருகின்றார்.

மூதூரிலுள்ள நெய்தல் நகர் உமறு நெயனாப் புலவர் வாழ்ந்து கல்விப் பணிசெய்த பிரதேசம். இப்பகுதி முன்னர் "வேடன்கந்து" என அழைக்கப்பட்டு வந்துள்ளது. இதுபற்றி புலவர் "பறிதலை வேடர் பண்டைநாள் வாழ்ந்த பதியெனும் வேடன் கந்து" என்று கூறுகின்றார். இங்கு 2002.01.01 இல் " அஷ்ரப் வித்தியாலயம்" எனப் பெயருடைய பாடசாலை உருவாக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக ஜனாப். M.L.M.முபாரக் அவர்கள் பதவி வகித்தார். இக்காலத்தில் ஜனாப். M.H.M.றறியால் அவர்கள் பணிபுரிந்து வருகின்றார்.

மூதூரில் இன்னுமொரு பாடசாலையொன்று "ஹக்கீம் வித்தியாலயம்" என்னும் பெயருடன் 2002ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இங்கு முதலாவது அதிபராக அல்ஹாஜ். வி.எம். ஹாலிதீன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். தற்காலத்தில் அதிபராக ஜனாப்.வி.எம். நஹீப் அவர்கள் பதவி வகித்து வருகின்றார்.

இதேபோல் மூதூர் அக்கரைச்சேனையில் மற்றுமொரு பாடசாலையொன்று 2002.03.05 இல் "ஆயிஷா வித்தியாலயம்" என்னும் பெயரில், ஜனாப். J. முகமது மாஹிர் அவர்களை முதல் அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போதும் ஜனாப். J. முகமது மாஹிர் அவர்களே அதிபராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் அஸ்ரப் வீதியில் ஜனாப் A.H. முஹ்சீன் அவர்களை முதல் அதிபராகக் கொண்டு 2003.01.01 இல் "புர்க்கானியா வித்தியாலயம்" ஆரம்பமானது. இப் பாடசாலையில் ஜனாப் A.H. முஹ்சீன் அவர்களே தற்போதும் அதிபராக உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே மூதூர் RDS வீதியில் "தாருல் ஜன்னாஹ் வித்தியாலயம்" 2003.08.06 ஆந் திகதி உருவாகியபோது ஜனாப் M.F.M.முசம்மில் அவர்கள் அதிபராகப் பதவி வகித்தார். தற்போதும் ஜனாப் M.F.M.முசம்மில் அவர்களே அதிபராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் ஹபீப் நகர் பகுதியில் பாடசாலையொன்று 2007.07.04ஆந் தேதி "உமர்பாறூக் வித்தியாலயம்" என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது. இவ் பாடசாலையின் முதல் அதிபராக ஜனாப் M.M.றெளின் அவர்கள் கடமை புரிந்துள்ளர். இதன் தற்போதைய அதிபராக ஜனாப். S. கஸாலி அவர்கள் கடமையாற்றுகின்றார்.

மூதூர் மத்திய கல்லூரிக்கு அருகாமையில் "நஜீப் அப்துல் மஜீத் வித்தியாலயம்" 2013.03.05 அன்று ஆரம்பித்தபோது முதலாவது அதிபராகக் கடமைஏற்ற ஜனாப் S.M.M. நவாஸ் அவர்களே தற்போது வரை இவ் வித்தியாலயத்தின் அதிபராக உள்ளார்.

2015.01.26 அன்று மூதூரில் புதிய இறங்குதுறை வீதி என்னுமிடத்தில் உருவாக்கப்பட்ட "அல்-ஹிலால் கனிஸ்ட பாடசாலை"க்கு ஜனாப் W. சிராஜிடீன் அவர்கள் இன்று வரை அதிபராக சேவையாற்றி வருகின்றார்.

வேதத்தீவு கொட்டியாரத்தில் குடியேறிய கத்தோலிக்க மக்களின் ஆரம்பகால குடியேற்றப் பகுதியாகும். கத்தோலிக்கர்களை வேதக்காரர் என்று அழைப்பதன் காரணமாகவே வேதத்தீவு என்னும் பெயர் ஏற்பட்டது. இதனருகே இன்று மஜீத் நகர் என்றழைக்கப்படும் பகுதியில் மாணவர்களுக்காக "கூபா வித்தியாலயம்" 2015.02.09 ஆந் திகதி ஜனாப் A.J. சுஹைப் அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு (இன்றுவரை) உருவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைபறிச்சான் அழகான உப்புச் சிற்றோடைகளையும், களப்புகளையும், வளமான நிலத்தையும் கொண்டமைந்த கிராமம். இது முன்னர் மருதடிச்சேனை என்றழைக்கப்பட்டது. இங்கு 1833 இல் மெதடிஸ்ட் மிசனரியால் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பின் 1961 இல் கட்டைபறிச்சான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" யாகி, 1972 இல் "விபுலாநந்த வித்தியாலயம்" ஆகியது. 1936 இல் திருவாளர். ஞானமுத்து என்பவர் கடமையாற்றியுள்ளார்(4). இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு. பு. பிரபாகரன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

கூனித்தீவு கிராமத்தில் 1800 களின் நடுப்பகுதியில் மெதடிஸ்த மிசனரியால் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டிருந்தது. கடலாஞ்சிக் குளத்தடிக்கு அண்மையில் அமைக்கப்பட்ட இப்பாடசாலையின் முதலாவது அதிபராக திருவாளர். பொன்னம்பலம் வாத்தியார் (யாழ்ப்பாணம்) அவர்கள் பணிபுரிந்ததாக இவ்வூர் முதியவர்கள் மூலம் அறியமுடிகின்றது. தொடர்ந்து வந்த காலங்களில் முன்னைய கூட்டுறவு சங்க கட்டடம் அமைக்கப்பட்டிருந்த காணியிலும் (சம்பூர்- கூனித்தீவு பிரதான வீதியில்), பின்னர் தற்போதைய இடத்திலும் (பெருவில்லு ஏற்றத்தடி) இயங்கியது.

பாடசாலைத் தகவல்களின் படி 1960.01.08 இல் "கூனித்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" தரம் 1 முதல் 5 வரை ஆரம்பிக்கப்பட்ட போது முதலாவது அதிபராக திரு.க. துரைரெத்தினசிங்கம் அவர்கள் கடமையாற்றினார் என்று அறிய முடிகின்றது. பின்னர் 1967 ஆம் ஆண்டில் தரம் 7, 8 ஆகியன தொடக்கி வைக்கப்பட்டன. இக் கிராமம் 2006 இல் அகோர யுத்தத்தினால் இடப்பெயர்வுக்குள்ளாகி கல்வி தடைப்பட்டு மீண்டும் 2010.06.16 அன்று கிளிவெட்டி அகதிகள் முகாமில் அதிபராக திரு.சோ.கங்கேஸ்வரன் தலைமையில் 54 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. கூனித்தீவு- நவரெத்தினபுரம் மீள்குடியேற்றத்துடன் 2013.03.25 அன்று மீளவும் அதே பழைய இடத்தில் இப் பாடசாலை ஆரம்பிக்கபட்டுள்ளது. தற்போது "கூனித்தீவு நாவலர் வித்தியாலயம்" என்னும் பெயருடன் தரம் 1 - 9 வரையிலான வகுப்புகளை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்ற இப் பாடசாலையின் அதிபராக திரு. சோ. கங்கேஸ்வரன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

ஈச்சிலம்பற்றையில் பிரசித்திபெற்ற சென்பகநாச்சி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இங்கிருந்த மக்களின் விருப்பத்துக்கு இணங்க 1876 ஆம் ஆண்டு பாடசாலை உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது (5). எனினும் இங்குள்ள "ஸ்ரீ சண்பகா மகா வித்தியாலயம்" 1903 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகவும், இவ் வித்தியாலயத்தின் முதல் அதிபராக திருவாளர். கனகப்பா என்பவர் சேவையாற்றியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இப் பாடசாலை மகாவித்தியாலயம் ஆக 1994 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது இங்கு அதிபராக திரு. V. அருள்நேசராசா அவர்கள் கடமையாற்றி வருகின்றார்.

சம்பூர் சகல வளங்களும் நிறைந்து காணப்பெற்றமையால் இப்பெயர் பெற்றதாக கோணேசர் கல்வெட்டு சாசனம் என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது. இங்கு 1897 இல் இந்துப் பாடசாலையொன்று உருவாக்கப்பட்டது. இது 1922 ஆம் ஆண்டு அரச அங்கீகாரத்தைப் பெற்றது (6). "சம்பூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" ஆகப் பெயர் பெற்ற இதன் முதலாவது அதிபராக திரு.கோபாலபிள்ளை அவர்கள் சேவையாற்றியுள்ளார் (7). 1964 இல் "சம்பூர் மகா வித்தியாலயம்" ஆக தரமுயர்த்தப்பட்ட இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு. சோ.பாக்கியேஸ்வரன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

இங்கு மேலுமொரு பாடசாலை ஸ்ரீமுருகன் கோவிலுக்கு அருகாமையில் "சம்பூர் ஸ்ரீ முருகன் வித்தியாலயம்" என்னும் பெயரில் 20.01.1992 ஆம் ஆண்டு திரு. வ. செல்வநாயகம் அவர்களை அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு தற்போது திரு.ம. சச்சிதானந்தம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2006.04.25 இலிருந்து சம்பூர் மக்கள் பாட்டாளிபுரம், நல்லூர், இலங்கைத்துறை முகத்துவாரம், வாகரை போன்ற இடங்களில் இடம்பெயர்ந்திருந்த காலங்களில் பாடசாலையானது அப்பகுதிகளில் தற்காலிகமாக இயங்கியது. 2007 தை மாதம் தொடக்கம் 2010 வரை பாடசாலையின் கல்விநடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் மீண்டும் 2010.06.01 தொடக்கம் 2016.03.24 வரையான காலப்பகுதியில் சேனையூர் மத்திய கல்லூரி விடுதிக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கியது. 2016.03.25 இறுதிக்கட்ட மீள்குடியேற்றத்தைத் தொடர்ந்து பாடசாலை மீண்டும் சம்பூரில் அதேயிடத்தில் இயங்கலாயிற்று.

வாழைத்தோட்டம் கிராமத்தில் 1910.10.15 இல் தனியார் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள இவ் "வாழைத்தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்னும் வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக திரு. செ. கணவதிப் பிள்ளை அவர்கள் சேவையாற்றியுள்ளார். அத்தோடு இதன் தற்போதைய அதிபராக திரு. பி. நவனீதராஜா அவர்கள் கடமையாற்றுகின்றார்.

தோப்பூர் முன்னைய காலங்களில் "உமணகிரி" (உமணர் - உப்பு வியாபாரி) என்றும் கி.பி. 1700 களில் "பெரிய தோப்பு" என்றும் அழைக்கப்பட்டது. தற்போது இப்பகுதியில் உள்ள கிணற்றடிப்புலை என்று கூறப்படும் பகுதியே உமணகிரி ஆகும். இங்கு முற்காலத்தில் ஆதிக்குடி மக்கள் (வேடுவர்) வசித்து வந்தனர் என்று குறிப்புகள் கூறுகின்றன. தோப்பூருக்கு அருகிலுள்ள பள்ளிக்குடியிருப்பில் "உமணர்குடி" என்ற சமூகத்தினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு பள்ளிக்குடியிருப்பு பகுதியில் இருந்து முஸ்லீம்கள் இடம்பெயர்ந்து தோப்பூரில் குடியேறியதாக இப்பிரதேசத்து முதியோர்கள் மூலம் அறியமுடிகின்றது(8). அதே போல பள்ளிக்குடியிருப்பு மக்களும் முன்னரான காலங்களில் தோப்பூரில் வாழ்ந்ததாகவும் செவிவழிக் கதைகள் கூறுகின்றன. (9).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் மெதடிஸ்த மிசனரியால் ஆரம்பப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப் பட்டதாகவும் காலப்போக்கில் இது செயலிழந்து விட்டதாகவும் அறியமுடிகின்றது. எனினும் 1889 களில் “தோப்பூர் முஸ்லீம் கலவன் பாடசாலை” ஆரம்பிக்கப்பட்டது என்றும், பின்னர் 1944 களில் இது ஆண்கள், பெண்கள் பாடசாலையாக பிரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது (10). எனினும் பெண்கள் பாடசாலையான “பாத்திமா முஸ்லீம் மகளிர் கல்லூரி” தகவல்கள் 1925.01.01 இல் தோப்பூர் அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை ஆரம்பிக்கப் பட்டதாகவும், இதன் முதலாவது அதிபராக திருவாளர்.எஸ்.கந்தப்பு அவர்கள் பணிபுரிந்ததாகவும் தெரிவிக்கின்றன.

இதிலிருந்து பிரிந்ததான தோப்பூர் அரசினர் முஸ்லீம் ஆண்கள் பாடசாலை 1952.01.01 இல் ஆரம்பிக்கப்பட்டது என்றும், 1961 ஆம் ஆண்டு மகா வித்தியாலயமாகத் தரமுயர்வு பெற்றதும், தற்போது “அல்-ஹம்றா மத்திய கல்லூரி” எனப் பெயர் பெற்றுள்ளதுமான இதன் முதலாவது அதிபராக எஸ்.எம்.ஹபீப் முகமட் அவர்கள் பணிபுரிந்துள்ளதாகவும் பாடசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக ஏ.பி.ஏ. ஜபார் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

செல்வநகர் தோப்பூர் பிரதேசத்தில் அமைந்துள்ளது. அக்காலத்தில் கொட்டியாபுரப்பற்று பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராக (DRO) இருந்த திரு.மு. செல்வரெட்னம் அவர்களின் நினைவாக செல்வநகர் என்ற பெயர் சூட்டப்பட்டது. இங்கு 1971.01.01 இல் “செல்வநகர் அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை” என்னும் பெயரில் அரச பாடசாலையொன்று தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இங்கே கடமை புரிந்த முதலாவது அதிபரின் பெயர் ஜனாப். A.H.மூமீன் அவர்களாவார். தற்போது “அந்-நூர் வித்தியாலயம்” எனப் பெயர் கொண்டுள்ள இவ் வித்தியாலயத்தின் அதிபராக ஜனாப். S. M. முபாரக் அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இதே செல்வநகரில் 1996.04.22 ஆந் திகதி ஜனாப். A.S.M. அஸ்லம் அவர்களை முதல் அதிபராகக் கொண்டு "அல்-அமான் வித்தியாலயம்" என்னும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது இவ் வித்தியாலயத்தின் அதிபராக ஜனாப். K.M M. ரிழ்மி அவர்கள் கடமையில் உள்ளார்.

அல்லைநகர் தோப்பூர் பிரதேசத்தில் அமைந்துள்ள மற்றுமொரு பகுதியாகும். மிகவும் பெரியதான அல்லைக்குளம் தோப்பூருக்கு தெற்கே உள்ளது. இங்கு "அல்லைநகர் அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை" என்னும் பெயரில் அரச பாடசாலையொன்று 1972.04.17 அன்று ஆரம்பிக்கப்பட்ட போது, முதல் அதிபராக ஜனாப் K.M. அசனாலெப்பை அவர்கள் சேவையாற்றியுள்ளார். "அல்-ஸிபா வித்தியாலயம்" என அழைக்கப்படுகின்ற இப் பாடசாலையின் தற்போதைய அதிபராக ஜனாப். M. M. ரஹீம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

தோப்பூரில் சம காலத்தில் தேவைக்கேற்றாற்போல் நான்கு பாடசாலைகள் உருவாக்கப்பட்டிருந்தன. இவைகளாவன!

2011-01-01இல் ஜனாப் K.M. றிஸ்மி அவர்களை ஆரம்பகால அதிபராகக் கொண்டு " அல்-சல்மா மகளிர் வித்தியாலயம்" என்னும் பாடசாலையும் (இதன் தற்போதைய அதிபர் ஜனாப் S.M. தாஜுீன்),

2013.01.18 இல் ஜனாப். F.U. முஸ்தகீம் அவர்களை முதலாவது அதிபராகப் பெற்று "றோயல் கனிஸ்ட பாடசாலை"யும்" (இதன் தற்போதைய அதிபர் ஜனாப் M.B. முகமட் அனஸ்)

2009.01.01 இல் செல்வநகர் பகுதியில் ஜனாப் A. M. அனஸ் அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு "அல்-ஹாதி வித்தியாலயம்" என்னும் பாடசாலையும் (இதன் தற்போதைய அதிபர் ஜனாப் R.M. அன்வர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லைநகர் பகுதியில் 2010.01.04 ஆந் திகதி ஜனாப் முஸ்தபா மௌஜூத் அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு "அல்-ஸாஹிர் வித்தியாலயம்" என்னும் பாடசாலையும் (இதன் தற்போதைய அதிபர் ஜனாப் K.M. மர்சூக்), ஆகும்.

கிளிவெட்டியில் முற்காலங்களில் பாரிய சந்தைத் தொகுதிகளும், கடைத் தெருக்களும், மடிகையும் (சுங்கச் சாவடி) அமைந்திருந்தன. இங்கு 1906.04.23 இல் ஒரு மெதடிஸ்த மிசன் பாடசாலை உருவாக்கப்பட்டது என்றும் இப்பள்ளிக்கூட கட்டடவேலை 1911 இல் நிறைவடைந்திருந்தது என்றும் குறிப்புகள் காணப்படுகின்றன. கிராமத்தவர் தகவல்களின் படி 1885 இல் ஆரம்பிக்கப்பட்ட கிளிவெட்டி பாடசாலையில் திரு. கதிர்காமர் புண்ணியமூர்த்தி (யாழ்ப்பாணம்) முதலாவது அதிபராக பதவி வகித்துள்ளார். "கிளிவெட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை"யாகி பின்னர் 1976 இல் கிளிவெட்டி மகா வித்தியாலயமாகிய இதன் தற்போதைய அதிபராக திரு. பா.தேவராஜா அவர்கள் கடமையாற்றுகின்றார்.

இருதயபுரம் (பச்சனூர்) வயல்வெளிகளும் தென்னஞ் சோலைகளும் நிறைந்த கிராமம் இங்கே 1903.03.01 இல் ரோமன் கத்தோலிக்க மிசனறியால் பாடசாலையொன்று உருவாக்கப்பட்டது. இதுவே இருதய வித்தியாலயமாகும்.

பள்ளிக்குடியிருப்பு கிராமத்தில் 1902 களில் மெதடிஸ்த மிசனறியால் பாடசாலையொன்று உருவாக்கப்பட்டதாக அறியமுடிகின்றது (11). அத்தோடு 1927 இல் பள்ளிக்குடியிருப்பிலும் 1930 இல் மல்லிகைத்தீவிலும் வெஸ்லியன் மிசன் பாடசாலைகள் மூடப்பட்டதாகவும், பின்னர் மூடப்பட்ட இவ்விரு பாடசாலைகளும் அரசினால் 1930 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்டிருந்த தாகவும் குறிப்புகள் கானப்படுகின்றன (12). பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயமாகவிருந்து 1992ம் ஆண்டிலிருந்து "பள்ளிக்குடியிருப்பு கலைமகள் இந்துக் கல்லூரி" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படும் இதன் அதிபராக திரு. நா. கிட்ணதாஸ் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

மல்லிகைத்தீவு நாற்புறமும் வயல்வெளிகள் சூழ்ந்துவர பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கும் கிராமம். இங்கு இயங்கிக் கொண்டிருந்த வெஸ்லியன் மிசன் பாடசாலையொன்று 1930 இல் மூடப்பட்டதாகவும், பின்னர் மூடப்பட்ட இப் பாடசாலையானது அரசினால் 1930 ஆம் ஆண்டு பொறுப்பேற்கப்பட்டிருந்த தாகவும் குறிப்புகள் கானப்படுகின்றன (12)

ஊர் பெரியோர்களின் கருத்துப்படி ஆரம்ப காலங்களில் மல்லிகைத்தீவு, மேன்காமம், கங்குவேலி கிராம மாணவர்களுக்கான மிசன் பாடசாலையானது மேன்காமத்துக்கும் மல்லிகைதீவுக்கும் இடைப்பட்ட சக்கரவெட்டை பகுதியில் இயங்கிவந்ததாகக் கூறுகின்றனர். பிற்காலத்தில் 01.02.1952 இல் மடத்துக்காணி எனப்படுகின்ற வளவில் (தற்போதைய பலநோக்கு கூட்டுறவு சங்கம் அமைந்துள்ள இடம்) ஊர்பெரியோர்களால் மல்லிகைத்தீவு அ.த.க. வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக யாழ்பாணத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் என்பவர் கடமையாற்றியுள்ளார். எனினும் பாடசாலையானது தற்போது அமைந்துள்ள இடத்திற்கு 1965 ஆம் ஆண்டில் இடமாற்றப்பட்டது. அத்தோடு 1979 ஆம் ஆண்டு மகாவித்தியாலயமாகவும் தரமுயர்த்தப்பட்டது. தற்போது அதிபராக திருவாளர் S.I. ஞானேந்திரன் அவர்கள் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேன்காமம் தமிழ் சிற்றரசர்களான கொட்டியாபுரத்து வன்னிமைகள் பலர் வாழ்ந்த பிரதேசமாகும். 1930 ஆம் ஆண்டில் வெஸ்லியன் மிசனுக்குரிய மேன்காமம் மற்றும் கங்குவேலி பாடசாலைகள் மூடப்பட்டதாக கூறப்படுகின்றது (13). இருப்பினும் பாடசாலை தகவல்களின் படி மேன்காமத்தில் ஆரம்பப் பாடசாலையொன்று 06.08.1956 அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக திரு. பூபாலபிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் பணிபுரிந்துள்ளார். "மேன்கமம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம் என்னும் இப் பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு. V.கதிர்காமநாதன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

கங்குவேலி யானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கிய திருக்கரைசையம்பதி மாநகரின் எச்சங்களை மிகுதியாகக் கொண்டுள்ள பிரதேசமாகும். பாடசாலை தொடர்பான தகவல்களின் படி 1959.09.01 இல் "கங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக திரு. வைரமுத்து குழந்தைவேல் அவர்கள் சேவை புரிந்துள்ளார். "கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம்" என்னும் பெயர் கொண்டுள்ள இப் பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு. எஸ். சுந்தரலிங்கம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

மாவடிச்சேனை புகழ் பெற்ற வெருகல் முருகன் கோவிலுக்கு அண்மையில் அமைந்துள்ள கிராமம். இக்கிராமத்தில் 1930 ஆம் ஆண்டு மிசனரியால் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. "மாவடிச்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்னும் பெயர்கொண்ட இதன் தற்போதைய அதிபராக திரு. ஆர். சச்சிதானந்தம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

பட்டித்திடல் நவீனகாலத்தில் கல்வெட்டு சாசனங்களை உருவாக்கி புகழ் கொண்ட கிராமம். இங்கே 1936.10.01 இல் "பட்டித்திடல் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" உருவாக்கப்பட்டது. அப்போது பணிபுரிந்த முதலாவது அதிபர் திரு. கே. நிக்லஸ் அவர்களாவார். 2006ஆம் ஆண்டிலிருந்து "பட்டித்திடல் மகா வித்தியாலயம்" என அழைக்கப்படுகின்ற இப்பாடசாலையின் அதிபராக திரு. கே. பேரின்பநாதன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால்குழி பண்டைய கொட்டியாரத்துறையின் ஓரமாக தனித்தீவு போல் அமைந்துள்ள வனப்பான கிராமம். பாடசாலைத் தகவல்களின் படி 1946.03.14 அன்று "இறால்குழி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதன் முதலாவது அதிபராக மட்டக்களப்பை சேர்ந்த திரு. கணபதிபிள்ளை அவர்கள் பணியாற்றியுள்ளார். தற்போது "ஸ்ரீ கஜமுகா தமிழ் வித்தியாலயம்" என அழைக்கப்படுகின்ற இப்பாடசாலையின் அதிபராக திரு. கே. வல்லிபுரம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

எனினும் இன்னுமோர் வரலாற்றுத் தகவலின் படி 1939 களிலேயே ரோமன் கத்தோலிக்க மிசனரியால் ஆரம்பப் பாடசாலையொன்று இறால்குழியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.(14)

வெருகல் முகத்துவாரம் வெருகல் கங்கையின் ஒரு கிளையாறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள கிராமம். இங்கு "அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" ஒன்று 1952.02.01 இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சேவையாற்றிய திரு. சி. செல்லத்துரை அவர்கள் இப் பாடசாலையின் முதலாவது அதிபராவார். இன்று "துவாரகா வித்தியாலயம்" என கூறப்படுகின்ற இக் கல்வித் தளத்தின் தற்போதைய அதிபராக திரு.ரி.சொக்கலிங்கம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

சேனையூர் வளைவுகள் பல கொண்ட சிற்றாறுகளும் வனப்பு நிறைந்த களியோடைகளும் கொண்ட அழகிய கிராமம். இங்கு 1957.11.02ஆந் தேதி "சேனையூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்னும் பெயரில் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்ட போது முதலாவது அதிபராக திருவாளர் ஞானமுத்து அவர்கள் பணியாற்றியுள்ளார். 1968களில் மகா வித்தியாலயமாகி, 1993 இல் மத்திய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டது. தற்போது இங்கு அதிபராக திரு.இரா.இரத்தினசிங்கம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள மருதநகர் பகுதியில் 1996.03.20 இல் "புவனேஸ்வரி வித்தியாலயம்" என்னும் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சேவையாற்றிய திரு.செ. அருட்பிரகாசம் அவர்களே இப் பாடசாலையின் முதலாவது அதிபராவார். தரம்-5 வரையுள்ள இதன் இன்றைய அதிபராக திருமதி. உமா ரதீஸ்பரன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரான காலப் பகுதியில் அல்லை- கந்தளாய் விவசாய விரிவாக்கல் திட்டங்கள் மற்றும் குடியேற்றத் திட்டங்கள் காரணமாக மூதூர் தெற்குப் பகுதியிலும் 1953 களில் பல குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. இதனால் இங்கு வாழ்ந்து வந்த மாணவர்களின் கல்வித் தேவைகளுக்காக 1953 களின் பிற்பகுதியில் லிங்கபுரம், பாரதிபுரம், ஜின்னாநகர் போன்ற பிரதேசங்களில் பல பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

லிங்கபுரம் அல்லை ஆற்றின் இடது புறத்திலே 1953ஆம் ஆண்டு "அல்லை இடது கரை- 3" (LB-3) என்னும் பெயரில் அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம். கிளிவெட்டி, சம்பூர், மூதூர் போன்ற பிரதேசங்களில் இருந்து மக்கள் குடியேற்றப்பட்டனர். 1971 இல் லிங்கபுரம் என்று பெயர் மாற்றப்பட்டது. இக் கிராமத்திலிருந்தவர்கள் 1973 ஆம் ஆண்டு புதிதாக குடியேறிய கிராமமே "ஆதியம்மன்கேணி" என்னும் கிராமமாகும்.

இக் கிராமத்திலிருந்த ஊர் மக்களின் முயற்சியினால் 1958 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஓலைக் கொட்டிலில் தனியார் பாடசாலையொன்று உருவாக்கப்பட்டது. இது 1959.09.01 இல் "அல்லை இடது கரை மூன்று அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" ஆக அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டது. இதன் முதலாவது அதிபர் திரு.கா. சீவரெத்தினம் அவர்களாவார்.தற்போது "லிங்கபுரம் சரஸ்வதி வித்தியாலயம்" என்றழைக்கப்படுகின்ற இப்பாடசாலையின் அதிபராக திரு. தா. சதீஸ்வரன் அவர்கள் பணியாற்றுகின்றார். மேலும் இதே தினத்தில் பாரதிபுரம், தங்கநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அரிப்பு), ஜின்னாநகர் போன்ற கிராமங்களிலும் அரசாங்க பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன.

பாரதிபுரம் அல்லை ஆற்றின் இடது புறத்திலே அமைக்கப்பட்ட குடியேற்றக் கிராமம். இதற்கு முன்னர் "அல்லை இடது கரை -4" (LB-4) என்னும் பெயருடன் விளங்கிய கிராமம். இங்கு 1959-09-01 இல் "அல்லை இடது கரை -4 அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" ஆரம்பிக்கப்பட்டது. இக்கிராமம் மட்டக்களப்பிலிருந்து 58 மைல்கள் தொலைவில் அமைந்திருப்பதால் " ஐம்பத்தெட்டு " என்றும் அழைக்கப்படுகின்றது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக திரு.S. ஜீவரெட்னம் அவர்கள் பணிபுரிந்துள்ளார். "பாரதி வித்தியாலயம்" என்றழைக்கப்படுகின்ற இப் பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு.V. மதிபாலசிங்கம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

தங்கநகர் கிளிவெட்டி ஆற்றங்கரைக்கு அக்கரைப் பக்கமாகவுள்ளதும், அரிப்பு என்று அழைக்கப்பட்டதுமான கிராமம் இதுவாகும். இக்கிராமத்தில் 1959.09.01 இல் "அரிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதலாவது அதிபராக திரு.சி.அருளானந்தம் அவர்கள் கடமையாற்றியுள்ளார். தற்போது "சண்பகவல்லி வித்தியாலயம்" என்று அழைக்கப்படுகின்ற இப் பாடசாலையின் அதிபராக திரு.P.கோனேஸ்வரராசா அவர்கள் கடமையாற்றுகின்றார்.

அல்லை இடது கரை -5 (LB-5) அல்லது 59 என அழைக்கப்பட்ட ஜின்னாநகர் குடியேற்ற கிராமத்தில் 1959.09.01 இல் "அல்லை இடது கரை-5 அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை" ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபர் S.M.H. முகமட் அவர்களாவார். 1977 இல் மகா வித்தியாலயமாக தரமுயர்வு பெற்று "அல் தாஜ் மகாவித்தியாலயம்" என்றழைக்கப்படுகின்ற இப்பாடசாலையின் தற்போதய அதிபராக A.L.கலீலுர் ரகுமான் அவர்கள் பணியாற்றுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவெளி என்னும் சுற்றிவர வயல்வெளிகளும் நீர்நிலைகளும் நிறைந்து காணப்படுகின்ற கிராமத்தில் திரு. செ.சிவஞானமூர்த்தி அவர்களை முதல் அதிபராகக் கொண்டு 1960.01.01 இல் "பெரியவெளி அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம் " தொடங்கப்பட்டது. தற்போதைய காலத்தில் இங்கு திரு.T.துரைநாயகம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றுகின்றார். இங்கு முன்னர் பெருவெளிக் குளம் என்னும் பெயருடைய குளம் காணப்பட்டது. அல்லை குடியேற்றத்தின் பின்னர் இதன் பெருமளவு பகுதி வயல் நிலங்களாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைத்துறை முகத்துவாரம் வங்கக் கடலின் வாசலாக இலங்கையின் கிழக்குப் பக்கமாக காணப்படுகின்ற அழகிய கடலோர கிராமம். இங்கு 1961.10.01 இல் "இலங்கைத்துறை முகத்துவாரம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக திரு.இ. தர்மலிங்கம் அவர்கள் பணியாற்றிள்ளார். தற்போது இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக்கல்லூரி" எனப் பெயர் பெற்றுள்ள இதன் அதிபராக திரு. சி. தயாபரன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

இதே போல இக் கிராமத்தில் திரு.P. சத்தியசீலன் அவர்கள் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அதிபராக கடமை செய்கின்ற "இலங்கைத்துறை முகத்துவாரம் கனிஸ்ட வித்தியாலயம்" என்னும் பாடசாலையொன்றும் 2012.01.02 இல் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடற்கரைச்சேனை மாவலி கிளை ஆறு கடலோடு சங்கமிக்கும் இடங்களில் ஒன்று. இக் கிராமத்தில் திருவாளர். வீரகுலசிங்கம் அவர்களை அதிபராகக் கொண்டு "கடற்கரைச்சேனை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" 1961-05-01 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையில் திரு.P.சுதாகரன் அவர்கள் தற்போது அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். (திரு.ம. காளிராசா 2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இலங்கையின் ஆதிக்குடி மக்கள் வாழ்ந்து வருகின்றதும், மூதூர் கிழக்கிலுள்ளதுமான ஒரு கிராமம். ரோமன் கத்தோலிக்க மிசனரியால் மட்டப்புக்களியில் ஒரு பாடசாலை அமைக்கப்பட்டிருந்தது என்றும், இவ்விடத்து வாசிகள் நல்லூருக்கு இடம் பெயர்ந்தமையால் இப்பாடசாலையும் நல்லூருக்கு இடமாற்றப்பட்டதாக கூறப்படுகின்றது (15).

இங்கு 1961.01.15 இல் "மட்டப்புக்களி பாடசாலை" என்னும் பெயரில் அரச பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக திரு.செ. விபுணசேகரம் அவர்கள் பணியாற்றியுள்ளார். இப்போது "நல்லூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்றழைக்கப்படுகின்ற இதன் அதிபராக திரு.S. தியாகராசா அவர்கள் கடமைபுரிகின்றார்.

ஆசாத் நகரில் 1971.11.10 ஆந் திகதி "அல்-பளாஹ் வித்தியாலயம்" என்னும் பெயருடைய பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. ஜனாப். வஹாப் அவர்கள் இதன் முதலாவது அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவ் வித்தியாலயத்தின் தற்போதைய அதிபராக ஜனாப். S.D.M. சாலி அவர்கள் பதவி வகித்து வருகின்றார்.

மூதூர் ஆலிம்சேனை யில் 1975.07.01 ஆந் திகதி ஜனாப் M.S.M.ஜுனைது அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு "ஆலிம்சேனை அரசினர் முஸ்லீம் கலவன் பாடசாலை" தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இவ் வித்தியாலயத்தில் தற்போது அதிபராக ஜனாப். M.I.A. வாஜித் அவர்கள் கடமையாற்றுகின்றார். முன்னைய காலங்களில் இவ்விடம் ஆலம்சேனை என்றழைக்கப்பட்டும் வந்துள்ளது.

பாட்டாளிபுரம் ஆதிக்குடிகள் மக்கள் வாழ்கின்ற கிராமங்களுள் ஒன்று. இங்கு 1987.06 இல் "பாட்டாளிபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" என்ற பெயரில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது முதலாவது அதிபராக திரு. ஒ.வர்ணகுலநாதன் அவர்கள் கடமையாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இப்பாடசாலையின் அதிபராக திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் சேவையாற்றி வருகின்றார்.

தங்கபுரம் 1971 ஆம் ஆண்டு மக்கள் குடியேறிய கிராமம். பள்ளிக்குடியிருப்பிற்கு அருகாமையிலுள்ள இக்கிராமத்தில் "ஸ்ரீ கணேசா வித்தியாலயம்" என்னும் பெயரில் 05.04.1990 அன்று அரச பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்ட போது திரு.க. அம்பிகைபாகன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். தற்போது இப்பாடசாலையின் அதிபராக திரு. ஏ. தில்லையம்பலம் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

அம்மன் நகர் புராதன வரலாற்றுப் பெருமை மிக்க அம்மச்சியம்மன் ஆலயத்தைக் கொண்ட கிராமம். கட்டைபறிச்சான் பகுதியிலுள்ள இக் கிராமத்து சிறார்களின் நன்மை கருதி திருமதி. அன்னபூரணம் கனகசபை என்பவரை அதிபராகக் கொண்டு 04.05.1990 இல் ஆரம்பிக்கப்பட்ட "அம்மன் நகர் அம்பாள் வித்தியாலயம்" இன் தற்போதய அதிபராக திரு.A.சுதாகரன் அவர்கள் கடமை புரிந்து வருகின்றார். (திரு. ராசதுரை-2017)

சூடைக்குடா கொட்டியாபுரப்பற்றின் வடக்கிலுள்ள கிராமம். இங்குள்ள குடாக்கடலில் சூடை மீன்கள் அதிகமாகப் பிடிபடுவதன் காரணமாக இப்பெயர் ஏற்பட்டது எனக் கூறப்படுகின்றது. இதன் எல்லையில் வரலாற்றுப் புகழ்பெற்ற கெவுளிமுனை உள்ளது. இக்கிராமத்து மக்கள் 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி பாதிப்பின் பின்னர் குன்றத்தூர் (பள்ளவெளிப் புலவு) என்னுமிடத்தில் 2005 இல் சூடைக்குடாவாகவே குடியமர்த்தப்பட்டனர். இங்கு நிலத்தடி குடிநீர் தட்டுப்பாடு காரணமாக இம்மக்கள் மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தாங்கள் 2004சுனாமிக்கு முன்னர் வாழ்ந்த இடங்களையும் பாவிக்க முயற்சி செய்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடைக்குடாவில் 1992.01.20 இல் தோற்றுவிக்கப்பட்ட "சூடைக்குடா பாரதி வித்தியாலயம்" என்னும் பாடசாலையின் முதலாவது அதிபர் திரு. பா. தேவராசா அவர்கள் ஆவார். 2006 ஆம் ஆண்டு யுத்தத்தால் மக்கள் இடம்பெயர்ந்து நான்கு ஆண்டுகளின் பின்னர், கிளிவெட்டி அகதிகள் முகாமில் 2010.06.15 ஆம் திகதி தற்காலிகமாக பாடசாலை ஆரம்பித்து கல்வி செயற்பாடுகள் நடைபெற்றன. அதைத் தொடர்ந்து சூடைக்குடா மீள் குடியேற்றத்தின் பின் 2014.01.02 அன்று மீண்டும் அதேயிடத்தில் (குன்றத்தூர்) பாரதி வித்தியாலயம் இயங்கத் தொடங்கியது. இடம் பெயர்ந்து குன்றத்தூரில் இயங்கி வருகின்ற இவ் வித்தியாலயத்தின் தற்போதைய அதிபராக திரு. சி. கிருபைதாஸ் அவர்கள் கடமைபுரிந்து வருகின்றார்.

மணல்சேனை கிராமத்தில் 01.10.1993 அன்று திரு.ப.மதிபாலசிங்கம் அவர்களை முதலாவது அதிபராகக்கொண்டு " விவேகானந்தா வித்தியாலயம்" என்னும் பெயருடைய பாடசாலை தொடங்கப்பட்டது. இப்பாடசாலையின் தற்போதைய அதிபராக S.பத்மநாதன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

சந்தோசபுரம் கிராமத்தில் 01.01.1994 இல் திரு.சி. சிவஞானசுந்தரம் அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு பாடசாலையொன்று "கிரவற்குழி சிவசக்தி வித்தியாலயம்" என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. கிரவற்குழி என்று முன்னைய காலங்களில் அழைக்கப்பட்ட இக் கிராமத்தில் அமைந்துள்ள இப் பாடசாலையில் தற்போது திரு.V.நவரட்ணராஜா அவர்கள் சேவையாற்று கின்றார். (திரு. சத்தியசீலன் -2017)

மாவடிச்சேனை பகுதியிலும் சேனையூர் என்றழைக்கப்படும் கிராமம் ஒன்றுண்டு. இங்குள்ள "சேனையூர் வித்தியாலயம்" 1996.03.20 இல் தொடங்கப்பட்ட போது திரு.சு. அரசரெட்ணம் அவர்களே முதலாவது அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இன்று இப்பாடசாலையின் அதிபராக திரு.ஆ. விஜயராஜா அவர்கள் உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்துறை பண்டைய காலங்களில் எம் இலங்கை நாட்டின் பெயர் சொல்லுமளவுக்கு பிரசித்தி பெற்ற முக்கிய துறைமுகப் பட்டினம் ஆகும். புகழ்பெற்ற செண்பகநாச்சியம்மனின் ஆதி கோயில் இங்குண்டு. இங்கு 08.01.1996 இல் திரு.பூ. நவநீதராஜா அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு "இலங்கைத்துறை அலைமகள் வித்தியாலயம்" என்னும் பெயரில் பாடசாலையொன்று தோற்றுவிக்கப்பட்டது. தற்போது திரு.ஏ. சுரேஸ்குமார் அவர்கள் அதிபராகப் பதவி வகித்து வருகின்றார்.

கல்லடி என்னும் கீழைக் கடலோரக் கிராமத்தில் பிரசித்தி பெற்ற மலை நீலியம்மன் கோவில் உண்டு. இக்கிராமத்தில் 1996.01.08 அன்று திருமதி. ம.கலாராணி அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு "கல்லடி ஸ்ரீ மலை நீலியம்மன் வித்தியாலயம்" என்னும் பாடசாலை உருவாக்கப்பட்டது. இதன் தற்போதய அதிபராக திரு. மு. அருள்சிவம் அவர்கள் பதவி வகிக்கின்றார்.

அயல் கிராமமான புன்னையடி யிலும் இதே தினத்தில் (1996.01.08) அதிபர் திரு.க. ஜெயசங்கர் அவர்களுடன் "புன்னையடி நாமகள் வித்தியாலயம்" என்னும் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது.. தற்காலத்தில் திரு. T. கேதீஸ்வரன் அவர்கள் அதிபராகவுள்ளார்.

பூமரத்தடிச்சேனை என்பது ஈச்சிலம்பற்றை பகுதியிலுள்ள கிராமமாகும். இங்கு " ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம்" 1996.01.24 இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு சேவையாற்றிய திருமதி. விஜயகுமாரி கந்தசாமி அவர்கள் இப் பாடசாலையின் முதலாவது அதிபராவார். இக்கல்வி நிலையத்தின் தற்போதைய அதிபராக திரு. மு. நவரட்ணராஜா அவர்கள் கடமையாற்றுகின்றார்.

மலைமுந்தல் ஆதிக்குடி மக்களைக் கொண்ட கிராமம். முன்னொரு காலத்தில் ஆமைப்பதி என்னும் இடத்தில் (வெருகலுக்கு அருகாமையிலுள்ள பகுதி) வாழ்ந்து வந்த இம்மக்களின் மூதாதையினர் அங்கு ஏற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளை நோய் காரணமாக இவ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்து மலைமுந்தல் என்னும் இடத்தில் குடியேறினர் (கொட்டியாபுரப்பற்று வரலாறு - எம்.ஏ. சமது). இங்கு "மலைமுந்தல் மலைமகள் வித்தியாலயம்" 1996.03.20 ஆந் திகதி திரு.சு. செல்லச்சாமி அவர்களை முதலாவது அதிபராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இங்கு தற்போதும் திரு.சு.செல்லச்சாமி அவர்களே அதிபராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சின்னக்குளம் கிராமம் பள்ளிக்குடியிருப்பிற்கு அருகாமையில் உள்ளது. 1997.01.01 அன்று திரு.வ. தில்லையம்பலம் அவர்களை முதல் அதிபராகக் கொண்டு "சின்னக்குளம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயம்" ஆரம்பிக்கப்பட்டது. தற்போது திரு.ஏ. பாக்கியராஜா அவர்கள் அதிபராக பணிபுரிந்து வருகின்றார்.

வட்டவன் என்பது வெருகல் பகுதியிலுள்ள கிராமமாகும். ஆதிக்குடி தமிழ் மக்கள் வாழுகின்ற இப்பகுதியில் இன்றும் கற்குகைகள், பிராமிக் கல்வெட்டுக்கள் போன்ற பண்டைத்தமிழர் எச்சங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்காது. இங்கு 1997.01.01 இல் "வட்டவன் ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் வித்தியாலயம்" என்னும் பாடசாலையொன்று அதிபராக திரு.த. சொக்கலிங்கம் அவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையில் தற்போது திரு. T. கோணேஸ்வரன் அவர்கள் அதிபராக உள்ளார்.

உப்பூறல் கிராமத்தில் 1997.02.21 இல் "உப்பூறல் சிவசக்தி வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வித்தியாலயத்தின் முதலாவது அதிபராக திரு. க. சந்திரானந்தம் அவர்கள் கடமையாற்றியுள்ளார். தற்போது திரு. தயாபரன் அவர்கள் அதிபராக பதவி வகிக்கின்றார். இப்பகுதியில் உப்பூறல், உமணர்கிரி, உமணர்குடி என்பன (உமணர் என்றால் உப்பு வியாபாரி என்று பொருள்) வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றமை சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனன்வெளி கிராமத்தில் அவ்வூர் சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக 1998.01.21 ஆந் திகதி அதிபர் திரு.K. தெய்வேந்திரம் அவர்கள் தலைமையில் "சீனன்வெளி ஆதவன் வித்தியாலயம்" என்னும் பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது. தற்போது. இங்கு திரு. லிங்கேஸ்வரன் அவர்கள் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

சந்தனவெட்டை கிராமத்தில் 2005.04.05 இல் பாடசாலையொன்று திரு.க. சச்சிதானந்தம் அவர்கள் தலைமையில் "ஐங்கரன் வித்தியாலயம்" என்னும் பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு. இராசதுரை அவர்கள் கடமையாற்றி வருகின்றார்.

ஆதியம்மன் கேணி 1973 ஆம் ஆண்டு லிங்கபுரம் கிராமத்து மக்கள் புதிதாக குடியேறிய கிராமம். வெள்ளந்தாங்கி அணைக்கட்டை எல்லையாகக் கொண்ட கிராமம். அதற்கும் அப்பால் தமிழர்களின் பண்டைய வாழிடங்கலான திருக்கரைசை மற்றும் திருமங்கலாய் என்பன உள்ளமை குறிப்பிடத்தக்கது. இக் கிராமத்து பிள்ளைகளின் போக்குவரத்து சிரமங்களைக் கருத்திற்கொண்டு இவ்வூரில் "ஆதியம்மன்கேணி வித்தியாலயம்" என்னும் பெயரில் 2014.01.16 இல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு அன்றிலிருந்து இன்றுவரை திரு.U. குபேந்திரராஜா அவர்கள் அதிபராக கடமையாற்றி வருகின்றார்.

பூநகர் கிராமத்திலுள்ள "திருவள்ளுவர் வித்தியாலயம்" 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபர் பற்றிய தகவல் அறிய முடியாதுள்ளது. இங்கு தற்காலத்தில் அதிபராக திரு.P.M.மதிபாலசிங்கம் அவர்கள் சேவையாற்றி வருகின்றார்.

முத்துச்சேனையில் 1972.08.01 ஆந் திகதி "முத்துச்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபராக திரு. சங்கரலிங்கம் அவர்கள் கடமைபுரிந்துள்ளார். இப்போது திரு.ஜெயசங்கர் அவர்கள் அதிபராகப் பதவி வகித்து வருகின்றார்.

கறுக்காமுனை என்னுமிடத்தில் 1940 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "அரசினர் தமிழ் கலவன் பாடசாலை"யின் அதிபராக தற்போது திரு. பு. கிருஸ்னானந்தமூர்த்தி அவர்கள் கடமையாற்றுகின்றார்.

ஈச்சிலம்பற்று பகுதியிலுள்ள "சிவானந்தா கனிஸ்ட வித்தியாலயம்" 2012.01.02 அன்று தோற்றுவிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை திரு.T.ரெங்கநாதன் அவர்களே அதிபராக இருந்து வருகின்றார்.

பாலத்தோப்பூர் என்னுமிடத்தில் 1958 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1959 இல் அரசாங்கப் பாடசாலையாகி பின்னர் "சாஹிரா வித்தியாலயம்" எனப் பெயர் கொண்டுள்ள பாடசாலையின் ஆரம்பகால அதிபராக ஜனாப் M.S. ஆப்தீன் அவர்கள் கடமையாற்றியுள்ளார். தற்போது அதிபராக ஜனாப். A.R.M. ஆரிப் அவர்கள் பதவியில் உள்ளார்.

இலக்கந்தை என்னும் மூதூர் கிழக்கிலுள்ள கடலோரக் கிராமத்தில் 1920 களில் பாடசாலை ஒன்று இயங்கி வந்ததாகக் கூறப்படுகின்ற போதிலும் இதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. 2006 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினால் இப்பாடசாலையும் இலக்கந்தை கிராமமும் முற்றாக இடம் பெயர்க்கப்பட்டன. தற்போது இவை மீண்டும் அதே பெயர்களுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து புதியதோர் இடத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இவ் "இலக்கந்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை" யின் தற்போதைய அதிபராக திரு. V. யோகநாதன் அவர்கள் பதவி வகிக்கின்றார்.

சேருவில பிரதேசத்துக்குட்பட்ட பாடசாலைகள் 1950 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட அல்லை-கந்தளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய குடியேற்றத் திட்டத்தின் பின்னரே உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவலி கங்கையின் கிளை நதியான அல்லை ஆற்றின் இடது புறத்திலும் வலது புறத்திலுமாக பல குடியேற்றக் கிராமங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதன்போது திருகோணமலை மாவட்டத்திற்கு அப்பாலுள்ள தென்னிலங்கையிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான சிங்கள மக்கள் இங்கு கொண்டு வரப்பட்டு குடியிருப்புக் காணி, நெற்செய்கைக் காணி என்பன வழங்கப்பட்டு குடியமர்த்தப் பட்டிருந்தனர். இதேபோல மூதூர் பகுதியிலிருந்தும் ஒருசில கிராமங்களில் தமிழ், முஸ்லீம் மக்களும் குடியமர்த்தப்பட்டனர்.

இதன் காரணமாக கொட்டியாபுரப் பற்றிற்கு வளமூட்டிய அல்லைக்குளம், பெருவெளிக்குளம் என்னும் நீர்பிடிப்பு பிரதேசங்கள் வயல்வெளிகளாகவும் குடியிருப்புகளாகவும் மாற்றம் அடைந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்கள மொழி மாணவர்களுக்காக பின்வரும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மகாவெலிகம மகா வித்தியாலயம், தெகிவத்த வித்தியாலயம்
நீலாப்பொல வித்தியாலயம், சோமபுர வித்தியாலயம்
கவந்தீச வித்தியாலயம், ஸ்ரீ சுமேதங்கர வித்தியாலயம்
புளக் சி வித்தியாலயம்.

ஆரம்ப காலங்களில் இப் பாடசாலைகள் மூதூர் கல்விக் கோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த போதிலும் பின்னர் இப்பகுதி சிங்கள மொழிப் பாடசாலைகள் கந்தளாய் வலயக் கல்விப் பணிமனையின் கீழ் இயங்கி வருகின்றன.

இவ்வாறாக மூதூர் கல்விப் பிரிவுக்குள் 51 பாடசாலைகளும், ஈச்சிலப்பற்று கல்விப் பிரிவுக்குள் 18 பாடசாலைகளும், தோப்பூர் கல்விப் பிரிவுக்குள் 17 பாடசாலைகளும் உள்ளடங்குகின்றன. இங்கு என்னால் கடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்தின் மத்தியில் 2015-2016 களில் பெறப்பட்ட தகவல்களில் தவறுகள் விலக்குகள் காணப்படின் அறியத்தந்து திருத்திக் கொள்ள உதவவும். இப்பணிக்கு உயரிய அளவில் உதவிகள் நல்கிய அப்போதைய மூதூர் வலய கல்வி அதிகாரி மதிப்புக்குரிய அகிலா கனகசூரியம் அம்மணீ அவர்களுக்கும், இப்பிரதேச பாடசாலைகளின் அதிபர்களுக்கும் எனது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிற்குறிப்பு :- சேனையூரில் சிறிய மாணவர்களின் நலன்கருதி சேனையூர் மத்திய கல்லூரி வளாகத்தில் 2017.01.02 அன்று திருமதி.சித்திரகுமாரி துஷ்யந்தன் அவர்களை அதிபராகக் கொண்டு "சேனையூர் கனிஸ்ட பாடசாலை" ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. திருமதி.எம்.எஸ்.எம். ஜெகதீசன் அதிபர் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா மலர் 2013-10-23 - (பக்-56)
2. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.எ.சமது (பக்-109)
3. சுவடுகள்- பாகம்-1 (2011) - ஜுவைரியா ஷெரிப் (பக்-159)
4. "பொலி" முத்திங்கள் பா இதழ் (2015 சித்திரை)
5. காலனித்துவ திருகோணமலை(2010) - கனகசபாபதி சரவணபவன்(பக்-231)
6. மேலது (251)
7. சம்பூர் பிரதேசத்தின் தொன்மை(2013) - வைத்தியகலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமார் (பக்-47)
8. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.எ.சமது (பக்-225)
9. பத்தினியம்மன் குளிர்த்திக் காவியம் (2015)- கலாபூசணம் த. சிதம்பரப்பிள்ளை (பக்-18)
10. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.எ.சமது (பக்-236)
11. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.எ.சமது (பக்-303)
12. காலனித்துவ திருகோணமலை(2010) - கனகசபாபதி சரவணபவன்(பக்-259)
13. மேலது - (பக்-259)
14. கொட்டியாபுரப்பற்று வரலாறு (2003) - எம்.எ.சமது (பக்-197)
15. மேலது - (பக்-241)

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. சம்பூர் பிரதேசத்தின் தொன்மை (2013)
(கிழக்கு மாகாண இலக்கிய பரிசு பெற்றது)

2. அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலய வரலாறும் மகிமைகளும் (2014)

3. கொட்டியாபுரத்து சிங்கம் (2015)

4. நிலக்கரி மின் ஆலையில் சம்பூர்? (2016)

5. கொட்டியாரபுரப்பற்று முதுசங்கள் (2016)
(கிழக்கு மாகாண இலக்கிய பரிசு பெற்றது)

6. சம்பூர் இடப்பெயர்வும் மீள்குடியேற்றமும் (2017)
(கிழக்கு மாகாண இலக்கிய பரிசு பெற்றது)

7. தென் திருமலை தேசம் - பாகம் 01 , 02 (2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றும் மாறுபடாத கடந்தகால நிகழ்ச்சிகளை பற்றி விளக்குவதே வரலாறு என அரிஸ்டாட்டில் கூறுவார். உலக வரலாற்றில் தமிழ்மொழியும், தமிழ் இனமும் அன்றுதொட்டு வீரமும், ஞானமும், செல்வமேன்மையும் நிறைந்த உன்னதமான வரலாறுகளைக் கொண்டவை. ஈழத்தமிழர் வரலாறும் அத்தகையதே.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் செறிந்து வாழ்ந்த மூதூர் பிரதேசத்தின் கடந்த கால வரலாறுகளின் மீட்டுருவாக்கத்தின் ஓர் பகுதியாக தென்திருமலை தேசம் பாகம் – 03 என்னும் இந்நூல் அமைகின்றது. ஏலவே இதன் முதலாம் இரண்டாம் பாகங்கள் வெளிவந்த நிலையில் தற்போது மூன்றாம் பாகம் அதன் தொடர்ச்சியை பூரணப்படுத்துகிறது.

ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வுத் துறைகளில் சம்பூரைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி அ.ஸதீஸ்குமாரின் வருகை முக்கியமானது. பெரிதும் ஆய்வாளர்களால் கவனம் செலுத்தப்படாமல் இருந்த மூதூர் பிரதேசத்தின் வரலாற்று தகவல்களை அயராத முயற்சியால் தொடர்ச்சியாக பல ஆய்வு நூல்கள் ஊடாக வெளிப்படுத்தி ஆவணப்படுத்திய சிறப்பு அவருக்குரியது. துறைசார் புலமையும் பொறுமையும், தேடலும் தொன்மத்தின் மீதான காதலும் ஒருங்கு சேர வாய்க்கப் பெறுபவர்களால் மட்டுமே வரலாற்றை எழுதமுடியும். வரலாறு தன் பக்கங்களில் அ.ஸதீஸ்குமார் வைத்தியராக அன்றி ஓர் வரலாற்றாய்வாளனாக பதிவு செய்யவே விருப்பும் முனைப்பும் கொண்டுள்ளது. இந்நூலாசிரியரின் ஆய்வு நூல்களை புறந்தள்ளி யாரும் இனி மூதூர் பிரதேசத்தின் வரலாறுகளை எழுதி விடமுடியாது. மூதூர் பிரதேசத்தை மையப்படுத்தி எதிர்காலத்தில் வரப்போகும் விரிவான ஆய்வுகளுக்கெல்லாம் இனி வைத்தியகலாநிதி அருமைநாதன் ஸதீஸ்குமாரே திறவுகோல் காலமும் இதையே கருதிற்று என்க.

அன்புடன்
கவிஞர் ப. சுஜந்தன்
சம்பூர்



9 789554 470330

Ben Vision Printers & Publication
Trincomalee - 0769000035

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org